அப்போஸ்தலர் 2ன்

# எழுப்புதல்



ஆதி சபையில்
தேவ ஆவியானவரின்
செயல்பாடுகள்

எப். வெயின் மேக் லீயோட்

அப்போஸ்தலர் 2ன்

# எழுப்புதல்

ஆதி சபையில்
தேவ ஆவியானவரின்
செயல்பாடுகள்

எப். வெயின் மேக் லியோட்

"THE REVIVAL OF ACTS 2"
by F. Wayne Mac Leod

*Tamil Edition*
Edition 1, Printing 1
1,000 Copies

Copyright © by Wayne Mac Leod

Originally Published in English as
"The Revival of Acts 2" *by*
Light to My Path Book Distribution
Sydney Mines, N.S. Canada
www.ltmp.ca

All Rights Reserved.

No part of this publication may be reproduced or transmitted
in any form or by any means, electronic or mechanical,
including photocopying, recording, or any information storage
and retrieval system, without permission in writing from
the author and publisher.

Unless otherwise indicated, Scripture quotations are taken
from theTamil Holy Bible

Translation, Publishing & Distribution by
MARANATHA PUBLISHING COMPANY
MaranathaPublishers@gmail.com

Printed by Alleluia Print Services
www.AlleluiaPrints.com

# பொருளடக்கம்


1. அறிமுகம் ........................................ 5
2. ஆவியானவரின் வாஞ்சை ............................ 11
3. விசுவாசிகளின் அர்ப்பணிப்பு ........................ 19
4. அப்போஸ்தலரின் உபதேசம் ........................ 25
5. ஐக்கியம் ........................................ 35
6. அப்பம் பிட்குதல் .................................. 47
7. ஜெபம் ........................................ 59
8. பிரமிப்பு ........................................ 69
9. அற்புதங்களும் அடையாளங்களும் ................ 77
10. பொதுவாய் அநுபவித்தார்கள் .................... 95
11. ஒன்றாக கூடினார்கள் ................................107
12. இரட்சிக்கப்பட்டார்கள் ................................117

# 1
# அறிமுகம்

ஆதி திருச்சபைக்கு அந்த நாட்கள் ஆச்சரியமான சவாலான நாட்களாக இருந்தது. விசுவாசிகள் முற்றிலும் புதிய ஒரு எல்லைக்குள்ளாக காலடி எடுத்து வைக்கிறார்கள். அவர்கள் பல வருட அனுபவங்களை பெற்றிருக்கவில்லை.புதிதாக ஆரம்பிக்கப்பட்டஇந்த சபைக்கான கிறிஸ்துவின் செயல்கள் மற்றும் தேவனின் திட்டம் என்பவைகளைப் பற்றிய அவர்களின் புரிந்து கொள்ளல்தற்பொழுதுதான் அவர்கள் சிந்தையில் உருவாகிக் கொண்டிருக்கின்றது. அவர்களுடைய போதகர்களுக்கு பயிற்சி கொடுப்பதற்காக வேதாகம பள்ளிகள் இருக்கவில்லை. சபை கட்டிடமோ அல்லது சபைக்கான நிகழ்ச்சிகளோ அவர்களிடம் இருக்கவில்லை. பல நேரங்களில் அவர்களைச் சுற்றியிருந்தவர்களால் தவறாக புரிந்து கொள்ளப்பட்டார்கள்.

அவர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்களாயிருந்தார்கள். யூத பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள் என்று அப்போஸ்தலர் 2:1 நமக்குச் சொல்லுகின்றது. அன்று கூடினவர்களுக்கு அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று தெரியவில்லை. இயேசு அவர்களை விட்டு போகுமுன்னர் “நீங்கள் பரிசுத்த ஆவியால் அபிஷேகிக்கப்படும் வரை எருசலேமில் காத்திருங்கள்” என்று மட்டுமே சொல்லியிருந்தார்.

> 4.அன்றியும் அவர் அவர்களுடனே கூடிவந்திருக்கும் போது, அவர்களை நோக்கி: யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்.

*5. ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார். (அப்போஸ்தலர் 1:4-5)*

இவைகளின் அர்த்தம் என்னவென்று அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. ஆனாலும் அவர்கள் காத்திருந்தனர்.

இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால், இவர்கள் மிக எளிமையானவர்கள். இவர்களின் தலைவர்களில் அநேகர் மீன் பிடிப்பதை தொழிலாக கொண்டவர்கள். இந்த தலைவர்கள் மூன்று வருடங்களை இயேசுவுடன் செலவழித்தவர்கள், ஆனாலும் தங்கள் விசுவாசத்தில் பல போராட்டங்களோடிருந்தவர்கள். இயேசுவை சிறைபிடித்த போது, தங்கள் ஜீவனை காப்பாற்றிக் கொள்ள அவரை விட்டு விட்டு ஓடினவர்கள். (பார்க்க மத்தேயு 26:31; மாற்கு 14:50). இவர்களில் மிக தைரியமாக பேசக்கூடிய பேதுரு, கர்த்தரை மூன்று தரம் மறுதலித்தவன். (பார்க்க மத்தேயு 26:33-35) தோமா, இயேசு மரணத்திலிருந்து உயிர்தெழுந்தார் என்று விசுவாசிக்க மறுத்தது மட்டுமன்றி அவருடைய கரத்தில் ஆணிகள் அடிக்கப்பட்ட அடையாளத்தை காணாமல், சிலுவையில் அறையப்பட்ட அவருடைய சரீரத்தில் ஆணிகளால் ஏற்பட்ட காயத்தில் தன் விரலையிட்டு பார்க்காமல் அதை நான் விசுவாசிக்க மாட்டேன் என்றும் சொன்னவன். (பார்க்க யோவான் 20:24-25). யாக்கோபுவும் யோவானும் இயேசு மீண்டும் பரலோகம் சென்றபின்னர் அவருடைய வலது மற்றும் இடது பக்கங்களில் உட்கார அனுமதி கொடுக்குமாறு கேட்டுக்கொண்டவர்கள். (பார்க்க மாற்கு 10:35-39) இப்படிப்பட்ட கனமான இடத்திற்கான வேண்டுதல் மற்ற சீஷர்களால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாததாக இருந்தது. இவ்விதமாக இந்த இரண்டு சீஷரும் கேட்டதை அறிந்த மற்றைய சீஷர்கள் மிகுந்த எரிச்சலடைந்தார்கள் என மத்தேயு 20:24 கூறுகின்றது.

அன்றைய நாட்களில் ஓரிடத்தில் கூடிவந்த சபை ஆவிக்குரிய புரிந்து கொள்ளுதல் மற்றும் ஆவிக்குரிய முதிர்ச்சியில் குறைந்து காணப்பட்டது. மனித ரீதியாக சொல்வதானால் தேவனுடைய இந்த மகத்தான வேலையை வழிநடத்திச் செல்வதற்கு அவர்கள் எவ்வித தகுதியையும் பெற்றிருக்கவில்லை. ஆனாலும், அன்றைய சபை அடுத்து வரும் தலைமுறைகள் பின்பற்றக்கூடிய வல்லமையுள்ள மாதிரி சபையாக அமைந்தது. அவர்களுடைய நாட்களில் தேவனுடைய ஆவியானவர் செய்த கிரியைகளை அவர்கள் கண்டார்கள். அவற்றை நாம் இன்று காண வாஞ்சித்துக் கொண்டிருக்கிறோம். அந்நாட்களிலிருந்த யூதர்கள் பயப்படும் அளவிற்குசபை விருத்தியடைந்து எண்ணிக்கையில் அதிகரிக்க ஆரம்பித்தது.

அப்போஸ்தலர் நடபடிகளில் காணப்படும் சபையின் இந்த மகத்தான வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக காணப்பட்டது தேவ ஆவியானவரின் செயல் என்பதுதான் உண்மை. அப்போஸ்தலர் 2ல் தேவனுடைய ஆவியானவர் சபைக்கு மேல் இறங்கி வந்து மிகப்பெரிய ஆசீர்வாதத்தை சபைக்கு மேல் ஊற்றினார். விசுவாசிகள் வல்லமையினாலும் தைரியத்தினாலும் நிரப்பப்பட்டார்கள். இரட்சிப்பின் செய்தி பரவியது. ஆகவே பேதுரு பெந்தெகோஸ்தே நாளில் பிரசங்கித்த பொழுது மூவாயிரம் பேர்கள் கர்த்தராகிய இயேசுவின் மேல் விசுவாசம் வைத்தார்கள். (அப்போஸ்தலர் 2:41) புதிதாக இரட்சிக்கப்படுகிறவர்கள் சபையில் அனுதினமும் சேர்க்கப்பட்டு வந்தனர். (அப்போஸ்தலர் 2:47)

இந்த ஆரம்ப கால விசுவாசிகளுக்குநிகழ்ச்சி நிரல்களோ சிறப்பு தொழில்நுட்பங்களோ இருக்கவில்லை. மிக எளிமையான, கல்வியறிவு பெறாத விசுவாசிகள் தங்கள் விசுவாச வாழ்க்கையில் போராடிக் கொண்டிருந்ததன் மூலமாக சபையின் வளர்ச்சியடைந்து கொண்டிருந்தது.

அவர்கள் எதையோ திட்டமிட்டதின் விளைவாகவோ, அல்லது ஒழுங்குபடுத்தியதின் விளைவாகவோஇந்த வளர்ச்சி ஏற்படவில்லை. அது அவர்களுக்கே ஆச்சரியமான முறையில் நடைபெற்றது. ஒரு நாளில் சுமார் நூற்றிருபது விசுவாசிகள் ஒரு அறைக்குள் கூடி வந்தார்கள். அடுத்தநாள் மூவா யிரத்திற்கும் அதிகமான விசுவாசிகள் தங்கள் ஆவிக்குரிய வழிநடத்துலுக்காகவும் கவனிப்புக்காகவும் கூடி வந்து கதறிக் கொண்டிருந்தனர். இந்த வியக்கத்தக்க தேவனுடைய செயல் எருசலேமிலிருந்து அதன் சுற்றுப்புறங்களெங்கும் பரவியது. தொலைதூர இடங்களிலிருந்த ஆண்களும் பெண்களும் கூட கிறிஸ்துவைப் பற்றிய செய்தியை கேட்டு தங்கள் வாழ்க்கையை அவர் பக்கமாக திருப்பினர்.

அப்போஸ்தலர் 2:42-47 இலுள்ள பகுதி இஸ்ரவேலில் எழுப்புதல் ஏற்பட்ட அந்நாட்களில் என்ன சம்பவித்தது என்பதனைப் பற்றிய விளக்கமாகும். இவ்வசனங்களில் பரிசுத்த ஆவியானவர் முதல் விசுவாசிகளின் வாழ்க்கையில் என்ன செய்தார் என்றும் பரிசுத்த ஆவியானவரின் இந்த இயக்கம் முன்னேறிச் செல்ல எது உறுதியாக இருந்தது என்பது பற்றியும் சிறு கண்ணோட்டத்தை நாம் பெற்றுக் கொள்ளமுடியும். இந்த பாடத்தை நாம் கற்றுக் கொள்ளும் போது, ஆதி சபைகளில் காணப்பட்ட தேவ ஆவியானவரின் ஆச்சரியமான செயல்களை நாம் கண்டு கொள்ள வேண்டுமென்றும் அத்துடன் இன்றைய நம் காலத்திலுள்ள கிறிஸ்துவின் சபைகளில் அதன் பயன்பாட்டை காணவேண்டுமென்பதே என்னுடைய ஆவல்.

தேவனுடைய இராஜ்ஜியத்தின் வேலையை மிகவும் சிக்கலுள்ளதாக நம்மால் உண்டுபண்ன முடியும். சபை நிர்வாக முறை மற்றும் சபை வளர்ச்சிக்கான யுக்திகளில் நம் போதகர்களை பல வருடங்கள் பயிற்றுவிக்கலாம். இவ்விதமான பயிற்சிகள் அனைத்தும் பிரயோஜனமானவைகளாக இருந்தாலும், அப்போஸ்தலர் 2ல் காணப்படும் எளிமையான

முறையில் நடைபெற்றவைகள் நம்மை மிகவும் புத்துணர்ச்சி அடையச் செய்யக் கூடியவைகள். அந்த செயல்பாடுகள் மனிதனால் தோற்றுவிக்கப் பட்டவைகளல்ல. ஆகவே நடைபெற்ற செயல்களின் மூலம் தேவன் மகிமையை பெற்றுக் கொண்டார். சாதாரண மக்கள் தேவனுடைய ஆவியானவருடைய வல்லமையால் அசைக்கப் பட்டு இன்று வரையிலும் நிலைத்திருக்கக் கூடியபலன்களை தரக்கூடிய ஒரு வேலையை நிறைவேற்றி முடித்தார்கள். தொடர்ந்து வரும் சில அதிகாரங்களில் தேவன் தம் மக்களின் வாழ்க்கையில் என்ன செய்தாரென்பதையும் அது அவர்களின் சமுதாயத்தில் தேவனுடைய இராஜ்ஜியத்திற்காக எப்படிப்பட்ட தாக்கத்தை உண்டு பண்ணியது என்பதையும் நாம் பார்க்கப்போகிறோம்.

# 2
# ஆவியானவரின் வாஞ்சை

ஆதி சபை விசுவாசிகள் மிக சாதாரண மக்கள் என்பதை நாம் அறிமுகப் பகுதியில் பார்த்தோம். அவர்களுக்கு எல்லாமே புதிதாக காணப்பட்டது. அவர்களுக்குரிய இறை யியல் கல்வி இன்னும் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. அவர்களில் ஒருவருக்குக் கூட புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட இந்த கிறிஸ்தவ விசுவாச மார்க்கத்தைக் குறித்த எந்த அனுபவமும் இருக்கவில்லை. அவர்களுடைய தலைவர்களில் யாரும் பூரணமானவர்களில்லை. தேவன் அவர்களிடம் என்ன எதிர்பார்க்கிறார் என்பதை புரிந்து கொள்ள மிகவும் சிரமப்பட்டார்கள். ஆனாலும் இந்த ஆதி சபை தேவமகிமைக்காக அக்கினியாக செயல்பட்டது. தேவ ஆவியானவர் மிக வல்லமையாக அசைவாடிக் கொண்டிருந்தார். சுவிசேஷத்தின் செய்தியினால் மக்கள் தொடப்பட்டு அனுதினமும் கிறிஸ்துவின் விசுவாசத்திற்குள் வந்து கொண்டிருந்தனர்.

இந்த பாடத்தின் ஆரம்பத்தில் ஒன்றை நாம் தெளிவாக புரிந்து கொள்வோம். அந்நாட்களில் நடைபெற்றவைகள் அனைத்தும் தேவனுடைய ஆவியானவரின் செயல்பாடாகவே இருந்தன. இம்மகத்தான வளர்சிக்குரிய புகழ் அனைத்தும் அவர் ஒருவருக்கே உரியது. ஒரு அநுபவமுமில்லாத இந்த விசுவாசிகள் இந்த வளர்ச்சிக்கு எவ்வித திட்டமும் தீட்டவில்லை. அவர்கள் ஆச்சரியமாக அதற்குள் கொண்டு செல்லப்பட்டனர். தேவனுடைய ஆவியானவருக்கு செய்வதற்கென்று ஒரு வேலை இருந்தது. அதை செயல்படுத்துவதில் அவர் மிகவும் பிரியமாயிருந்தார்.

அந்நாட்களில் சம்பவித்தவைகளெல்லாம் மனித முயற்சிகளினாலோ அல்லது மனித திட்டங்களினாலோ

நிறைவேற்றப்பட முடியாதவைகளாய் இருந்தன. ஒரே நாளில் மூவாயிரம் பேர் தங்கள் வாழ்க்கையை ஆண்டவராகிய இயேசுவுக்கு அர்ப்பணித்தனர். இதற்கு சற்று சில நாட்களுக்கு முன்னர் தான் ஆண்டவராகிய இயேசு மத தலைவர்களின் விருப்பத்திற்கிணங்க ரோம போர் சேவகர்களால் சிலுவையில் அறையப்பட்டார் என்பதை ஞாபகப்படுத்துகின்றேன். இந்த மத தலைவர்கள் கிறிஸ்து எவற்றுக்கெல்லாம் உறுதியாக நின்றாரோ அவையெல்லாவற்றிற்காகவும் அவரை வெறுத்தார்கள். ஆகவே இந்த புதிய விசுவாசம் வளர்ச்சியடைவதை தடை செய்ய எதையும் செய்வார்கள். தொடர்ந்து வந்த மாதங்களில், இயேசு கிறிஸ்துவின் விசுவாசிகளை வேரறுத்து கொலை செய்வதினால் தேவனுக்கு நன்மை செய்கின்றேன் என உண்மையாக நம்பின சவுல் (பவுல்) போன்றவர்களை சபை சந்திக்க நேர்ந்தது. அப்படியிருந்தும் அந்நாட்களில் அநேக ஜனங்கள் தங்கள் இருதயத்தை ஆண்டவராகிய இயேசுவுக்கு திறந்தது ஆச்சரியமான ஒன்றுதான். இந்த ஆண்களும் பெண்களும் தங்கள் யூதமார்க்க விசுவாசத்தை விட்டு விலகி அவர்கள் நடுவில் சிலுவையிலறையப்பட்ட ஆண்டவராகிய இயேசுவுக்கு தங்களை அர்ப்பணித்தார்கள். இவ்விதமான ஒரு தீர்மானத்தை எடுக்க அவர்கள் தங்கள் உயிரையும் நற்பெயரையும் பணயம் வைத்தார்கள்.

வேறு சில காரியங்களும் அந்நாட்களில் நடந்தன. எல்லா விசுவாசிகளுக்கும் பயமுண்டாயிற்று. (அப்போஸ்தலர் 2:43) தேவனுடைய கிரியைகள் மிக வல்லமையுள்ளதாகவும் ஆச்சரியமூட்டுபவையாகவும் இருந்தபடியால் விசுவாசிகள் தங்கள் கண்முன்னே நடப்பவைகளைப் பார்த்து பிரமித்தார்கள். தங்கள் கனவில் கூட கற்பனை செய்து பார்க்க முடியாத தேவனுடைய கிரியைகள் அவர்கள் மத்தியில் நடைபெற்றது. அப்போஸ்தலர்கள் அற்புதங்களை செய்யும் வல்லமை யினால் நிறைந்திருந்தார்கள். (அப்போஸ்தலர் 2:43) ஜனங்கள்

பார்த்தவைகள் அவர்கள் மத்தியில் தேவ ஆவியானவரின் பிரசன்னம் இருப்பதன் காரணமாக மாத்திரமே நடைபெற்றது.

விசுவாசிகள் தங்களிடமிருந்த அனைத்தையும் விற்று தேவையுள்ளவர்களுக்கு உதவி செய்ய ஆரம்பித்தார்கள். எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பதில் தீவிர மாற்றங்களுண்டானது. தங்களை சுற்றிலுமிருந்த மக்களுக்காக இருதயம் உடைக்கப்பட்டது. தேவ ஆவியானவரின் அலை கிறிஸ்தவ சமுதாயத்திற்குள் மேலும் பாய்ந்து சென்று, உடைப்பை ஏற்படுத்தி அனைவரையும் ஒப்புக் கொடுப்பதற்கான வாஞ்சையை ஏற்படுத்தியதையே அந்நாட்களில் நாம் காண்கிறோம்.

ஐக்கியத்திற்கும் தேவனுடைய வார்த்தையை கற்றுக் கொள்வதற்குமுள்ள தாகம் அதிகமாக இருந்தபடியால் விசுவாசிகள் தினந்தோறும் கூடிவந்தனர். அவர்கள் தேவாலய முகப்பு வாசலில் அல்லது ஒருவருடைய வீட்டில் கூடி வந்து கிறிஸ்து அவர்களுக்காக சிலுவையில் செய்த கிரியைகளை நினைத்துக் கொண்டாடினார்கள். பின் தேவனுடைய வார்த்தை போதிக்கப்படுவதை கேட்டார்கள். அந்தக் கூடுகைகளில் ஜெபத்தில் தேவனை நோக்கி கதறிக் கூப்பிடுவார்கள்; அவருடைய ஆசீர்வாதத்திற்காகவும் வழிநடத்துதலுக்காகவும் அவரை கூப்பிடுவார்கள். அவ்விதமான ஜெபத்தின் பதிலாக பரலோகத்திலிருந்து வல்லமை வெளிப்பட்டது. தேவ ஆவியானவர் அவர்கள் இருதயத்தின் தாகத்தை நிரப்பினார்.

அவர்களைச் சுற்றியிருந்த அவிசுவாசிகள் என்ன நடக்கின்றது என்பதைக் கவனித்தனர். அந்நாட்களிலிருந்த மதத்தலைவர்கள் இந்த “புதிய மதத்தைக்” குறித்து முகஞ் சுளித்தாலும் எருசலேமிலும் அதன் சுற்றுப்புறங்களிலுமிருந்த மக்கள் இந்த முதல் விசுவாசிகள் ஒருவர் மற்றொருவருக்கும் தங்கள் சமுதாயத்திற்கும் காண்பித்த நேர்மையையும்

பக்தியையும் பார்க்க தவறவில்லை. ஆகவே இந்த முதல் கிறிஸ்தவர்கள் அவர்களின் ஆதரவைப் பெற்றார்கள்.

தேவ ஆவியானவரின் செயல் இத்தகையது. அப்படிப்பட்ட வேலையைச் செய்வதில் அவர் பூரிப்படைகின்றார். சிலவேளைகளில் பரிசுத்த ஆவியானவர் தம் ஆசீர்வாதங்களை ஆர்வமற்ற முறையில் நமக்குத் தருகின்றார் என நம்புகின்றோம். ஆனால் அப்போஸ்தலர் 2ல் நாம் காண்பது அப்படிப்பட்டதல்ல. ஆஸ்வால்ட் ஸ்மித் என்பவர் “வல்லமை யினால் தரிப்பிக்கப்படுதல்” என்னும் தனது புத்தகத்தில், பரிசுத்த ஆவியானவர் நம்மை ஆசீர்வதிக்க விரும்புவதைக் குறித்து கீழ்கண்டவாறு குறிப்பிடுகின்றார்:

> “நான் அடிக்கடி பரிசுத்த ஆவியானவரை வலிமைமிக்க நதியாகவும் ஆனால் அந்த நதி அணைக்கட்டினால் அல்லது வேறு ஏதோ தடைகளினால், தடுக்கப் பட்டிருப்பதைப் போலவும் நினைப்பேன். ஒரு மனிதன் அந்த அணைக்கு மேல் நின்று அந்த நதியிடம் ‘நீ தடை யில்லாமல் கடந்து வர வேண்டும்’ என்று வேண்டுதல் செய்வானென்று வைத்துக் கொள்வோம். அது என்ன முட்டாள்தனம்! ‘ஏன் அப்படி கேட்கின்றாய்? அதைத்தானே நானும் செய்ய விரும்புகின்றேன். இவ்விதமான அனாவசியமான வேண்டுதல்களில் உன் பெலனை வீணடிக்காதே. என் சுபாவமே பிரவாகித்து வருவதுதான். நீ விரும்புவதைப் பார்க்கிலும் அதிகமாக பிரவாகித்து வருவதற்கே நான் மிகவும் ஆசையா யிருக்கிறேன்’ என்று அந்த நதி அவனைப் பார்த்து பதில் கூறும்.
>
> ஆம் அதுதான் இரகசியம். உங்கள் வாழ்க்கையிலும் பாவம் என்னும் அணை ஒன்று இருக்கின்றது. வழியில் பல தடைகள் காணப்படுகின்றது. விட்டுக் கொடுக்காமை என்னும் தடை. பாவத்தை சரி செய்யுங்கள். நான் சொல்வது கேட்கின்றதா - பாவம்!

> *ஆற்றுப் படுக்கையை சுத்தம் செய்யும் போது நதி எந்த பிரச்சினையும் இல்லாமல் பிரவாகித்து வரும். பரிசுத்த ஆவியானவர் உங்களை நிரப்பவேண்டுமென்று நீங்கள் கேட்கக் கூட அவசியமில்லை. உண்மையில் சொல்லப்போனால் உங்களை விட்டு அவரைப் பிரித்து வைக்கவே முடியாது. அவர் வந்து அவருடைய சித்தத்தின்படி உங்களை நிரப்புவார். ஓ! அவர் உள்ளே பிவேசிக்க எவ்வளவு வாஞ்சையாக இருக்கிறார்! ஏன் அவருக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுக்கக் கூடாது?" (ஸ்மித், ஆஸ்வால்ட், வல்லமையை தரித்துக் கொள்: 1983 பக்கம் 43)*

தேவனுடைய ஆவியானவர் உங்களை நிரப்ப தயங்குகிறார் என நீங்கள் நம்புகிறீர்களா? எங்களுக்கு புத்துணர்ச்சி அளித்து சபிக்கப்பட்ட எங்கள் தேசத்தை புதுப்பிக்க அவரை நோக்கி கெஞ்ச வேண்டும் என்று நாம் நம்பப் போகின்றோமா? ஆண்டவராகிய இயேசுவுக்கு எங்களை ஒப்புக் கொடுப்பதற்கு அடையாளமாகநாம் முகங்குப்புற விழுந்துகீழ்ப்படிதலுடன் நடந்துஅவருடைய சித்தத்திற்கு அர்ப்பணிப்பது அல்லவா அவருடைய விருப்பம்? நம் தேசத்திலும் மற்றும் உலகமெங்கும்பிதாவாகிய தேவனுக்கு மகிமையுண்டாக உடைத்துக் கொண்டு வர ஆயத்தமாக உள்ள ஒரு பெரிய நதியைப் போல அவர் இருக்கின்றாரல்லவா? இதைத்தான் நாம் அப்போஸ்தலர் 2ல் பார்க்கின்றோம்.

ஆஸ்வால்ட் ஸ்மித்தைப் போலவே தேவ ஆவியானவர் அவருடைய ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக் கொள்ள கூடிய அளவை விட அதிகமாக நம்மை ஆசீர்வதிக்க விருப்பமுள்ள வராக இருக்கிறார் என நானும் விசுவாசிக்கின்றேன். அந்த ஆசீர்வாதங்களுக்கு இடையூறாக இருப்பதே நான்தான். என் வாழ்க்கையில் நான் ஏற்படுத்தியிருக்கின்ற பாவமே தடையாக இருக்கின்றது. ஆஸ்வால்ட் ஸ்மித் காட்டிய படத்தில் ஒரு மனிதன் பாவம் என்னும் அணைக்கு மேல் நின்று கொண்டு

தேவ ஆவியானவர் தன் வாழ்க்கையில் பிரவாகித்து வரவேண்டும் என்று கெஞ்சிக்கொண்டிருக்கின்றான். பரிசுத்த ஆவியானவருக்கு அந்த அணையை உடைக்க முடியும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. தேவனுடைய ஆவியானவர் அந்த அணையை உடைக்க அனுமதி கொடுக்க விருப்பமில்லாமலிருப்பதைப் பார்க்கிலும் அந்த அணை ஒரு தடையாக இருக்க முடியாது.

என் வாழ்க்கையும் சமுதாயத்தையும் நான் கவனிக்கும் பொழுது, தேவ ஆவியானவர் அவ்வாறு உடைப்பை ஏற்படுத்திக் கொண்டு வரவேண்டும் என்னும் தேவை இருப்பதை நான் காண்கின்றேன். தேவன் அப்போஸ்தலர் நடபடிகளில் செய்தவற்றை காணும்போது நான் உற்சாகமடைகின்றேன். இருக்கின்றது. ஆனாலும் அவருடைய கிரியைகளை என் வாழ்க்கையில் தடுத்துக் கொண்டிருப்பது என்ன என்று கேட்பது எனக்கு சவாலாக இருக்கின்றது. இன்னும் நான் ஒப்புக் கொடுக்க வேண்டியவைகள் என்ன? இன்னும் வெளிப்படுத்தப்பட வேண்டிய மற்றும் அறிக்கை செய்யப்படவேண்டிய பாவங்கள் என்ன?

கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக நம் வாழ்க்கையையும் நம் சமுதாயத்தையும மறுரூபமாக்குவது தேவனுக்கு மகிழ்ச்சி யானதல்லவா? இவ்வாறு நடைபெறாமல் தடைசெய்வது எது? இதற்கான பதில் 2 நாளாகமம் 7:14 இல் காணப்படுகின்றது.

> “என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன”.

தேவனுடைய ஜனங்கள், ஆவியானவர் தங்கள் தேசத்தின் மீது இவ்விதமாக ஊற்றப்பட வேண்டுமென்று விரும்பினால்

அவர்கள் தங்களைத்தாழ்த்தி ஜெபிக்கவேண்டுமென்று இந்த வசனத்தில் தேவன் மிகத் தெளிவாக கூறியுள்ளார். தாழ்த்துவது என்பது பாவத்தை இனம் கண்டு கொள்வதுடன் தொடர்புள்ளது. ஜெபம், பாவத்தை அறிக்கை செய்வது மற்றும் தோல்விகளை ஒப்புக் கொள்வது என்பவைகளுடன் செய்யப்படும் தாழ்மையின் ஜெபமாகும். தேவனுடைய ஜனம் அவர் முகத்தை தேடி தங்கள் பொல்லாத வழிகளை விட்டு திரும்ப வேண்டும். அதாவது அவர்கள் தங்கள் பாவங்களை மறுதலித்து தேவனிடம் சரணடைய வேண்டும்.

தேவ ஆவியானவர் என்ன செய்ய விரும்புகின்றார் என்பதன் கண்ணோட்டத்தை அப்போஸ்தலர் 2 நமக்குத் தருகின்றது. இன்றும் அவரின் வாஞ்சை இதுவே என நான் விசுவாசிக்கின்றேன். ஆனாலும், இந்த ஆச்சரியமான கிரியைக்கு மிகப்பெரும் தடையாக இருப்பது நம் பாவங்களை அவரிடம் ஒப்புக் கொடுக்க மறுப்பதுதான். தேவ ஆவியானவரின் செயல்பாட்டை திட்டமிடுதல் மற்றும் அத்திட்டத்திற் கானவைகளை நடைமுறைப்படுத்த முயற்சித்தல் ஆகியவற்றை செய்வதற்குப் பதிலாக, நாம் நதி புரண்டுவரும் ஆற்றுப் படுக்கையை சுத்தம் செய்து தடுப்பாக இருக்கும் அணைகளை அகற்ற நேரத்தை எடுப்போம். இது நம் தனிப்பட்ட வாழ்க்கையில் ஆரம்பிக்கப்பட வேண்டும். இப்பாடத்தை நாம் தொடரும் போது, உங்கள் வாழ்க்கையில் அவருடைய மிகப்பெரிய கிரியைக்குத் தடையாக இருப்பது என்ன என்பதை தேவ ஆவியானவர் காண்பித்துத் தரும்படி கேளுங்கள்.

## கவனத்திற்கு:

# ஆதி சபையிலே பரிசுத்த ஆவியானவர் என்ன செய்தார்? அவருடைய பிரசன்னம் இருந்ததற்கு ஆதாரம் என்ன?

# தேவனின் இந்த அசைவு ஆதி சபையினரால் திட்டமிடப்பட்டு ஏற்பாடு செய்யப்பட்டதா? இதனை விளக்கவும்

# இன்று ஆவியானவரின் கிரியைகளுக்கு தடையாக இருப்பவை எவை?

பாவத்தை சரியாக கையாளாமல் தேவனுடைய ஆவியானவரின் நடவடிக்கையை திட்டமிட நாம் முயற்சிக்கின்றோமா?

# தேவன் தம்முடைய ஆசீர்வாதத்தை நம்மீது ஊற்ற தயக்கம் காட்டுகின்றாரா? இன்று ஏன் நம்மால் இன்னுமதிக ஆசீர்வாதங்களையும் வல்லமையையும் காண முடியவில்லை?

## ஜெபத்திற்காக:

# நம் மத்தியில் அசைவாடுவதற்கும் கிறிஸ்துவின் சாயலுக்கு ஒத்ததாக நம்மை மறுரூபமாக்கவும் ஆவலுள்ளவராக இருப்பதனால்தேவ ஆவியானவருக்கு நன்றி சொல்லுவோம்.

# மனப்பூர்வமாய் அவரிடத்தில் ஒப்புக் கொடுக்காத பகுதிகளைக் குறித்து வெளிப்படுத்தும்படி தேவனிடத்தில் கேளுங்கள்.

# தேவன் இன்னும் ஆழமாக உங்களில் அசைவாட ஜெபியுங்கள். என்ன விலை கொடுத்தாவது அவருடைய கருவியாக பயன்படுத்த உங்களை புதிதாக அர்ப்பணம் செய்ய நேரமெடுங்கள்.

# 3
# விசுவாசிகளின் அர்ப்பணிப்பு

*அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். (அப்போஸ்தலர் 2:42)*

அப்போஸ்தலர் 2ல் தேவ ஆவியானவர் ஆதி விசுவாசிகள் மத்தியிலே அசைவாட விருப்பமுள்ளவராயிருந்தார் என்பதை ஏற்கனவே பார்த்தோம். அன்று ஏற்பட்ட மிகப்பெரிய விழிப்புணர்வு முற்றிலும் தேவ ஆவியானருடைய செயல்பாடாக இருந்த பொழுதிலும், தேவ ஜனங்களும் அதில் முக்கிய பங்கு வகித்தார்கள்.

ஆதி விசுவாசிகள் நான்கு கொள்கைகளுக்கு தங்களை உறுதியாக அர்ப்பணித்திருந்தார்கள் என அப்போஸ்தலர் 2:42 கூறுகின்றது. தொடர்ந்து வரும் அதிகாரங்களில் அவற்றை விளக்கமாக நாம் ஆராய்வோம். அவைகள் அந்நாட்களில் தேவ ஆவியானவரின் கிரியைகளுடன் சம்பந்தப்பட்டிருப்பதனால் இப்பொழுது அவற்றை நாம் இங்கே குறிப்பிடுவது அவசியமாகின்றது. அன்றைய எழுப்புதலின் நாட்களில் எருசலேமிலிருந்த விசுவாசிகள் கீழ்காணும் கொள்கைகளுக்கு தங்களை உறுதியாக அர்ப்பணித்திருந்தார்கள்:

1. அப்போஸ்தலருடைய உபதேசம்
2. ஐக்கியம் (அந்நியோன்னியம்)
3. அப்பம் பிட்குதல்
4. ஜெபம்

42ம் வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தையைக் கவனிக்கவும். ஆங்கில NIV மொழிபெயர்ப்பில் devoted என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் அர்ப்பணிப்பு,ஒட்டி ஒழுகு, கரிசனை காண்பி அல்லது விடாமுயற்சியுடன் ஒன்றைப் பின் தொடர் என்பதாகும். இதுதான் ஆதி சபையில் நடைபெற்றது. தேவ ஆவியானவர் அவர்கள் மத்தியில் அசைவாடிய பொழுது,தேவனுடைய ஜனங்கள் தேவ வார்த்தையின் உபதேசங்களுக்கும், ஐக்கியத்திற்கும், அப்பம் பிட்குதலின் மூலம் கிறிஸ்துவை நினைவு கூறுதலுக்கும் மற்றும் ஜெபத்திற்கும் தங்களை முற்றிலும் அர்ப்பணித்தார்கள்.

சாத்தான் அந்த நாட்களில் நடைபெற்றவைகளை பார்த்து வெறுப்படைந்தான் என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். எருசலேமில் அந்நாட்களில் ஆவிக்குரிய யுத்தமொன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது என நாம் நிச்சயமாக கூறலாம். எழுப்புதல் சரித்திரத்தில், சில நேரங்களில் சபையின் கவனம் திசைதிருப்பப்பட்டு தவறான வழியில் நடத்தப்பட்டதை காணமுடியும். சில நேரங்களில் கிடைக்கப் பெற்ற அனுபவங்களும் அற்புதங்களும் தேவனுடைய வார்த்தை தெளிவாக போதிக்கப்படுவதை விட அதிக முன்னுரிமை பெற்று விடக்கூடும். சில நேரங்களில் கிறிஸ்துவின் சரீரத்தில் எதிரியானவன் விசுவாசிக்கும் மற்றொரு விசுவாசிக்குமிடையில் பிரிவினையை உண்டாக்குவான். மிகப்பெரிய எழுப்புதலின் காலத்தில் சத்துரு பல்வேறு விதங்களில் தாக்கத்தை உண்டு பண்ணக் கூடும். அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் சபை பாதுகாக்கப்படுவது எவ்வாறு? அது வசனம் 42ல் கூறப்பட்டுள்ள நான்கு கொள்கைகளிற்கும் தங்களை உறுதியாக அர்ப்பணித்து கொள்வதன் மூலமாக மட்டுமே.

அப்போஸ்தலரின் உபதேசம், ஐக்கியம், அப்பம் பிட்குதல் மற்றும் ஜெபம் ஆகியவற்றில் உறுதியாக தரித்திருந்ததன் மூலமாக இந்த ஆண்களும் பெண்களும் தங்கள் விசுவாசத்தில்

பெலனடைந்து, தேவன் அவர்கள் செல்ல வேண்டுமென்று தீர்மானித்திருந்த பாதையிலே வழிநடத்தப்பட்டார்கள். இந்நான்கு கொள்கைகளும் அவர்கள் தேவனோடு இசைந்திருக்க உதவியதுடன் அவருடைய நோக்கத்திலிருந்து திசைமாறி விடாதபடிக்கும் பாதுகாத்துக் கொண்டது.

பரிசுத்த ஆவியானவரை நாம் துக்கப்படுத்திவிட முடியும் என வேதம் நமக்குக் கற்றுத் தருகின்றது. எபேசியர் 4:29-30 ல் பவுல் எழுதியுள்ளதைக் கவனியுங்கள்:

> *29 கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்.*
>
> *30 அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்.*

நம் மாம்சத்திற்கு நம்மை ஒப்புக் கொடுப்பதன் மூலம் நாம் தேவனையும் நம் வாழ்க்கையில் பரிசுத்தாவியானவரின் கிரியைகளையும் துக்கப்படுத்திவிட முடியும் என இப்பகுதியின் மூலம் கண்டு கொள்ளலாம். தேவனுடைய ஆவியை துக்கப்படுத்துவதென்பது அவர் நம் வாழ்க்கையில் என்ன செய்ய விரும்புகிறாரோ அதற்கு எதிர்த்து நிற்பது என்பதாகும்

2 இராஜாக்கள் 17:16-20 வரையுள்ள பகுதி மிகச் சவாலான ஒரு சம்பவத்தை குறிப்பிடுகின்றது. இஸ்ரவேல் மற்றும் யூதா தேசத்திலுள்ளவர்கள் தேவனுக்கு விரோதமாக செயலபட்டதைக் குறித்து இப்பகுதி கூறுகின்றது:

> *16 தங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளையெல்லாம் விட்டுவிட்டு, இரண்டு கன்றுக்குட்டிகளாகிய வார்ப்பித்த விக்கிரகங்களைத் தங்களுக்கு உண்டாக்கி, விக்கிரகத் தோப்புகளை நாட்டி,*

*வானத்தின் சேனைகளையெல்லாம் பணிந்துகொண்டு, பாகாலைச் சேவித்தார்கள்.*

*17 அவர்கள் தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் தீக்கடக்கப்பண்ணி, குறிகேட்டு நிமித்தங்கள் பார்த்து, கர்த்தருக்குக் கோபமுண்டாக்க அவர் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்கிறதற்குத் தங்களை விற்றுப் போட்டார்கள்.*

*18 ஆகையால் கர்த்தர் இஸ்ரவேலின்மேல் மிகவும் கோபமடைந்து, அவர்களைத் தம்முடைய முகத்தைவிட்டு அகற்றினார்; யூதாகோத்திரமாத்திரமே மீதியாயிற்று.*

*19 யூதா ஜனங்களும் தங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளைக் கைக்கொள்ளாமல் இஸ்ரவேல் உண்டாக்கின வழிபாடுகளில் நடந்தார்கள்.*

*20 ஆகையால் கர்த்தர் இஸ்ரவேல் சந்ததியாரையெல்லாம் புறக்கணித்து, அவர்களைத் தமது முகத்தைவிட்டுத் தள்ளுமட்டாக ஒடுக்கி, அவர்களைக் கொள்ளைக்காரர் கையில் ஒப்புக்கொடுத்தார்.*

*2 இராஜாக்களிலுள்ள இப்பகுதியின் மூலம் நாம் பல விவரங்களை காணக்கூடும். இஸ்ரவேலும் யூதாவும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களாக இருந்தபொழுதிலும் தங்கள் முதுகை அவருக்கு காண்பித்து மற்றைய தெய்வங்களை அவர்கள் தேடினார்கள் என்பதனை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.தேவன் அவர்களை தடுத்து நிறுத்தவில்லை. தேவனுடைய ஜனங்கள் விக்கிரகங்களுக்கு முன்பாக வணங்கி வானத்தின் நட்சத்திரங்களை சேவித்தார்கள். தேசத்தில் தெய்வங்கள்என சொல்லப்பட்ட போலியான தெய்வங்களின் பலிபீடத்தில் தங்கள் குழந்தைகளை பலியாக செலுத்தினார்கள். மந்திரவாதங்கள் மற்றும் பிசாசின் பிற கிரியைகளில் ஈடுபட்டார்கள். இதன் விளைவு மிக பாதகமாக இருந்தது.தேவன்*

தன் முகத்தை(பிரசன்னத்தை) அவர்களை விட்டு விலக்கினார் (வசனம் 18). அவர்களைப் புறக்கணித்தார் (வசனம் 19) அவர்களை ஒடுக்கும்படி சத்துருக்களின் கையிலே அவர்களை ஒப்புக் கொடுத்தார்(வசனம் 20). கடைசியாக அவருடைய சமூகத்தை விட்டே அவர்களைத் தள்ளிவிட்டார்(வசனம் 20).

இதன் மூலம் நமக்கு கடுமையான எச்சரிப்பொன்று கொடுக்கப்படுகின்றது. தேவ ஆவியானவர் நம் மத்தியில் அசைவாடுவதில் பிரியமாயிருக்கிறார். ஆனால் அவருடைய கிரியைகளுக்கு ஒப்புக் கொடுக்க நாம் விருப்பமில்லாமல் இருப்பது அவரை துக்கப்படுத்தும். 2 இராஜாக்கள் 17ல் தேவ ஆவியானவர் துக்கப்பட்டார்,ஆகவே அவர்களை விட்டு ஒதுங்கினார். தம் முகத்தை அவர்களுக்கு மறைத்தார். அவருடைய சமூகத்தை விட்டு அவர்களை தள்ளினார்.

ஆதி சபையிலே தேவ ஆவியானவர் அசைவாடிய பொழுது, விசுவாசிகள் அவருடைய கிரியைகளுக்கு தங்களை ஒப்புக் கொடுத்துவார்த்தையின் உபதேசத்திலும், ஐக்கியத்திலும்அப்பம் பிட்குதலிலும் ஜெபத்திலும் உறுதியாய் தரித்திருந்தார்கள். இதன் மூலம்,சபை தேவ தயவையும் ஆசீர்வாதத்தையும் தொடர்ந்து அறிந்து கொள்ள ஆரம்பித்தது.

சத்துருவால் மிக எளிதாக ஆதி சபையைதிசை திருப்பி யிருக்க முடியும். ஏனென்றால் அங்கிருந்த ஆண்களும் பெண்களும் அனுபவமில்லாதவர்கள். அவருடைய சித்தத்தையும் நோக்கத்தையும் புரிந்து கொள்வதில் குறைவுள்ளவர்கள் ஏனென்றால் கிறிஸ்துவின் விசுவாசத்திற்குள் அப்பொழுதுதான் வந்திருந்தார்கள். அவர்கள் தேவனுக்கு தங்களை ஒப்புக் கொடுத்து முக்கிய கொள்கைகளில் உறுதியாய் தரித்து நின்றபொழுது அவர்கள் பெலப்படுத்தப்பட்டு அந்நாட்களில் செயல்பட்ட ஆச்சரியமான தேவ ஆவியானவரின் கிரியைகளுக்கு ஆயத்தமாயிருந்தார்கள்.

## கவனிப்பதற்கு:

*# எருசலேமிலிருந்த சபை தங்களை அர்ப்பணித்த அப்போஸ்தர் 2ல் காணப்படும் நான்கு முக்கிய ஆவிக்குரிய கொள்கைகள் என்ன?*

*# தேவ ஆவிக்கு நாம் எதிர்த்து நிற்க முடியுமா? அப்படி நாம் எதிர்த்து நின்றால் அதன் விளைவு என்னவாக இருக்கும்?*

*# இப்பகுதியில் குறிப்பிட்டுள்ள நான்கு கொள்கைகளும் எவ்வாறு நம்மை தேவனுடன் இசைந்தவர்களாகவும் அவர் நம் வாழ்க்கையில் என்ன செய்ய விரும்புகின்றாரோ அதற்கேற்றபடியாகவும் நம்மை வைத்துக் கொள்ள முடியும்?*

*# அப்போஸ்தலர் 2:42ல் குறிப்பிட்டுள்ள கொள்கைகளை மீண்டும் பார்க்கவும். இக்கொள்கைகளுக்கு உங்களை அர்ப்பணித்திருக்கிறீர்களா?*

## ஜெபத்திற்கு:

*# தேவன் உங்கள் வாழ்க்கையில் என்ன செயது கொண்டிருக்கிறார்? அவர் உங்களை கிறிஸ்துவின் சாயலுக்கு ஒத்தவாறு மறுரூபமாக்க முயற்சிக்கும் போது பரிசுத்த ஆவியின் கிரியைகளுக்கு ஒப்புக் கொடுக்க உங்களுக்கு கிருபையைத்தர ஜெபிக்கவும்.*

*# அவருடைய வார்த்தைக்கும், சக விசுவாசிகளின் ஐக்கியத்திற்கும் கிறிஸ்துவை நினைவு கூறுவதற்கும், மற்றும் ஜெபத்திற்கும் உங்களை இன்னும் அர்ப்பணிக்க தேவன் உதவி செய்யுமாறு ஜெபிக்கவும்.*

*# தேவனுடைய ஆவியானவர் உங்களில கிரியை செய்ய வாஞ்சையாக இருப்பதற்காக அவருக்கு நன்றி செலுத்த சில நிமிடங்கள் எடுத்துக் கொள்ளவும்.*

# 4

# அப்போஸ்தலரின் உபதேசம்

*அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்தில்... உறுதியாய் தரித்திருந்தார்கள் (அப்போஸ்தலர் 2:42)*

கடந்த இரண்டு அதிகாரங்களில், சபையைக் குறித்த பரிசுத்த ஆவியானவரின் வாஞ்சை மற்றும் சில முக்கிய ஒழுக்கங்களுக்கு சபை தன்னை அர்ப்பணித்ததை குறித்தும் ஆராய்ந்தோம். இந்த பகுதியில், அந்த ஆவிக்குரிய உபதேசங்களை மேலும் கவனிக்க நேரமெடுப்போம். ஆதி சபை தன்னை அர்ப்பணித்திருந்த முதல் ஒழுக்கம் அப்போஸ்தலரின் உபதேசம் என்பதாகும்.

இதில் முதலில் நாம் கவனிக்கவேண்டிய வார்த்தை அர்ப்பணம் என்பதாகும். (தமிழ் வேதாகமத்தில் உறுதியாய் தரித்திருந்தார்கள் என்னும் வார்த்தைக்கு ஆங்கில வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ள வார்த்தை அர்ப்பணித்திருந்தார்கள் என்பதாகும்) இதன் அர்த்தம் என்னவென்றால் ஏதாவது ஒருகாரியத்தை மிக உறுதியாக பிடித்துக் கொள்ளுதல் என்பதாகும். இதற்கு விடாமுயற்சி அல்லது ஒரு தீராத பாதுகாப்பு என்றும் அர்த்தம் கொள்ளலாம். இதனை இன்னும் சற்று விபரமாக கவனிக்க நேரமெடுப்போம்.

ஆதி சபை அப்போஸ்தலருடைய உபதேசத்திற்கு தங்களை அர்ப்பணித்திருந்தார்கள். இங்கே தங்களை அர்ப்பணித்திருந்தார்கள் என்பது அவர்கள் போதித்த உபதேசத்திலுள்ள சத்தியங்களுக்கு தங்களை ஒப்புக் கொடுத்து அதற்கு முற்றிலும் கீழ்ப்படிந்த வாழ்க்கை வாழ்ந்தார்கள் என்பதாகும்.

முதலாவதாக, ஆதி சபை அப்போஸ்தலர்களின் போதனை சத்தியமானவைகள் என விசுவாசித்தார்கள். அப்போஸ்தலர்கள் தங்கள் உபதேசங்களை ஆண்டவர் இயேசுவிடமிருந்து பெற்றுக் கொண்டார்கள் என்பதை புரிந்திருந்தார்கள். அத்துடன் இயேசு இவர்களுக்கு கொடுத்த சத்தியங்களை கற்றுக் கொடுப்பதற்காக பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்பட்டிருந்தார் என்பதனையும் புரிந்திருந்தார்கள் (பார்க்க யோவான் 14:25-26). அப்போஸ்தலரின் உபதேசம் என்பது மனிதனால் உருவாக்கப்பட்டதல்ல. அது சபைக்கான தேவனுடைய சித்தமும் நோக்கமுமாக இருந்தது. ஆதி சபை இதை முழு இருதயத்துடனும் விசுவாசித்தது.

இரண்டாவதாக அப்போஸ்தலர்கள் போதித்தவைகளை கீழ்ப்படிதலோடு பின்பற்ற தெளிவான தீர்மானமெடுத்து ஆதிசபை இந்த உபதேசங்களுக்கு தன்னை அர்ப்பணித்திருந்தார்கள். ஒரு கணவன் தன் மனைவிக்கு உண்மையுள்ளவனாக வாழ முடியாது என்றால் அவனால் தன் மனைவிக்கு அர்ப்பணிப்புடன் வாழ முடியாது. வேதவார்த்தைகள் சத்தியமுள்ளவைகளென்று விசுவாசித்தும் அந்தவார்த்தை போதிக்கின்றவைகளுக்கு உண்மையுள்ளவனாய் நடக்காமலிருப்பதற்கு சாத்தியமுண்டு. அப்போஸ்தலருடைய உபதேசத்திற்கு அர்ப்பணிப்பதற்கு ஆதி சபை அவர்களுக்கு போதிக்கப்பட்ட சத்தியங்களுக்கு கீழ்ப்படிந்து வாழ உட்கிடையான ஒப்புக் கொடுத்தல் அவசியமாக இருந்தது.

ஆதி சபையின் அர்ப்பணிப்பிற்கு மூன்றாவது பரிமாணம் ஒன்று இருந்தது. ஒரு மேய்ப்பன் தன் ஆடுகளுக்காக அர்ப்பணித்து வாழ்வதை சற்று கவனித்து பாருங்கள். ஆடுகளுக்கான மேய்ப்பனின் அர்ப்பணத்தை அவன் தன் ஆடுகளின் மேல் எவ்வளவு கரிசனையாக இருக்கின்றான் என்பதிலிருந்து கண்டு கொள்ள முடியும். ஆடுகளுக்கு எதுவும் நேர்ந்து விடாதபடி தன் ஜீவனைக் கொடுத்தாவது

பாதுகாப்பான். அங்கிருந்த மக்களில் அப்போஸ்தலருடைய போதகத்தை எதிர்ப்பவர்கள் இருந்தார்கள். ஒரு உண்மையான கிறிஸ்தவன் விருத்தசேதனம் பண்ணப்பட்டவனாக இருக்க வேண்டும் என நம்பின மக்கள் அங்கே இருந்தார்கள். ஆரம்பத்திலிருந்தே சாத்தான் தேவனுடைய வார்த்தை யிலுள்ள சத்தியத்தை நீர்த்துப்போகப் பண்ண அல்லது அவன் என்ன சொல்ல விரும்பினானோ அதை சொல்லும்படி திருப்ப முயற்சித்தான். அப்போஸ்தலருடைய உபதேசத்திற்கு தங்களை அர்ப்பணித்தவர்கள் தவறாக மொழிபெயர்த்தல் மற்றும், தவறுகளிலிருந்து சத்தியத்தை பாதுகாக்க உறுதியெடுத்தவர்களாக இருந்தார்கள். இது ஒரு அடிப்படை போதனையாக இருந்தாலும் இன்றைய நாட்களில் அதன் முக்கியத்தை வலியுறுத்துவது மிக அவசியமாக இருக்கின்றது. நம் எதிரியாகிய சாத்தான் தேவனுடைய வார்த்தையின் உபதேசத்திலிருந்து நம் கவனத்தை திசைதிருப்புவதில் மிக தீவிரமாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றான். வேதத்தை சந்தேகப்பட வைத்துவிட்டால், எதையும் செய்து விடலாம் என அவனுக்கு தெரியும். நம் காலத்திலுள்ள பல சபைகள், ஆதி சபைகள் அப்போஸ்தலருடைய உபதேசத்திற்கு அர்ப்பணிப்பணித்தது போல தங்களை அர்ப்பணிக்கத் தவறி விட்டபடியால் பலவீனமடைந்து காணப்படுகின்றது.

இந்த சபைகள் அப்போஸ்தலருடைய உபதேசத்திற்கு தங்களை அர்ப்பணிக்காதபடியால், பரிசுத்தாவியானவர் அவர்களை விட்டு தம் சமூகத்தை எடுத்துக் கொள்ளுமளவிற்கு துக்கப்பட்டுள்ளார் என நான் மிக தைரியமாக சொல்லக் கூடும். தம் சபையைக் குறித்து தேவனுக்கு ஒரு நோக்கமுண்டு. அந்த நோக்கம் என்றுமே மாறாதது. அவருடைய முழுமையான ஆசீர்வாதத்தை நாம் காணவேண்டுமானால் ஆதி சபையில் தேவ வார்த்தையின் மேல் இருந்த அர்ப்பணத்தை நாமும் பெற்றிட வேண்டும். வேதவார்த்தைகள் எல்லாக் காலத்திற்கும் எல்லாக்

கலாச்சாரத்திற்கும் உரியதாக தேவனிடமிருந்து வந்தவைகள் என நாம் விசுவாசிக்க வேண்டும். வேதவார்த்தைகளை நம்மால் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும் அதற்கு முற்றிலும் கீழ்ப்படிந்து நடப்பதற்கு நம்மை ஒப்புக் கொடுக் வேண்டும். நம் நாட்களில், வேத வார்த்தையில் உள்ள சத்தியத்திற்கு சமரச இணக்கம் காண்பிக்க அல்லது அதை மறுதலிக்க முயற்சிப்வர் களிடமிருந்து சத்தியத்தை காப்பாற்றி அதைப் பாதுகாப்பதை நம் முன்னுரிமையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

வேதவார்த்தைகளில் என்னால் புரிந்து கொள்ள முடியாத பல சத்தியங்கள் உண்டு. அந்த வார்த்தைகள் என்ன சொல்கின்றன என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதற்கு மாறாக அந்த வார்த்தையின் மூலம் ஒரு குறிப்பிட்ட விதத்தில் தேவன் ஏன் செயல்படுகின்றார் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை என்றே சொல்ல வேண்டும். என் மட்டுப்படுத்தப்பட்ட பார்வையில், அந்த வார்த்தைகள் அர்த்தமற்றதாக காணப்பட்டாலும், தேவன் அவற்றை கட்டளையிட்டிருக்கிறார் என்னும் ஒரே காரணத்தினால் அவற்றிற்கு கீழ்ப்படிய என்னை அர்ப்பணிக்கின்றேன். அவர் என்ன செய்கின்றார் என்பது அவர் ஒருவருக்கு மட்டுமே தெரியும், ஆகவே அவருடைய ஞானத்திற்கு என்னை ஒப்புக்கொடுக்கின்றேன்.

ஆதிசபையின்அர்ப்பணிப்பைக் குறித்து இரண்டாவதாக ஒரு காரியத்தை நாம் கவனிக்க வேண்டும். அது அப்போஸ்தலர்களின் உபதேசத்திற்கு தங்களைஅர்ப்பணித்தார்கள் என்பதாகும். இந்த குறிப்பிட்ட உபதேசம் அன்றைய நாட்களிலிருந்த யூதர்களிடமிருந்து கிறிஸ்தவர்களை வேறுபடுத்திக் காண்பித்தது. ஆண்டவராகிய இயேசு தேவனுடைய குமாரன் என்றும் அவர் தம் ஜனத்தை அவர்கள் பாவங்களிலிருந்து இரட்சிப்பதற்காகவே வந்தார் என்றும் அப்போஸ்தலர்கள் போதித்தனர்.மோசேயின் நியாயப்பிரமாணத்தை கடைபிடிப்பதன் மூலம் இரட்சிப்பு

வராது என்றும் மாறாக ஆண்டவராகிய இயேசு, பாவத்திற்கான பூரணபலியாக ஒப்புவித்த கிரியைகள் மூலமாக மட்டுமே கிடைக்கும் என்றும் போதித்தனர்.

அந்தநாட்களில் இப்போதனை தீவிரவாத போதனையைப் போலிருந்தது. அது கிறிஸ்தவர்கள் மேல் யூதர்களின் பகையை அதிகப்படுத்தியது. அப்போஸ்தலரின் உபதேசத்திற்கு தங்களை அர்ப்பணித்தவர்கள் தீவிரவாதிகளைப் போல பார்க்கப்பட்டார்கள். யூத தலைவர்கள் அப்போஸ்தலரின் போதனைகளை எதிர்த்தனர். விசுவாசிகள் அப்போஸ்தலர்களின் இயேசுவைப் பற்றிய உபதேசத்திற்கு தங்களை அர்ப்பணித்ததன் விளைவாக பல உபத்திரவங்களை அனுபவித்தார்கள். இன்னும் சிலர் தங்கள் ஜீவனை இழந்தார்கள். முன்னர் பின்பற்றி வந்த மார்க்கத்திற்கும் உபதேசங்களிற்கும் மீண்டும் திரும்பிவிட சோதனைகள் பலமாயிருந்தது. விசுவாசிகள் அப்போஸ்தரின் உபதேசத்தை விட்டு பின்மாற்றம் அடையும் சோதனையை பார்த்தபடியினால் தான் கலாத்தியருக்கு நிரூபம் எழுதப்பட்டது. கலாத்தியர் 1:6-9 வரையுள்ள பகுதியில் பவுல் கடுமையாக எழுதுவதை கவனியுங்கள்.

> 6 உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப்பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்;
>
> 7 வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல.
>
> 8 நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்.

*9 முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்.*

வேறொரு சுவிசேஷத்திற்கு திரும்புகிறதற்கான சோதனை இன்றைய காலத்திலும் உண்மையானதாக இருக்கின்றது. அவிசுவாசிகளும் ஏற்றுக் கொள்ளும் வகையில் சத்தியத்தை கலப்படமாக்குவதைக் குறித்து நாம் குற்றமுள்ளவர்கள். தேவனுடைய வார்த்தையை தெளிவாக போதிப்பதை அலட்சியப்படுத்தி நமக்கு சரியென்பதை போதிப்பதில் நாம் குற்றமுள்ளவர்கள். இதுவே நாம் அப்போஸ்தலரின் உபதேசங்களுக்கு நம்மை அர்ப்பணிக்கவில்லை என்பதை நிரூபிக்கின்றது.

இவ்வாறான சவால்கள் மத்தியில் தான் ஆதி சபை அப்போஸ்தலர்களின் போதனைக்கு தன்னை அர்ப்பணித்திருந்தது. அப்போஸ்தலர்கள் தேவனிடமிருந்து பெற்று பேசினார்கள் என அவர்கள் விசுவாசித்தார்கள். ஆகவே என்ன விளைவுகள் ஏற்பட்டாலும், அதன் மத்தியில் இந்த போதனைகளை பின்பற்றவும் கீழ்ப்படியவும் அவர்கள் தங்களை ஒப்புக் கொடுத்திருந்தார்கள். அவர்கள் வாழ்ந்தாலும் மரித்தாலும் சத்தியத்தை நம்பி அதற்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் ஏனென்றால் அது தேவனுடைய சத்தியம், அதுவே தேவனுடைய நோக்கம் என்பதில் உறுதியாயிருந்தார்கள். இவ்விதமான சூழ்நிலையில்தான் பரிசுத்தாவியானவர் அசைவாட வாஞ்சையாயிருந்தார்.

வேதவார்த்தைகளுக்கு நம் கீழ்ப்படிதல் மற்றும் அதற்கு நம் அர்ப்பணித்திருப்பு ஆகியவைகளை தேவ ஆவியானவரின் கிரியையிலிருந்து வேறு பிரிக்க முடியாது. தேவனுக்கும் மற்றும் அவரது வார்த்தைக்கும் கீழ்ப்படியாமை பரிசுத்தாவியானவரை

துக்கப்படுத்தும். தேவனுடைய ஆசீர்வாதம் கீழ்ப்படிதலுடன் நடப்பவர்கள் மேல் வந்து தங்கும். உபாகமம் 11:26-28 இலுள்ள பகுதியில் ஆண்டவர் தம் ஜனத்திற்கு கூறுவதை கவனியுங்கள்:

> 26 இதோ, இன்று நான் உங்களுக்கு முன்பாக ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் வைக்கிறேன்.
>
> 27 இன்று நான் உங்களுக்குக் கற்பிக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்தீர்களானால் ஆசீர்வாதமும்,
>
> 28 எங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படியாமல், இன்று நான் உங்களுக்கு விதிக்கிற வழியைவிட்டு விலகி, நீங்கள் அறியாத வேறே தேவர்களைப் பின்பற்றுவீர்களானால் சாபமும் வரும்.

அப்போஸ்தலரின் உபதேசத்திற்கு ஆதி விசுவாசிகளின் அர்ப்பணம் அவர்கள் வாழ்க்கையில் தேவனுடைய ஆசீர்வாதத்திற்குரிய வாசலைத் திறந்து விட்டது. அந்த விசுவாசிகள், அப்போஸ்தலர்கள் மூலமாக கேட்ட சத்தியங்களுக்கு தங்களை அர்ப்பணித்தபொழுது வல்லமையான செயல்கள் நடைபெற்றன. சத்தியத்திற்கு கீழ்ப்படியவும் சத்தியத்தை பாதுகாக்கவும் அவர்கள் ஒப்புக்கொடுத்தபடியால் பரலோகத்திலிருந்து ஆசீர்வாதங்கள் கட்டவிழ்க்கப்பட்டதுதேவனுடைய ஆசீர்வாதங்கள் வேண்டும் ஆனால் அவருடைய போதனைகளுக்கு அர்ப்பணிக்க மனதில்லாத பல விசுவாசிகளை நான் சந்தித்திருக்கின்றேன். தேவனுடைய ஆசீர்வாதங்களுக்காக கதறி ஜெபிக்கின்ற, ஆனால் தங்கள் பாவங்களையும் அவர்கள் செய்கின்ற இணக்கமான காரியங்களையும் சரிப்படுத்த விருப்பமில்லாத சபைகளையும் நான் கண்டிருக்கின்றேன். அவருடைய வார்த்தைக்கு நாம் அர்ப்பணிப்புடன் வாழாமல் நம் வாழ்க்கையின் நோக்கங்களுக்காக வாழும் போதுதேவனுடைய ஆவியானவர் அசைவாடுவாரென்று உண்மையாக நாம் எதிர்பார்க்க

முடியுமா? கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு எதிரான எதற்கும் இணங்கிப் போகாத அர்ப்பணிப்பே நம் மத்தியில் தேவனுடைய ஆவியானவரின் நிறைவை அறிந்து கொள்வதற்கு தேவையான முதல் மூலப்பொருளாகும்.

அப்போஸ்தலரின் உபதேசத்திற்கு உங்களை அர்ப்பணித்துள்ளீர்களா? உங்கள் ஐக்கியம்,வேதவார்த்தைகளின் உபதேசத்திற்கு விரோதமான எதற்கும் இணங்கிப் போகாத பிரதிஷ்டையுள்ளதாக காணப்படுகின்றதா? தேவன் என்ன எதிர்பார்க்கிறார் என்பதை கற்றுக் கொள்ளுதலும் கீழ்ப்படிதலோடு நடத்தலும் உங்களின் மிகப்பெரிய வாஞ் சையாக இருக்கின்றதா? அப்பொழுது மட்டுமே உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய நிறைவான ஆசீர்வாதத்தை அறிந்து கொள்ள முடியும்.

## கவனிப்பதற்கு:

# அர்ப்பணித்தல் என்பதன் அர்த்தம் என்ன?

# அப்போஸ்தலரின் உபதேசத்திற்கு அர்ப்பணித்த ஒரு நபரில் காணப்படும் மூன்று குணாதிசயங்கள் எவை?

# வேத வசனத்திற்கு அர்ப்பணித்திருப்பதற்கு எதிராக நாம் இணங்கிப் போகக் கூடிய சில வழிகள் எவை?

# வேதவசன போதனையிலிருந்து நம்மை எதிராளியானவன் எவ்வாறு திசை திருப்பக் கூடும்?

# அப்போஸ்தலரின் உபதேசம் என்றால் என்ன? தேவனையும் மற்றும் மேசியாவையும் பற்றிய யூதர்களின் புரிந்து கொள்ளுதலிலிருந்து இது எவ்வாறு வேறுபட்டது?

# பரிசுத்தாவியானவரின் கிரியைகளுக்கும் தேவனுடைய வார்த்தைக்கு நமது கீழ்ப்படிதலுக்கும் இடையில் இருக்கும் தொடர்பு என்ன?

நாம் அவருடைய வார்த்தைக்கு நம்மை அர்ப்பணிக்காமல் இருக்கும்போது தேவனுடைய ஆசீர்வாதத்தின் நிறைவை எதிர்பார்க்க முடியுமா?

## ஜெபத்திற்கு:

# தேவனுடைய வார்த்தைக்கு இன்னுமதிக அர்ப்பணிப்புடன் வாழ உதவி செய்யுமாறு அவரிடம் கேளுங்கள்.

# ஆண்டவராகிய இயேசுவைப் பற்றிய அப்போஸ்தலரின் உபதேசங்களுக்காக மற்றும் அவர் எதற்காக இந்த உலகத்திற்கு வந்தார் என்பதற்காகவும் தேவனுக்கு நன்றி செல்ல சிறிது நேரமெடுத்துக் கொள்ளுங்கள்.

# தேவனுடைய வார்த்தைக்கு நீங்கள் ஒப்புக் கொடுத்திருப்பதிலிருந்து விலகி இணங்கிப் போகக் கூடிய சோதனைகளிலிருந்து காத்துக் கொள்ளும்படி தேவனிடம் கேளுங்கள்.

# 5

# ஐக்கியம்

*42 அவர்கள் ஐக்கியத்திலேஞ். உறுதியாய் நிலைத்திருந்தார்கள்*

கடந்த அதிகாரத்திலே, ஆதி சபை அப்போஸ்தலரின் உபதேங்களுக்கு தங்களை அர்ப்பணித்ததைக் குறித்து ஆராய்ந்தோம். ஆதி சபை தங்களை அர்ப்பணித்திருந்த இரண்டாவது கொள்கை ஐக்கியமாகும்.

நம் நாட்களில் ஐக்கியம் என்பதன் கருத்து குறிப்பிடத்தக்க அளவிற்கு நீர்த்துப் போய் காணப்படுகின்றது. தேவனை ஆராதிக்க அல்லது ஆவிக்குரிய காரியங்களைப் பேச நாம் ஒன்றாக கூடி வரும் போது நமக்குள் ஐக்கியம் உண்டென்று நாம் சொல்லுகின்றோம். ஐக்கியம் என்னும் அம்சத்திலே இவைகள் முக்கியத்துவம் உள்ளவைகளாயிருந்தாலும், அந்த வார்த்தையின் ஒட்டுமொத்த அர்த்தத்திலே அது ஒரு சிறு பகுதி மாத்திரமே.

கிரேக்க மொழியிலேஐக்கியம் என்னும் வார்த்தைக்கு பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தை கொய்நோனியா என்பதாகும். இந்த வார்த்தை ஐக்கியம், சமுதாயம் மற்றும் பகிர்ந்து கொள்ளல் என்பவற்றைக் குறிக்கின்றது. ரோமர் 15:25-27 லுள்ள பகுதிஎருசலேமிலிருந்த ஏழை மக்களுக்காக செய்யப்பட்ட பங்களிப்பைப் பற்றி குறிப்பிடுகின்றது:

*25 இப்பொழுதோ பரிசுத்தவான்களுக்கு உதவிசெய்யுங்காரியமாக நான் எருசலேமுக்குப் பிரயாணம்பண்ண எத்தனமாயிருக்கிறேன்.*

*26 மக்கெதோனியாவிலும் அகாயாவிலுமுள்ளவர்கள் எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்குள்ளே இருக்கிற தரித்திரருக்காகச் சில பொருள்சகாயம் செய்ய (கொய்நோனியா) விருப்பங்கொண்டிருக்கிறார்கள்;*

*27 இப்படிச்செய்வது நல்லதென்று எண்ணினார்கள்; இப்படிச் செய்கிறதற்கு அவர்கள் கடனாளிகளாயும் இருக்கிறார்கள். எப்படியென்றால், புறஜாதியார் அவர்களுடைய ஞானநன்மைகளில் பங்குபெற்றிருக்க, சரீரநன்மைகளால் அவர்களுக்கு உதவிசெய்ய இவர்கள் கடனாளிகளாயிருக்கிறார்களே.*

இந்தப் பகுதி எருசலேமில் கஷ்டத்திலிருந்த சகோதரர்களுக்கு பொருளாதார விதத்தில் உதவி செய்ய முற்பட்டதைக் குறித்து கூறுகின்றது.

இதன் மூலம் ஐக்கியம் என்பதில் தேவைகளின் அடிப்படையில் ஒருவருக்கொருவர் உதவி செய்வதும் சம்பந்தப்பட்டிருக்கின்றது என்பதனைப் புரிந்து கொள்ளலாம். அப்போஸ்தலர் 2ல் உள்ள கருத்தின் அடிப்படையில் இதே விதமான ஐக்கியம் விசுவாசிகளில் செயல்பட்டதை நாம் காணமுடியும். அவர்கள் தங்களிடமிருந்த எல்லாவற்றையும் விற்று ஏழைகளாயிருப்பவர்களுக்கு பகிர்ந்து கொடுப்பதற்காக அப்போஸ்தலரிடம் கொண்டு வந்து கொடுத்தனர். அந்த விசுவாசிகள் ஐக்கியத்திற்காக விலைக்கிரயம் கொடுத்தனர்.

பிலிப்பியர் 1:3-5 வரையுள்ள பகுதியில் சுவிசேஷத்திற்காக பிலிப்பியர்கள் பங்காளிகளாக இருந்தபடியால் பவுல் அவர்களுக்கு நன்றி கூறுகின்றார். இங்கே பங்காளிகள் (உடன்பட்டவர்கள்) என்னும் வார்த்தைக்கு கிரேக்க பாஷையில் கொயிநோனியா என்னும் வார்த்தை கொடுக்கப்பட்டுள்ளது.

*3 சுவிசேஷம் உங்களுக்கு அறிவிக்கப்பட்ட நாள்முதல் இதுவரைக்கும் நீங்கள் அதற்கு*

*உடன்பட்டவர்களானபடியால் (கொயிநோனியா),*

*4 நான் பண்ணுகிற ஒவ்வொரு விண்ணப்பத்திலும் உங்கள் அனைவருக்காகவும் எப்போதும் சந்தோஷத்தோடே விண்ணப்பம்பண்ணி,*

*5 உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள்பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி,*

பவுல், பிலிப்பிய சபையினரிடம் அனுபவித்த ஐக்கியம் எப்படிப்பட்டதாக இருந்தது? இவர்களுடைய ஐக்கியத்தில் ஜெபமும், விசாரிப்பும் இருப்பது தெளிவாக இருந்தாலும் பிலிப்பியர் 4:14-16 வரையுள்ள பகுதியில் பிலிப்பியர்கள் பவுலின் ஊழியம் தொடர்ந்து நடைபெற பொருளாதார உதவிகள் செய்ததற்காக அவர்களுக்கு நன்றி செலுத்துவதை காணமுடிகின்றது.

*14 ஆகிலும் நீங்கள் என் உபத்திரவத்தில் என்னோடே உடன்பட்டது நலமாயிருக்கிறது.*

*15 மேலும், பிலிப்பியரே, சுவிசேஷத்தின் ஆரம்பத்திலே நான் மக்கெதோனியாவிலிருந்து புறப்பட்டபோது, கொடுக்கல் வாங்கல் காரியத்தில் நீங்கள்மாத்திரம் எனக்கு உடன்பட்டதேயல்லாமல், வேறொரு சபையும் உடன்படவில்லை என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.*

*16 நான் தெசலோனிக்கேயிலிருந்தபோதும், என் குறைச்சலை நீக்கும்படி நீங்கள் இரண்டொருதரம் அனுப்பினீர்கள்.*

விசுவாசிகள் பவுலுடன் கொண்டிருந்த ஐக்கியம் நடைமுறைக்கு ஏற்றதாக இருந்தது. பவுலை தேவன் எதற்காக அழைத்தாரோ அதை அவர் செய்யும்படியாக தங்கள் பொருளாதாரத்தை அவருடன் பகிர்ந்து கொண்டார்கள். சுவிசேஷம் தொடர்ந்து பரவிச் செல்வதற்கு பவுலுடன் கூட்டு

பங்காண்மை வைத்துக் கொண்டார்கள். இவ்வாறு பவுலுடைய செலவுகளுக்கு அவர்களின் பங்களிப்பைக் கொடுத்தார்கள்.

கொயிநோனியா என்னும் வார்த்தையை பவுல் மீண்டும் 1 கொரிந்தியர் 10:16ல் குறிப்பிடுகின்றார். இந்தப் பகுதியில் அப்போஸ்தலன் பவுல் விக்கிரக ஆராதனையைப் பற்றி குறிப்பிடுகின்றார். கொரிந்து பட்டணத்திலுள்ள விசுவாசிகளுக்கு கர்த்தருடைய பந்தியைப் பற்றியும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுவோருக்கு அந்த பந்தி எதைப் பற்றி குறிப்பிடுகின்றது என்பதனையும் ஞாபகப்படுத்துகின்றார்.

> *16 நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமா யிருக்கிறதல்லவா (கொயிநோனியா)? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமா யிருக்கிறதல்லவா (கொயிநோனியா)?*

இந்த வசனத்தில் கொயிநோனியா என்னும் வார்த்தை ஐக்கியப்படுதல் என்னும் அர்த்தத்தைக் கொடுக்கின்றது. கர்த்தருடைய பந்தியில் அவர்கள் பங்குபற்றிய பொழுது கர்த்தராகிய இயேசுவின் சரீரத்திலும் இரத்தத்திலும் பங்கு பெற்றார்கள் என்பதையே பவுல் கொரிந்து சபையினரிடம் சொல்லுகின்றார். இதன் மூலம் உண்மையான ஐக்கியத்தின் விலை என்ன என்பது அவர்களுக்கு ஞாபகப்படுத்தப்படுகின்றது. இயேசு கிறிஸ்துவுக்கு, ஐக்கியம் என்றால் அவர்களுடைய பாவமன்னிப்பிற்காக தன் ஜீவனை பலியாக கொடுப்பது என்பதாகும். இதன் மூலம் கொரிந்திய விசுவாசிகள்ஆண்டவரோடு ஐக்கியம் கொண்டிருக்க கடமைப் பட்டிருக்கிறார்கள் என பவுல் ஞாபகப்படுத்துகின்றார். அவர் தன் வாழ்க்கையை அவர்களுக்கு கொடுத்ததைப் போலவே இவர்களும் தங்கள் வாழ்க்கையை கொடுக்க விருப்பமுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

ஆதி சபை தங்களை அர்ப்பணித்திருந்தவைகளுக்காக

அதிக விலை கொடுக்க நேர்ந்தது. ஆனாலும் அதை அவர்கள் மகிழ்ச்சியான இருதயத்துடன் செய்தார்கள். நம் சக மனிதர்களுடன் மற்றும் தேவனுக்கிடையில் உள்ள உறவில் மிக நெருக்கமான தொடர்பு இருப்பதாக வசனத்தில் காணமுடியும். உண்மையாக கூறப்போனால் என் சகோதரன் அல்லது சகோதரியுடனான உறவில் உடைப்பு ஏற்பட்டால் அது தேவனுடனான உறவிலும் பாதிப்பை ஏற்படுத்தும் அளவிற்கு இந்த தொடர்பு மிக நெருக்கமானது.

அப்போஸ்தலனாகிய யாக்கோபு இதை யாக்கோபு 2:14-17 வரையுள்ள பகுதியில் தெளிவாக கூறியிருப்பதை காணலாம்; உண்மையான விசுவாசம் வெறும் வார்த்தைகளும் எண்ணங்களும் சார்ந்ததல்ல. ஆனால் கிரியைகளை சார்ந்தது.

*14 என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா?*

*15 ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது,*

*16 உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன?*

*17 அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்.*

தன் கைகளையும் கால்களையும் செயல்படுத்தி கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் தேவையோடிருக்கும் ஒருவனுக்கு சேவை செய்யக் கூடிய விசுவாசத்தையே தேவன் தேடுகின்றார்.

இதைக் குறித்து தேவன் ஏசாயா 58:5-11 வரையுள்ள பகுதியில் மிக உறுதியாக பேசியுள்ளார். மதமென்னும் போர்வையில் நாடகமாடிக் கொண்டிருந்த அந்நாட்களிலிருந்த மததலைவர்களைப் பார்த்து அவர் இவ்வாறு பேசினார்.

*5 மனுஷன் தன் ஆத்துமாவை ஒடுக்குகிறதும், தலைவணங்கி நாணலைப்போல் இரட்டிலும் சாம்பலிலும் படுத்துக்கொள்ளுகிறதும், எனக்குப் பிரியமான உபவாச நாளாயிருக்குமோ? இதையா உபவாசமென்றும் கர்த்தருக்குப் பிரியமான நாளென்றும் சொல்லுவாய்?*

*6 அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும், நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கிவிடுகிறதும், சகல நுகத்தடிகளையும் உடைத்துப் போடுகிறதும்,*

*7 பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்துகொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக் கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங் கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம்.*

*8 அப்பொழுது விடியற்கால வெளுப்பைப்போல உன் வெளிச்சம் எழும்பி, உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து, உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும்; கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும்.*

*9 அப்பொழுது நீ கூப்பிடுவாய், கர்த்தர் மறுஉத்தரவு கொடுப்பார்; நீ சத்தமிடுவாய்: இதோ, நான் இருக்கிறேன் என்று சொல்லுவார். நுகத்தடியையும், விரல் நீட்டுதலையும், நிபச்சொல்லையும், நீ உன் நடுவிலிருந்து அகற்றி,*

> *10 பசியுள்ளவனிடத்தில் உன் ஆத்துமாவைச் சாய்த்து, சிறுமைப்பட்டஆத்துமாவைத் திருப்தியாக்கினால், அப்பொழுது இருளில் உன் வெளிச்சம் உதித்து, உன் அந்தகாரம் மத்தியானத்தைப் போலாகும்.*

> *11 கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்; நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும், வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய்.*

தேவன் தம் ஜனத்திடம் என்ன எதிர்பார்க்கின்றார் என்பதை கவனிக்கவும். அவர்கள் அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்த்து, பசியுள்ளவனுடன் தன் உணவைப் பகிர்ந்து, துரத்துண்ட சிறுமையானவனை வீட்டிலே சேர்த்துக் கொண்டு வஸ்திரமில்லாதவனுக்கு வஸ்திரம் கொடுக்கவும் வேண்டும். இப்படிச் செய்வதன் விளைவாக தேவனுடைய வெளிச்சம் அவர்கள் வாழ்க்கையில் எழும்பும். அவர்களுடைய ஜெபத்தை தேவன் கேட்டு, அவர்களை வழிநடத்தி, அவர்கள் செய்யும் எல்லாவற்றிலும் அவர்களை பெலப்படுத்துவார்.

மத்தேயு 25:40ல் இயேசு இதைப்பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

> *அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்.*

கிறிஸ்துவுக்குள் ஒரு சகோதரனுக்கோ அல்லது சகோதரிக்கோ நாம் செய்யும் ஒவ்வொன்றையும் அவர்களை சிருஷ்டித்தவருக்கே செய்கின்றோம். இதன் எதிர்பதமும் உண்மையானதுதான். நம் சகோதரருடைய தேவைகளை அலட்சியப்படுத்தும்போது நாம்

கிறிஸ்துவை அலட்சியப்படுத்துகின்றோம். ஒரு சகோதரனையோ சகோதரியையோ அவதூறாகப் பேசும்போது, அவர்களை சிருஷ்டித்தவருக்கு எதிராக பேசுகின்றோம். நம்மிடம் உள்ளவைகளை தேவையுள்ளவர்களுக்காக பயன்படுத்தாத பொழுது அதன் விளைவுகள் நம் வாழ்க்கையில் பாதிப்பைக் கொண்டுவரும். நீதிமொழிகள் புத்தகத்திலே இதைப்பற்றி 21:13ல் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

> நீதி 21:13 ஏழையின் கூக்குரலுக்குத் தன் செவியை அடைத்துக்கொள்ளுகிறவன், தானும் சத்தமிட்டுக் கூப்பிடும்போது கேட்கப்படமாட்டான்.

இதைக் குறித்து தேவன் மிக அதிகமாக சிந்திக்கின்றபடியால்தான், அவருக்கு பலி செலுத்த வருகின்ற ஒருவனுடைய சகோதரனுக்கோ சகோதரிக்கோ அவனுக்கெதிரான மனஸ்தாபம் ஏதாகிலும் இருந்தால் அவன் தன் காணிக்கையை பலிபீடத்திலேயே வைத்துவிட்டு முன்பு போய் அவர்களுடன் சரிப்படுத்திவிட்டு பின்பு வந்து பலிசெலுத்த வேண்டும் என்று கூறுகின்றார் (பார்க்க மத்தேயு 5:23-24) கணவன்மார் தங்கள் மனைவிகளை மதிப்புடனும் மரியாதையுடனும் நடத்தாவிட்டால் அவர்களுடைய ஜெபங்கள் தடைப்படும் என ஞாபகப்படுத்துகின்றார். (1பேதுரு 3:7) தேவனுக்கும் அவருடைய பிள்ளைகளுக்குமிடையில் ஆழமான தொடர்பொன்று காணப்படுகின்றது. நாம் ஒருவருக்கு சேவை செய்யும் பொழுது தேவனுக்கு சேவை செய்கின்றோம். நாம் தேவனுடைய பிள்ளைகளை அலட்சியப்படுத்தும் பொழுது, நாம் அவரை அலட்சியப்படுத்தி காயப்படுத்துகின்றோம்.

சங்கீதம் 133 மிகச் சிறிய சங்கீதமாகும். ஆனால் தேவனுக்கும் அவரது ஆசீர்வாதங்களுக்கும் மற்றும் விசுவாசிகளின் ஐக்கியத்திற்குமிடையில் உள்ள தொடர்பைக் குறித்து மிகத் தெளிவாக கூறுகின்றது.

*1 இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது!*

*2 அது ஆரோனுடைய சிரசின்மேல் ஊற்றப்பட்டு, அவனுடைய தாடியிலே வடிகிறதும், அவனுடைய அங்கிகளின்மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கும்*

*3 எர்மோன்மேலும், சீயோன் பர்வதங்கள்மேலும் இறங்கும் பனிக்கும் ஒப்பாயிருக்கிறது; அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார்.*

இந்த சிறிய சங்கீதத்தில் சகோதரருக்கிடையிலுள்ள ஐக்கியத்திற்கும் தேவனுடைய ஜனத்தின் மேல் அவருடைய ஆசீர்வாதத்திற்குமிடையில் உள்ள தொடர்பு காட்டப்பட்டுள்ளது. தேவனுடைய ஜனம் ஐக்கியமாக சேர்ந்திருக்கும் போது தேவன் தம் ஆசீர்வாதத்தை ஊற்றுகின்றார்.

இதுதான் ஆதி சபையிலும் நடந்தது. அவர்கள் ஐக்கியத்திற்கென்று தங்களை அர்ப்பணித்தார்கள். அதாவது அவர்கள் கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள மற்றவர்களுக்கு தேவைகளுக்கு சேவை செய்ய தங்களை அர்ப்பணித்தார்கள். அவ்வாறு அவர்கள் ஒருவருக்கொருவர் ஊழியம் செய்த பொழுது தேவனுடைய இருதயத்தைத் தொட்டார்கள். அவர்கள் தேவனுடைய நோக்கத்தின்படி நடந்ததால் தேவன் தம் ஆசீர்வாதத்தையும் தம் வல்லமையையும் அவர்கள் மேல் ஊற்றினார்.

நம் கிறிஸ்தவ நடையிலே சுயத்தை மையமாக கொண்டு வாழ முற்படுவது சாத்தியமானதே. நம் விசுவாசம் நாம் எதை நம்புகின்றோம் மற்றும் எவற்றை தேவனிடமிருந்து பெற்றுக் கொள்ளக் கூடும் என்பதனை சார ஆரம்பிக்கின்றது. தியாகமான வாழ்க்கை என்னும் கலை இன்று அழிந்து வருகின்றது. விசுவாசிகளாகிய நாம் நம்மைச் சூழ இருப்பவர்களைக்

குறித்து கரிசனையுள்ளவர்களாக இருக்க தேவன் நம்மை அழைக்கின்றார். இந்த உலகத்தில் அவருடைய கரங்களாக, கால்களாக இருக்க நம்மை அழைக்கின்றார். நம்மைச் சுற்றி தேவைகளுடன் இருப்பவர்களுக்கு அவருடைய நாமத்தில் ஊழியம் செய்வோம். அதை நம் செலவில் செய்வோம். நம் நாட்களில் மீண்டும் தேவன் வல்லமையாக அசைவாடுவதை காண விரும்புகின்றீர்களா? அவருடைய ஆவியானவர் நம் மத்தியில் அசைவாடுவதை காண விரும்புகின்றீர்களா?

வேதம் சார்ந்த ஐக்கியமாகிய ஆண்டவாரகிய இயேசு நமக்குச் செய்தபடியே மற்றவர்களுக்காக நம்மை பலியாக செலுத்தும் ஐக்கியமே நாம் இரண்டாவதாக கற்றுக் கொள்ளவேண்டிய கொள்கையாகும். என் மீது மட்டுமே நான் கவனம் செலுத்திக் கொண்டிருக்கும் வரை தேவனுடைய ஆவியானவரின் நிறைவான கிரியைகளை என் வாழ்வில் நான் பார்க்க முடியாது. தங்களுடைய சமுதாயத்திற்கும் தங்கள் சகோதர சகோதரிகளுக்கும் ஊழியம் செய்ய, தங்களை பலியாக ஒப்புக்கொடுக்க மற்றும் சேவை செய்ய யாரெல்லாம் விருப்பமுள்ளவர்களாயிருக்கிறார்களோ தேவனுடைய ஆவியானவர் அவர்கள் மேல் தம்மை ஊற்ற வாஞ்சையுள்ளவராயிருக்கிறார்.

## கவனத்திற்கு:

# இந்த அதிகாரத்தில் ஐக்கியத்தைக் குறித்து நாம் என்ன கற்றுக் கொண்டோம்? வேதாகம பொருள் விளக்கத்தின்படியான ஐக்கியத்தை இன்றைய சபைகளில் நாம் நடைமுறைப்படுத்தும் ஐக்கியத்துடன் எவ்வாறு ஒப்பிடலாம்?

# உங்கள் பகுதியிலுள்ள கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் குறிப்பிட்ட தேவை என்ன? கஷ்டத்தின் மத்தியில் வாழும் மக்களை ஐக்கியத்தின் மூலம் நாம் எவ்வாறு சந்திக்கலாம்?

# தேவனுக்கும் அவருடைய பிள்ளைகளுக்குமிடையில் உள்ள தொடர்பு என்ன? இயேசுவின் சரீரமாகிய சபைக்கு ஊழியம் செய்வது எவ்வாறு இயேசுவைத் தொடுகின்றது?

# தேவனுடைய ஜனங்களின் தேவைகளை அலட்சியப்படுத்தி விட்டு அவர் நம் மத்தியில் கிரியை செய்வார் என எதிர்பார்க்க முடியுமா?

## ஜெபத்திற்கு:

# உண்மையான ஐக்கியத்தின் அர்த்தத்தை பற்றி இன்னுமதிகமாக கற்றுத்தரும்படி தேவனிடம் கேளுங்கள். அவர் நம்முன் கொண்டு வருபவர்களின் தேவைகளுக்கு மேலும் திறம்பட ஊழியம் செய்ய கிருபை தருமாறு அவரிடம் கேளுங்கள்.

# தேவன் நம்மிடம் கொண்டு வந்தவர்களுக்கு ஊழியம் செய்யத் தவறிய நேரங்களுக்காக அவரிடம் மன்னிப்பு கேளுங்கள். இதனால் அவரை காயப்படுத்தியதற்காக அவரிடம் மன்னிப்பு கேளுங்கள்.

# தேவன் உங்கள் மீது அக்கறையுள்ளவராகவும் தொடர்பு கொள்ளுகிறவராகவும் இருப்பதற்காக தேவனுக்கு நன்றி சொல்லுங்கள். உங்களுக்கு ஊழியம் செய்கிறவர்கள் அவருக்கு ஊழியம் செய்வதற்காகவும் நன்றி செலுத்துங்கள்.

# மற்றவர்களுக்கு தியாகமான முறையில் ஊழியம் செய்ய விரும்புபவர்களுடன் செயல்பட ஆவியானவர் வாஞ்சையாக இருக்கிறபடியால் தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்.

# 6
# அப்பம் பிட்குதல்

*42 அவர்கள்ஞ். அப்பம் பிட்குதலிலும் உறுதியாய் தரித்திருந்தார்கள்.*

இந்தப் பாடத்தில் இதுவரை நாம் ஆதி சபை அப்போஸ்தலருடைய உபதேசத்திற்கும் ஐக்கியத்திற்கும் தங்களை அர்ப்பணித்திருந்தார்கள் என கவனித்தோம். அவர்கள் தங்களை அர்ப்பணித்த அடுத்த முக்கிய கொள்கை அப்பம் பிட்குதல் என்பதாகும்.

அப்பம் பிட்குதல் என்னும் பதம் பொதுவாக கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுதல் என்னும் செயல் என புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. இதைச் சொல்லும் போது கர்த்தருடைய இராப்போஜனம்பண்ணுதல் என்பது இந்நாட்களில் நாம் கடைபிடிப்பது போன்று செய்யப்படவில்லை என்பதனையும் புரிந்து கொள்ளவேண்டும். இதற்குப் பதிலாக அப்பம் பிட்குதல் என்று சொல்லும் போது விசுவாசிகள் ஒன்று கூடி ஐக்கிய போஜனம் பண்ணி ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருந்தார்கள் என்பதுதான் சரியானது. இதற்கான பல வேதவசனங்கள் காணப்படுகின்றது. அவற்றை நாம் ஆராயலாம்.

மத்தேயு 26ம் அதிகாரத்தில் இயேசு கர்த்தருடைய இராப்போஜனம்பண்ணுதல் என்ற வழக்கம் ஒன்றை ஆரம்பித்து வைக்கிறார். அந்த சமயத்தில் இயேசுவும் அவருடைய சீஷர்களும் ஒன்றாக உணவருந்திக் கொண்டிருந்தனர். அப்போது இயேசு அப்பத்தையும் பாத்திரத்தையும் எடுத்து கர்த்தரின் இராப்போஜனம்பண்ணுதலின் அடையாளங்களைவிளங்கப் படுத்தினார். அவர்கள் அனைவரும் அடுத்து என்ன

சம்பவிக்கப்போகின்றது என்னும் எதிர்பார்ப்புடன் ஒன்றாக அப்பத்தை சாப்பிட்டு பாத்திரத்தில் பாணம்பண்ணினார்கள். இவர்களின் ஐக்கியம் ஒரு ஸ்தோத்திரப் பாடலுடன் முடிவுற்றது. (மத்தேயு 26:30) இதன் மூலம் கர்த்தருடைய இராப்போஜனம்பண்ணுதல் என்பதன் முதல் கொண்டாட்டம், ஒரு பொதுவான உணவு நேரத்தில், இயேசுவால் வழிநடத்தப்பட்டு, அப்பம் மற்றும் பாத்திரத்தின் அடையாளத்திற்கு நேரமெடுக்கப்பட்டு, ஆராதனைக்கு அடையாளமாக ஸ்தோத்திரப் பாடலுடன் முடிவுற்றது என்பதை நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

அப்போஸ்தலனாகிய பவுல் 1 கொரிந்தியர் 11ம் அதிகாரத்தில் கர்த்தருடைய இராப்போஜனம்பண்ணுதலைக் குறித்து எழுதியுள்ளார். அதிலும் வசனம் 20-34 வரையுள்ள பகுதியில் இதை அனுசரிப்பதைக் குறித்த கண்ணோட்டத்தைக் காணலாம். 1 கொரிந்தியர் 11:20-34ன் கருத்தின் பின்னனியில் பவுல் கர்த்தருடைய இராப்போஜனம்பண்ணுதல் தவறான முறையில் அனுசரிக்கப்படுவதில் உள்ள கவலைகளை பகிர்ந்து கொள்கின்றார். வசனம் 20-21ல் அவர் கூறியுள்ளதைக் கவனியுங்கள்:

> 20 நீங்கள் ஓரிடத்தில் கூடிவரும்போது, அவனவன் தன் தன் சொந்த போஜனத்தை முந்திச் சாப்பிடுகிறான்; ஒருவன் பசியாயிருக்கிறான், ஒருவன் வெறியா யிருக்கிறான். 21 இப்படிச் செய்கிறது கர்த்தருடைய இராப்போஜனம்பண்ணுதலல்லவே.

இராப்போஜனம்பண்ணுதலுக்காக கூடி வந்த விசுவாசிகள் மற்றவர்களுக்காக காத்திராமல் தங்கள் தங்கள் போஜனத்தைப் புசித்தார்கள் என்பதை நாம் இங்கே கவனிக்க வேண்டும். இதன் விளைவாக ஒருவன் பசியோடிருந்தான்; மற்றொருவன் வெறியாயிருந்தான். இவ்விதமான தவறான அனுகுமுறைக்காக பவுல் கொரிந்தியர்களைக் கடிந்து கொள்கின்றார். இங்கே

நாம் முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவென்றால், இது கர்த்தருடைய பந்தி அனுசரிப்பில் நடைபெற்ற சம்பவமாகும். சிலர் பசியோடிருந்தார்கள் என்னும் பதம் அங்கே உணவு பறிமாறப்பட்டதைக் குறிப்பிடுகின்றது. சிலர் வெறியோடிந்தார்கள் என்னும் பதம் அங்கே குடிப்பதற்கு தாராளமாக இருந்தது என்பதனைக் குறிப்பிடுகின்றது. மற்றைய எல்லோரும் கூடிவருவதற்கு முன்னரே சிலர் நேரத்தோடே வந்து தாங்கள் திருப்தியாகுமளவிற்கு சாப்பிட்டார்கள். ஆகவே பின்னர் வந்தவர்களுக்கு சாப்பிடுவதற்கு குறைவாகவே கிடைத்தது. கொரிந்தியர் இப்படிப்பட்ட பேராசையுடன் கர்த்தருடைய இராப்போஜனத்தை அனுசரிக்கக் கூடாது என பவுல் அவர்களிடம் கூறுகின்றார். ஜனங்கள் மற்றவர்களுடைய தேவையைக் குறித்த கரிசனையில்லாதவர்களாக இருந்தபடியால் அவர்கள் மத்தியில் ஒரு சிலர் குடித்து வெறித்திருக்கும் போது, இன்னும் சிலர் பசியாயிருக்கும் போது எப்படி அவர்கள் தங்கள் உணவை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டு கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கு பெற முடியும்? இது இயேசு அவர்களுக்கு கற்றுக் கொடுத்ததற்கு எதிரானது. கர்த்தருடைய இராப்போஜனத்தை இவ்வாறு அனுசரிப்பதேஅதை இழிவு படுத்துவதாகும்.

கர்த்தருடைய இராப்போஜனத்தில் அபாத்திரமாக பங்கு பெறுபவர்கள் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என கொரிந்தியர்களுக்கு பவுல் தொடர்ந்து இந்தப் பகுதியில் விவரிக்கிறார்:

> *27 இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான்.*
>
> *28 எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து,*

*இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன்.*

*29 என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்.*

*30 இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்.*

இங்கே பவுல் கர்த்தருடைய இராப்போஜனத்தை தவறாக பயன்படுத்துவதை குறித்து பேசினாலும், கர்த்தருடைய இராப்போஜன அனுசரிப்பில் பொதுவான உணவு பறிமாறுதலும், அதனுடன் ஆண்டவர் செய்தவைகளை நினைவு கூறும் வண்ணமாக அப்பம் பிட்குதலும் பாத்திரத்தில் பங்கு பெறுதலும் இடம் பெற்றது என்பதனை இந்தப் பகுதியில் நாம் காண முடிகின்றது.

ஆதி சபை அப்பம் பிட்குதலுக்கு தங்களை அர்ப்பணித்திருந்தார்கள். அதாவது அவர்கள் அடிக்கடி ஒன்றாக கூடி போஜனம் பண்ணி, பின்னர் ஆராதனையுடனும் ஸ்தோத்திரத்துடனும் ஆண்டவர் அவர்களுக்குச் செய்தவைகளை நினைவு கூர்ந்தார்கள். இவ்வாறு அப்பம் பிட்குதலின் அனுசரிப்பு ஒரு மகிழ்ச்சியான கொண்டாட்டமாக இருந்தது என எனக்குத் தெரிகின்றது. அவர்கள் ஒன்றாக கூடி ஆண்டவருடைய நிறைவை அனைவருடனும் பகிர்ந்து கொண்டார்கள். அவர்கள் ஒன்றாக கூடி இயேசுவின் சிலுவை மரணத்தின் மூலம் அவர்கள் பெற்ற இரட்சிப்பை நினைவு கூர்ந்தார்கள்.

நம் தினசரி வாழ்க்கையின் அலுவல்களினால் தேவனகிய கர்த்தர் நமக்கு என்ன செய்தார் என்பதை மறந்து விடுவது

இலகுவாக நடந்து விடக்கூடிய ஒன்றாகும். மோசேயின் நியாயப்பிரமாணத்தில் ஏழு நாட்களில் ஒரு நாளை ஓய்வு நாளாக கடைப்பிடிக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. இது சரீர ஓய்வுக்காக மட்டுமல்ல. தேவனுடைய ஜனங்கள் தொடர்ச்சியானவேலைகளிலிருந்து விடுபட்டு தேவனை நினைவு கூறுவதற்காக நேரமெடுக்கவும் கொடுக்கப்பட்டது. இதைவிட ஓய்வு நாள் கட்டளையின் படி ஒவ்வொரு ஏழாம் வருடமும் தேவனுடைய ஜனம் தங்கள் தேசத்திற்கும் ஓய்வு கொடுக்க வேண்டும் என்று கட்டளையிடப்பட்டுள்ளது. (லேவியராகமம் 25:3-5) அந்த ஏழாம் வருடத்திலே பூமியில் எந்த வேலையும் செய்யப்படக்கூடாது. மோசேயின் நியாயப்பிரமாணத்தினால் கட்டப்பட்ட தேவனுடைய ஜனங்களுக்கு தேவனால் போஷிக்கப்படும் அனுபவமும் கிடைத்தது. அந்த ஏழாம் வருடத்திலே தேவனை போஷிப்பவராகவும் மேய்ப்பராகவும் அவர்கள் சார்ந்திருக்க வேண்டியதாயிருந்தது.

பழைய ஏற்பாடு முழுவதிலும் தேவன் தம் ஜனத்தை இப்படிப்பட்ட கொண்டாட்டங்கள் மற்றும் பண்டிகைகளை அனுசரிக்க கட்டளையிட்டிருந்தார். பஸ்கா என்னும் பண்டிகை தேவனாகிய கர்த்தர் தம்முடைய தூதனை எகிப்து தேசத்திற்குள் கடந்து செல்ல அனுமதித்து தம் ஜனத்தை மீட்டெடுத்ததை நினைவு கூர்ந்து கொண்டாட ஏற்படுத்தப்பட்ட பண்டிகையாகும். கூடாரப் பண்டிகை தேவனாகிய கர்த்தர் வனாந்தரத்தில் தம் ஜனத்தை நடத்தி வந்த விதத்தை நினைவு கூற ஏற்படுத்தப்பட்ட பண்டிகையாகும். இவ்வாறான பிற பண்டிகைகளை நாற்று நட ஆரம்பிக்கும்போதும் அறுவடையின் போதும் கொண்டாடினார்கள்.தேவன் தம்முடைய ஜனத்தை போஷிப்பதையும் அவர்களை ஆசீர்வதிப்பதையும் நினைவு கூர்ந்து அவர்களுக்குரிய எல்லாவற்றிலும் தசமபாகத்தை கொடுக்கவேண்டுமென்று கட்டளையிட்டார். இவ்வித பண்டிகைகளும் கட்டளைகளும் தேவனுடைய ஜனங்கள்,

அவருடைய நன்மைகள் மற்றும் அவருடைய கிருபை இரக்கத்திற்கான அவர்களது கடமையை நினைவு கூறவுமே ஏற்படுத்தப்பட்டது.

தேவனுக்கு நேரம் கொடுக்க முடியாத அளவிற்கு அலுவல்கள் நிறைந்தவர்களாக இருக்கின்றீர்களா? நமது மிகுந்த அலுவல்கள் மத்தியில் தேவன் நமக்கு என்ன செய்துள்ளார் என்பதை மறந்து விடுகின்றோம். தேவனுக்காகவும் அவர் நம் வாழ்க்கையில் செய்யும் கிரியைகளுக்காகவும் களிகூர்ந்து மகிழ நமக்கு நேரமில்லை. சில நேரங்களில் நாம் நம்மையே சார்ந்து வாழுவதைப் போல் வாழுகின்றோம். இதனால் தேவன் நமக்குத் தூரமானவராகவும், அவருக்குள் நம் அனுபவங்கள் மட்டுப்படுத்தப் பட்டதாகவும் மாறிவிடுகின்றது.

ஆதி சபையிலே அப்பம் பிட்குதல் என்பது ஒரு கொண்டாட்டமாக காணப்பட்டது. விசுவாசிகள் ஐக்கியப்பட்டு போஜனம் பண்ணுகையில் தேவனுடைய நன்மைகளிலும் அவருடைய ஆசீர்வாதங்களிலும் களிகூர்ந்தார்கள். அந்த ஐக்கிய போஜனத்தின் ஒரு பகுதியாக அவர்கள் தங்களுக்கு மன்னிப்பையும் நித்திய ஜீவனையும் கொடுத்த ஆண்டவாரகிய இயேசுவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் நினைவு கூற நேரமெடுத்தார்கள். அந்த குறிப்பிட்ட நேரத்தில் மற்றைய அனைத்தும் நிறுத்தப்பட்டது. சிந்தையும் இருதயமும் தேவனாகிய கர்த்தரை, அவருடைய நன்மைகளை, அவருடையஇரக்கம் மற்றும் அவருடைய தயையை நோக்கிப் பார்த்தது. அவர்கள் மன்னிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக தேவன் தம் குமாரனை அனுப்பியதற்காக அவரைத் துதித்தார்கள். ஒன்றாக கூடி அப்பம் பிட்குதலின் மூலம் ஆதி சபை தங்கள் இரட்சகரை நினைவு கூற நேரமெடுத்தது. ஒரு வழக்கத்தின் அடிப்படையில் அவரை அவர்களுக்கு முன் நிறுத்தினர். அவருக்கு நன்றி செலுத்தினர். அவரை உயர்த்தினர். அவர்கள் சார்பாக அவர் செலுத்தின மகா பெரிய தியாக பலியை நினைவு கூர்ந்தார்கள்.

அப்பம் பிட்குதல் என்னும் செயல் ஜனங்கள் தங்கள் வாழ்க்கையின் அலுவல்களை நிறுத்திவிட்டு தேவனுடைய அன்பைப் பற்றிச் சிந்திக்க இடம் கொடுத்தது. அவர்களுக்காக மரித்தவர், அவர்களை போஷிக்கிறவர், அவர்களுக்காக தம் பரலோக மகிமையை விட்டு இறங்கினவர் நிச்சயம் அவர்களின் தேவைகளை சந்திப்பார். இவ்விதமாக இவர்கள் நினைவு கூற நேரமெடுத்தபோது தங்கள் வாழ்க்கையில் எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதனையும் சிந்தித்தார்கள். ஆண்டவரின் தியாக பலி அவர்களுக்கு முன்பாக எப்போதும் இருப்பதனால் அவர்கள் எவ்வாறு வாழவேண்டும்? அவர்கள் அவரிடம் சரணடைவார்களா? தங்கள் வாழ்க்கையை அவருக்கு முன் சமர்ப்பணம் செய்வார்களா?

ஆதி சபை, அப்போஸ்தலருடைய உபதேசத்திற்கும் ஐக்கியத்திற்கும் தங்களை அர்ப்பணித்திருப்பதற்கு சில தியாகங்களையும் சில கடின உழைப்பையும் கொடுக்க நேர்ந்தது. ஆனால் மூன்றாவது கொள்கையாகிய அப்பம் பிட்குதல் மூலம் கிறிஸ்துவைப் பற்றி சிந்தித்து தியானிக்க அவர்கள் தங்கள் வேலைகளையெல்லாம் நிறுத்த நேர்ந்தது.போதனை மற்றும் ஊழியத்தில் அதிகமாக என்னை ஈடுபடுத்திக் கொள்வதனால் தேவனுடைய பாதத்தில் அதிக நேரம் செலவழிக்க தவறி விடுகின்றேன் என்னும் குற்றமனசாட்சி எனக்கு அடிக்கடி ஏற்படுவதுண்டு. இதுதான் லூக்கா 10ம் அதிகாரத்திலுள்ள மார்த்தாள் மரியாளுடைய கதையிலும் நடைபெற்றது. மரியாள் இயேசுவின் பாதத்தில் அமர்ந்து அவர் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். மார்த்தாளோ அவருக்கு சேவை செய்வதில் மிகவும் வேலையாயிருந்தபடியால் அவர் பாதத்தில் அமர்ந்து அவர் பேசுவதைக் கேட்க நேரமில்லாதிருந்தது. மரியாள் அவளுக்கு உதவி செய்யாதபடியினால் அவள் எரிச்சலடைந்த பொழுது இயேசு சொன்னார்:

*41 இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: மார்த்தாளே,*

*மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக்குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய்.*

*42 தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார். (லூக்கா 10:41-42)*

தேவனுக்கு ஊழியம் செய்வதில் நாம் மிக அலுவலுள்ளவர்களாக இருக்கக் கூடாது என நான் சொல்ல வரவில்லை. எல்லா விசுவாசிகளிடமும் இது எதிர்பார்க்கப்படுகின்ற ஒன்றாகும். ஆனாலும் நான் என்ன சொல்ல விரும்புகின்றேன் என்றால் எங்கள் மிகுந்த அலுவல்கள் இடையில் இயேசுவின் பாதத்தில் உட்கார்ந்து இளைப்பாறவும் அவர் பேசுவதைக் கேட்கவும் அவர் செய்த கிரியைகளை நினைவு கூறவும், அவருடைய பெலத்தை அறிந்து கொள்ளவும் நாம் எப்போதும் நேரத்தை தேடிக் கொள்ள வேண்டும். ஆதி சபை மிகுந்த அலுவல்கள் மத்தியில்தான் இருந்தது. தேவனுடைய இராஜ் ஜியத்திற்காக அவர்கள் மிகுந்த தியாகம் செய்தார்கள்.

ஆனாலும் அவர்கள் தங்களின் அலுவல்கள் மத்தியில் அப்பம் பிட்குதலுக்கு நேரமெடுக்க தங்களை ஒழுக்கப்படுத்திக் கொண்டார்கள். தங்கள் வேலைகளை நிறுத்தி விட்டு கிறிஸ்துவின் பிரசன்னத்தில் அமர்ந்து, அவருடைய நன்மைகளைக் கொண்டாடி அவர்களுக்காக அவர் செய்த கிரியைகளை நினைவு கூர்ந்தார்கள். இவ்வாறு அவர்கள் செய்ததன் மூலம் அவர்கள் ஆண்டவராகிய இயேசுவுக்கும் அவருடைய கிரியைகளுக்கும் தங்கள் வாழ்க்கையின் முக்கிய நோக்கமாகவும் முதன்மையானதாகவும் இடம் கொடுத்தார்கள்.

இவற்றை நான் சிந்தித்துக் கொண்டிருக்கையில் என் எண்ணங்கள் வெளிப்படுத்தல் 3:20ல் கூறப்பட்டுள்ள லவோதிக்கேயா சபை நோக்கி சென்றது. இந்த சபையும் மிகுந்த அலுவல்கள் நிறைந்த சபைதான். அங்கேயும் ஒரு

குறிப்பிட்ட பிரச்சனை காணப்பட்டது. இந்த சபையைப் பற்றி எழுதும் போது இயேசு சொன்னார்:

*இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான். (வெளி 3:20)*

தங்கள் மிகுந்த அலுவல்கள் மத்தியில் ஆண்டவராகிய இயேசு அவர்கள் மத்தியில் இல்லை என்பதை சபை கவனிக்கத் தவறியது. சத்தியம், உபதேச கொள்கைகள் மற்றும் ஊழியம் ஆகியவைகளின் மேல் கவனம் செலுத்திக் கொண்டு ஆண்டவரை அலட்சியப்படுத்தி வாழுவது எத்தனை பயங்கரமானது. உங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையும் இவ்விதமாக காணப்படுகின்றதா? உங்கள் கிறிஸ்தவத்திலே அதிக ஈடுபாடுகொண்டு மிகுந்த அலுவல்கள் உள்ளவர்களாகி ஆண்டவராகிய இயேசு புறக்கணிக்கப்பட்டுள்ளார் என்பதை கண்டு கொள்ளாமல் இருக்கின்றீர்களா?

ஆதி சபையில் அப்பம் பிட்குதல் என்னும் கொள்கை மிக முக்கிய இடத்தை வகித்தது. அதைச் செய்ய அவர்கள் நேரமெடுத்தபோது தங்கள் ஆண்டவரோடு மீண்டும் தொடர்பு கொள்ளவும் அவரை நினைவு கூறவும் செய்தனர். இயேசுவே அவர்களின் நோக்கமாக இருந்தார். அவர் செய்த கிரியைகள் அவர்களுடைய கொண்டாட்டமாக இருந்தது. ஒவ்வொரு ஆண் மற்றும் பெண்ணை ஆண்டவராகிய இயேசுவுடன் இணைப்பதே பரிசுத்த ஆவியானவரின் செயல்பாடாக இருந்தது. ஜனங்கள் இயேசுவை நோக்கிப் பார்த்து அவருடைய செயல்களை நினைவு கூர்ந்த பொழுது பரிசுத்தாவியானவர் களிகூர்ந்தார்.தேவனுடைய ஆவியானவர் கிறிஸ்துவை நினைவு கூற நேரமெடுப்பவர்கள் மேலும் தங்கள் அன்பை அவர் மீது செலுத்துபவர்கள் மீதும் அசைவாட மிகவும் விருப்பமுள்ளவராயிருக்கிறார்.

தேவனுடைய ஆவியானவர் நம் மத்தியில், அசைவாடுவதை காண நாம் விரும்பினால் கர்த்தருடைய இராப்போஜனமாகிய அப்பம் பிட்குதலை நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். அதாவது நாம் செய்யும் அனைத்து காரியங்களிலும் நம் ஆண்டவராகிய இயேசுவை நம் செயல் நோக்கமாக முன்னிறுத்த வேண்டும். நாம் அவரையும், அவர் நமக்கு என்ன செய்திருக்கிறார் என்பதனையும் எப்போதும் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். அவரிலும் அவருடனுள்ள ஐக்கியத்திலும் நாம் களிகூற கற்றுக் கொள்ள வேண்டும். லவோதிக்கேய சபை கிறிஸ்துவை சேவிப்பதில் பலவித அலுவலகள் உள்ளவர்களாகி கிறிஸ்துவை மறந்து விடும் விசுவாசத்திற்குள் வந்து விட்டது. அவர்கள் சிக்கிக் கொண்ட அந்தத் தவறில் நாமும் சிக்கிக் கொள்ளாதபடிக்கு நம்மை என்ன விலை கொடுத்தாவது பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

## கவனத்திற்கு

# ஆதி சபை கர்த்தருடைய இராப்போஜனத்தை எவ்வாறு கொண்டாடியது?

# எவ்வாறு கர்த்தருடைய இராப்போஜனம் கொண்டாட்டமாகவும் நினைவு கூறுதலாகவும் இருந்தது? கிறிஸ்துவை நினைவு கூற நாம் நேரமெடுப்பது எவ்வளவு அவசியமானது?

# கிறிஸ்தவ ஊழியத்தில் மிகுந்த அலுவல்கள் நிறைந்தவர்களாயிருந்து ஆண்டவராகிய இயேசுவை மறந்து விடுவதற்கு சாத்தியங்கள் உண்டா?

# உங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையை பின்னோக்கிப் பார்ப்பதற்கு சிறிது நேரமெடுங்கள். இயேசு உங்கள் வாழ்க்கையில் என்ன அர்த்தமுள்ளவராக இருக்கின்றார்? உங்கள் மகிழ்ச்சயாக அவர் காணப்படுகின்றாரா அல்லது

அவருக்கு ஊழியம் செய்வதில் மிகுந்த அலுவல்கள் உள்ளவர்களாகி அவருக்குக் கொடுப்பதற்கு நேரமில்லாமல் போய்விட்டதா?

# நாம் கிறிஸ்துவின் நிறைவான ஆசீர்வாதத்தை அனுபவிக்காமலிருப்பதன் காரணம் நம் ஊழியத்திலும் நம் உபதேசங்களிலும் அவரை அலட்சியப்படுத்தி விட்டதாக இருக்கக் கூடுமா?

## ஜெபத்திற்கு:

# உங்கள் கிறிஸ்தவ நடையிலும் ஊழியத்திலும் அவரை மத்திய நோக்கமாக வைத்திருக்க உங்களுக்கு உதவி செய்யும்படி தேவனிடம் கேளுங்கள்.

# கிறிஸ்துவைவிட ஊழியம் முக்கியமானதாக மாறிவிட்ட நேரங்களுக்காக தேவனிடம் மன்னிப்புக் கேளுங்கள். உங்கள் வாழ்க்கையும் ஊழியமும் அவரை நோக்கமாக கொண்டதாக காணப்பட உதவி செய்யுமாறு தேவனிடம் கேளுங்கள்.

# உங்கள் சார்பாக கிறிஸ்து செய்த கிரியைகளை நினைத்துப் பார்க்க சில நிமிடங்களை எடுத்துக் கொள்ளவும். அவர் உங்களுக்குச் செய்த எல்லாவற்றிற்காகவும் நன்றி செலுத்துங்கள். உங்கள் ஊழியம் உங்கள் இருதயத்தின் ஆழத் திலிருந்து எழும்பும் அன்பின் அடிப்படையிலிருக்க அவரை இன்னும் அறிந்து கொள்ள ஜெபிக்கவும்.

# 7
# ஜெபம்

*42 அவர்கள்ஞ்ஞ்... ஜெபம் பண்ணுதலில்.. தங்களை அர்ப்பணித்திருந்தார்கள்.*

அப்போஸ்தலர் 2:42ல் ஆதி சபை தங்களை அர்ப்பணித்திருந்தாக கடைசியாக குறிப்பிட்டிருப்பது ஜெபமாகும். இந்த வசனத்தில் குறிப்பிட்டுள்ளவைகள் முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்தப்பட்டு எழுதப்படவில்லை என்பதே நீங்கள் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகின்றேன். இதிலுள்ள அனைத்துமே ஒன்றை விட மற்றொன்று முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். எடுத்துக் காட்டாக ஜெபம் என்பதைக் கவனிப்போம். தேவனுடைய ஜனங்கள் வசனத்திலுள்ள சத்தியத்தின்படி நடக்காதபோது அவர்களின் ஜெபங்கள் தடைபடும். எரேமியா தீர்க்கதரிசியின் மூலம் தேவன் பேசியதை கவனியுங்கள்:

*23 இந்த ஜனங்களோ முரட்டாட்டமும் கலகமுமான இருதயமுள்ளவர்கள்; முரட்டாட்டம்பண்ணிப் போய்விடுகிறார்கள்.*

*24 அந்தந்தப் பருவத்திலே எங்களுக்கு மழையையும், முன்மாரியையும் பின்மாரியையும் கொடுத்து, அறுப்புக்கு நியமித்த வாரங்களை எங்களுக்குத் தற்காக்கிற எங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்திருப்போம் என்று அவர்கள் தங்கள் இருதயத்திலே சொல்லுகிறதில்லை.*

*25 உங்கள் அக்கிரமங்கள் இவைகளை விலக்கி, உங்கள் பாவங்கள் உங்களுக்கு நன்மையை வரவொட்டாதிருக்கிறது (எரேமியா 5:23-25)*

இங்கு நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியதென்னவென்றால் தேவனுடைய ஜனம் பாவம் செய்தபடியால் தேவன் அவர்களுக்கு கொடுக்க விரும்பிய நன்மையை அவர்களால் பெற்றுக் கொள்ள முடியவில்லை. அவர்கள் தங்கள் பாவத்திலே தொடர்ந்து இருந்து கொண்டு, தேவனுடைய ஆசீர்வாதங்களுக்கான ஜெபத்தை அவர் கேட்பார் என எதிர்பார்க்க கூடாதிருந்தது. ஆதி சபை அப்போஸ்தலருடைய உபதேசத்திற்கு தங்களை அர்ப்பணித்திருக்காவிட்டால் அவர்களுடைய ஜெபத்திற்கு தேவன் பதிலளிப்பார் என எதிர்பார்த்திருக்க முடியாது.

இதே உண்மை ஆதி சபையின் ஐக்கியத்திற்கும் பொருந்தும். அவர்கள் ஐக்கியத்திற்கு தங்களை அர்ப்பணிக்காமலிருந்தால், தேவன் அவர்களின் ஜெபத்தைக் கேட்பாரென்று எதிர்பார்க்க முடியாது. நம் சகோதர சகோதரிகளின் தப்பிதங்களை நாம் மன்னிக்காமல் போனால் தேவன் நம் பாவங்களை மன்னிக்க மாட்டாரென்று மத்தேயு 6:15 கூறுகின்றது. புருஷன் தன் மனைவிக்கு கொடுக்க வேண்டிய கனத்தைக் கொடுக்காவிட்டால் அது அவனுடைய ஜெபத்திற்கு தடையாக இருக்கும் என அப்போஸ்தலன் பேதுரு குறிப்பிடுக்கின்றார்.

அந்தப்படி புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயி ருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடைவராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக் கொள்ளுகிற வர்களானபடியினால், அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள். *(1 பேதுரு 3:7)*

ஆதி சபை தங்களை அர்ப்பணித்திருந்த ஒவ்வொரு நோக்கத்திற்குமிடையில் ஒரு தொடர்பு காணப்படுகின்றது. ஒரு மோட்டார் வாகனத்தின் இயந்திர பாகங்களைப் போல

அவர்கள் இணைந்து செயல்பட்டார்கள். வாகனத்தின் ஒரு பகுதி செயல்படாமல் போகும்போது அது அந்த வாகனத்தின் மற்றைய எல்லா பாகங்களிலும் உணரப்படும். ஒருவர் மற்றவரைப் பார்க்கிலும் பெரியவரல்ல. சபையாகிய சரீரம் ஆரோக்கியமுள்ளதாக ஆவியானவரின் முழுமையான ஊழியம் அவர்கள் மத்தியில் செயல்படுவதை அவர்கள் அனுபவிக்க வேண்டுமானால் அவர்கள் இணைந்து செயல்படவேண்டியது அவசியம்.

ஆதி சபை தன்னை அர்ப்பணித்திருந்தவைகளுடன் ஜெபம் எவ்வாறு இணைக்கப்பட்டிருந்து என்பதை கவனித்துப் பார்க்க ஜெபத்தின் குணாதிசயத்தைப் பற்றி நாம் அறிந்து கொள்வது அவசியம். ஜெபத்தைக் குறித்து அநேக பாடங்களை நாம் எழுதலாம். ஆனால் இங்கே நம் நோக்கம் அப்போஸ்தலர் 2ல் உள்ள கருத்தின் அடிப்படையில் ஜெபத்தைக் குறித்து கவனிப்பதாகும். இதில் ஜெபத்தைக் குறித்து இரண்டு கருத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

முதலாவதாக ஜெபமென்பது தேவனுடைய ஞானத் திற்காகவும் அவருடைய தயவிற்காகவும் தேவனைத் தேடு வதுடன் தொடர்புடையது. இன்றைய நாட்களிலுள்ள சபைகளில் கல்வியறிவு மற்றும் அனுபவங்கள் அதிகம் வலியுறுத்தப் படுவதால் ஜெபத்திற்கான முக்கியத்தும் குறைக்கப்பட்டுவிடும் ஆபத்து காணப்படுகின்றது. சபையின் நிர்வாகக் குழு கூட்டம் ஜெபத்திற்கான இடத்தை எடுத்துவிடுகின்றது. தேவனுடைய தயவையும் ஆலோசனையையும் தேடும் இடத்தை அனுபவமும் கல்வியறிவும் எடுத்துக் கொள்கின்றது.

சமீப வருடங்களில் நான் குறிப்பேடு எழுதும் பழக்கத்தை ஆரம்பித்தேன். அதில் என் வாழ்க்கையில் சம்பவிப்பவை களையும் நான் சம்பந்தப்பட்டிருப்பவைகளையும் எழுத ஆரம்பித்தேன். அதன் ஒரு பகுதியாக அவற்றிற்கான

ஜெபக்குறிப்புக்களையும் எழுத ஆரம்பித்தேன். இவ்வாறு நான் எழுத ஆரம்பித்த போதுதான் என் வாழ்க்கை சம்பந்தப்பட்ட பல விஷயங்களுக்கு நான் ஜெபிக்காமல் விட்டிருக்கின்றேன் என்னும் உண்மை என்னை அசைத்தது. எத்தனை தடவை நான் என் கல்வியறிவு என் அனுபவம் அல்லது மனித ஞானம் ஆகியவற்றை மட்டும் நம்பி தேவனுடைய ஞானத்தைத் தேடாமலிருந்திருக்கிறேன் என்பது என்னை ஆச்சரியப்படுத்தியது. நான் இன்னமும் இதில் போராடிக் கொண்டிருக்கின்றேன். என் வாழ்க்கையின் அநேக பகுதிகள் இன்னமும்தேவனுடைய தயவு மற்றும் அவரது வழிநடத்துதலுக்கு ஒப்புக் கொடுக்கப் படாமலிருந்திருக்கின்றது.

நம் சூழ்நிலைகளை நாமே சமாளித்துவிடலாம் என்று நம்மை நம்பச் செய்யும் பெருமைநம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கின்றது. நம் அனுபவங்களும் நம் கல்வியறிவும் நாம் சந்திக்கும் எந்த பிரச்சனையிலிருந்தும் நம்மை விடுதலையாக்கிவிடும் என நாம் எப்படியோ நம்பி விடுகின்றோம். நமக்குக் கிடைத்த பயிற்சிகளும் நம் திறமைகளும் கிறிஸ்துவின் சபையை கட்டியெழுப்பிவிட முடியும் எனநம்பிக் கொண்டிருக்கிறோம்.

ஜெபிப்பது என்பது நமது தேவைகளை உணருவது. நமக்கு தேவன் தேவை என்பதனால்தான் நாம் ஜெபிக்கின்றோம். அவருடைய ஞானமும் வழிநடத்துதலும் நமக்குத் தேவை என்பதனால் நாம் ஜெபிக்கின்றோம். அவருடைய தயவில்லையென்றால் நாம் தொலைந்து போனவர்கள் மற்றும் அவருடைய இராஜ்ஜியத்தின் வேலை முன்னேறிச் செல்ல முடியாது என்றபடியால்தான் நாம் ஜெபிக்கின்றோம். நாம் எண்ணிக்கையிலும் ஊழியங்களிலும் அதிகமாகிக் கொண்டே போகலாம். ஆனால் தேவனுடைய இராஜ்ஜியம் கட்டப்படும் இடமாகிய இருதயம் தொடப்படாமலேயே இருக்கும்.

ஆண்டவராகிய தேவன், அவருடைய ஞானம் மற்றும் அவருடைய ஆசீர்வாதங்கள் நம் ஊழியத்திற்கும்நம் ஊழிய தீர்மானங்களுக்கும் எவ்வளவு அவசியமுள்ளவைகள் அல்லவா? ஜெபமானது நம் வாழ்க்கையின் ஒவ்வொரு கிரியையிலும் வார்த்தையிலும் தேவ ஆவியானவரின் செயல்பாட்டைக் கொண்டுவருகின்றது. நாம் ஜெபிக்கும்போது நம் சொந்த ஞானத்தை விட்டு திரும்பி தேவனுடைய நோக்கத்தை தேட ஆரம்பிக்கின்றோம். ஆதி சபை ஜெபத்திற்கு தன்னை அர்ப்பணித்த பொழுது அவர்களின் எல்லா செயல்பாடுகளிலும் தீர்மானிங்களிலும் தேவன் இடைபட அவரை அழைத்தார்கள். தேவன் அதில் மிகவும் களிகூர்ந்து அவர்கள் ஒப்புவித்தவைகளிலெல்லாம் அவர்களை வழிநடத்தி அவர்களை ஆசீர்வதித்தார்.

இரண்டாவதாக ஜெபமென்பது தேவன் பேசுவதைக் கேட்டு அதற்கு கீழ்ப்படிதலோடு பதிலளிப்பது என்பதாகும். பொதுவாக நம்முடைய திட்டங்களிலும் நம் நிகழ்ச்சி நிரல்களிலும் தேவனுடைய ஆசீர்வாதங்களை தேடுவது மிக சாத்தியமானதாகும். நாமே எல்லாவற்றையும் நமது விருப்பப்படி ஏற்பாடு செய்துவிட்டு கடைசியாக தேவன் அவற்றை அங்கீகரிக்கும்படி அவரிடம் ஜெபிப்பது வழக்கம். இவ்வாறு செய்வது ஜெபமல்ல. ஜெபமென்து தேவனுடைய ஞானத்தையும் அவருடைய தயவையும் தேடுவது மட்டுமல்ல ஆனால் அது தேவனுக்கு செவிகொடுத்து அவருடைய வழிநடத்துதல்களைப் பின்பற்றுவதையும் சார்ந்தது.

நாம் தேவனைத் தேடுவதும் அவர் நமக்கு பதில் கொடுத்து நாம் பின்பற்ற வேண்டிய பாதையை நமக்குக் காட்டுவதும் ஜெபத்தைக் குறித்த மேன்மையான காரியமாகும். நீங்கள் கேட்க மனதுள்ளவர்களாயிருந்தால், உங்கள் ஜெபத்திற்கான பதிலாக உங்களுக்கு முன்னால் வாசலைத் திறப்பார். உங்கள் சிந்தையில் புதிய யோசனைகளைக் கொண்டுவருவார்.

உங்கள் பாதையில் உங்களை ஆறுதல்படுத்தி உங்களை உற்சாகப்படுத்தும் கருவிகளாக சிலரைக் கொண்டு வந்து உங்களை நடத்துவார். நீங்கள் தற்பொழுது போகும் பாதையில் உங்களுக்கு சங்கடமாயிருக்கிற இடங்களில் வாசல்களை அடைத்து விடுவார். சில நேரங்களில் வேதவசனத்தின் பகுதிகளை உங்களுக்குக் காட்டுவார். அவைகள் தேவனுடைய திட்டத்தைக் குறித்து உங்களோடு நேரடியாகப் பேசும். நீங்கள் எடுக்க வேண்டிய படிகளை எடுக்கத்தக்கதாக அவர் உங்களை பெலப்படுத்தி உற்சாகப்படுத்துவார். நீங்கள் செல்லும் பாதை தவறானதாக இருந்தால் அதைக் குறித்த ஆசையை உங்களை விட்டு எடுத்துப் போடுவார்.

தேவன் ஜெபத்தைக் கேட்கிறவர். அவர் நமக்காக ஆயத்தம் பண்ணியுள்ள பாதையில் நமக்கு முன்சென்று நம்மை வழி நடத்த மிகுந்த ஆவலாயிருக்கிறார். நாம் கேட்க மனதுள்ளவர்களாயிருந்தால் அவர் அப்படியே செய்வார். ஆதி சபை தங்கள் ஜெபத்தைக் கேட்டு பதிலளிக்கின்ற ஒரு தேவனை விசுவாசித்தார்கள். அவருடைய தயவை தேடுவதற்கு தங்களை ஒப்புக் கொடுத்தது மட்டுமல்ல, அத்துடன் அவர் சத்தத்தைக் கேட்டு அதற்குக் கீழ்ப்படிந்து நடக்கவும் தங்களை ஒப்புக் கொடுத்தார்கள்.

ஆதி சபை ஜெபத்திற்கு தங்களை அர்ப்பணித்திருந்த படியால், அவர்களால் கற்பனை செய்து பார்க்கக் கூடாத அளவில் தேவன் அவர்களை வழிநடத்தினார். சில நேரங்களில் அவருடைய வழிநடத்துதல் அவர்கள் தீர்மானத்திற்கு எதிரா யிருந்தது. சில நேரங்களில் அவருடைய வழிநடத்துதல் அவர்களுடைய அனுபவம் மற்றும் கல்வியறிவினால் புரிந்து கொள்ள முடியாததாக இருந்தது.தேவனுடைய வழிநடத்துதலுக்கு கீழ்ப்படிவதற்காக மிகுந்த விலைக்கிரயம் கொடுக்க வேண்டிய சில நேரங்களுமிருந்தன. அப்போஸ்தலர் 13:2-3ல் குறிப்பிட்டுள்ளதைக் கவனியுங்கள்:

*2 அவர்கள் கர்த்தருக்கு ஆராதனைசெய்து, உபவாசித்துக் கொண்டிருக்கிறபோது: பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றினார்.*

*3 அப்பொழுது உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை அனுப்பினார்கள்ஜெபவேளையிலே தேவன் விசுவாசிகளிடம் பேசி, அவர்களின் மிகச் சிறந்த தலைவர்களில் இருவரை பிரித்து அனுப்பி விடும்படி கூறுகின்றார். இது அவர்கள் செய்யக் கூடிய ஒரு சாதாரண தியாகமல்ல.*

காணாமற் போனவர்களை சந்திப்பதற்காக இருந்தாலும் தேவன் அவர்களுடைய மிகச் சிறந்ததை கொடுக்கும்படி கேட்கின்றார். சபை இதைக் கேட்டவுடன் கீழ்ப்படிந்து செயல்பட்டார்கள். பிதாவின் சித்தத்தையும் நோக்கத்தையும் நிறைவேற்ற அவர்கள் இருவரையும் பிரித்து அனுப்பினார்கள். ஜெபமும் கீழ்ப்படிதலும் ஒன்றோடொன்று இணைந்து செயல்படுபவைகள். தேவன் பேசுவதற்கு செவிகொடுத்து கீழ்ப்படிய மனதில்லாவிட்டால் உத்தமமாய் ஜெபிக்க முடியாது.

சில வேளைகளில் நம் ஜெபத்திற்கு பதிலாக தேவன் நாம் வாழ்க்கையில் நெஞ்சார விரும்புகின்றவைகளை அவரிடம் கொடுத்து விடுமாறு கேட்கலாம். சில நேரங்களில் நாம் அறிந்திராத ஒன்றிற்குள் விசுவாசத்தில் காலடி எடுத்து வைக்குமாறு கேட்கலாம். முற்றிலும் வித்தியாசமான விதத்தில் நாம் அவரைப் பின்பற்ற நம் வாழ்க்கையின் தனிப்பட்ட தரிசனங்களையும் இலக்குகளையும் ஒப்புக்கொடுக்கும்படி நம்மிடம் அவர் கேட்கலாம். நீங்கள் ஜெபத்திற்கு உங்களை அர்ப்பணிக்கும் பொழுது உங்களை அறியாமலே கீழ்ப்படிதலுக்கு உங்களை ஒப்புக் கொடுக்கின்றீர்கள்.

தேவனுடைய ஞானத்தையும் வழிநடத்துதலையும் நீங்கள் கேட்டு. தனிப்பட்ட இழப்பு வந்தாலும் அல்லது கடுமையான சூழ்நிலைகள் ஏற்பட்டாலும் அந்த பாதையைப் பின்பற்ற உங்கள் இருதயத்தில் தீர்மானிக்கின்றீர்கள்.

தேவன் பேசுவதைக் கேட்க உங்களுக்கு விருப்பமில்லையென்றால் அவருடைய வழிநடத்துதலுக்காக ஜெபத்தில் அவரைத் தேடி வராதீர்கள்.

உண்மையான ஜெபம் ஒப்புக்கொடுக்கப்பட்ட இருதயத்திலிருந்து மட்டுமே வரமுடியும். மற்றைய எல்லாவற்றையும் விட தேவனுடைய நோக்கத்தையும் சித்தத்தையும் அதிகமாகத் தேடும் இருதயத்திலிருந்தே இப்படிப்பட்ட ஜெபம் வரமுடியும். என்ன விலை கொடுக்க நேர்ந்தாலும் தேவன் கேட்பதை செய்ய ஒப்புக்கொடுக்க சித்தமுள்ள இருதயத்திலிருந்தே இப்படிப்பட்ட ஜெபம் வரமுடியும். இது உங்கள் அணுகு முறையாக மற்றும் ஒப்புக் கொடுத்தலாக இல்லாவிட்டால் நீங்கள் ஜெபத்திற்கு அர்ப்பணித்தவர்களாக மாறமுடியாது.

ஜெப மனப்பான்மையில் தேவனுடைய ஆவியானவர் மகிழ்ச்சியடைகின்றார். இவ்வித மனப்பான்மை தேவன் ஆச்சரியமான விதத்தில் செயல்படுவதற்கானவாசல்களைத் திறக்கின்றது. தேவனையும் அவரது நோக்கத்தையும் தங்கள் வாழ்க்கையில் தேடும் மக்கள் இருக்கும்போது, அவர்கள் கற்பனை செய்து கூட பார்த்திராத காரியங்களை அவர் காட்டுவார். அப்படிப்பட்ட இருதயமுள்ள மக்களை அவர்கள் இதுவரை அனுபவித்திராத ஆசீர்வாதங்களுக்குள் நடத்துவார். கடினமான பாதைகளும் தியாகங்களும் இல்லாமல் இவை நிறைவேறாமலிருக்கலாம். ஆனாலும் இந்த தியாகங்கள் தேவனுடைய ஆவியானவர் சமுதாயத்தை புதுப்பித்து மறுரூபமாக்குவதற்கான வாசல்களை நிச்சயமாக திறந்து விடும்.

ஜெபமென்பது தேவனையும் அவரது சித்தத்தையும் அவரது தயவையும் தேடுவதற்கு நம்மை ஒழுக்கப்படுத்திக் கொள்வது என்பதாகும். அதுமட்டுமல்ல ஜெபமென்பது தேவன் வெளிப்படுத்துபவைகளை கேட்டு அதற்குக் கீழ்ப்படிந்து நடப்பதற்குநம்மை ஒழுக்கப்படுத்திக் கொள்வது என்பதுமாகும். இன்று நம் மத்தியில் தேவன் செயல்பட வேண்டும் என நாம் எதிர்பார்ப்போமானால் இது நம் மனப்பான்மையாக மாற வேண்டும். ஆதி சபையில் காணப்பட்ட ஜெப மனப்பான்மை நமக்குள் காணப்பட வேண்டும்.

## கவனத்திற்கு:

*# ஜெபத்திற்கும் வசன உபதேசத்திற்கு கீழ்ப்படிந்து நடப்பதற்குமிடையிலுள்ள தொடர்பு என்ன? அப்போஸ்தலருடைய உபதேசத்தின்படி நடக்க நாம் ஒப்புக்கொடுக்காமல் உண்மையாக ஜெபிக்க முடியுமா?*

*# ஜெபத்திற்கும் ஐக்கியத்திற்கும் இடையிலுள்ள தொடர்பு என்ன? ஐக்கியம் உடைக்கப்படுதல் எவ்வாறு ஜெபத்தை தடை செய்கின்றது?*

*உங்கள் வாழ்க்கையில் தேவனிடம் ஜெபத்தில் ஒப்புக்கொடுக்காத பகுதிகள் ஏதேனும் உண்டா? தேவனைச் சார்ந்திராமல் உங்கள் அனுபவம் திறமைகள் மற்றும் கல்வியறிவை சார்ந்திருக்கும் சோதனை உங்களுக்கு உண்டா? அது எவ்வளவு தீவிரமானது?*

*# ஜெபத்திற்கு தன்னை அர்ப்பணித்திருக்கும் ஒரு நபருடைய மனப்பான்மையை விளக்குக. இவ்வித மனப்பான்மை, தேவ ஆவியானவரின் ஆச்சரியமான செயல்களுக்கு எவ்வாறு வாசலைத் திறக்க முடியும்?*

## ஜெபத்திற்கு:

# ஜெபத்தின் முக்கியத்துவத்தை பற்றி கற்றுத் தரும்படி தேவனிம் கேளுங்கள். உண்மையாக ஜெபத்திற்கு தன்னை அர்ப்பணித்த ஒருவரின் மனப்பான்மை உங்களுக்கும் இருக்க உதவி செய்யுமாறு ஜெபியுங்கள்.

# தேவனுடைய வழிநடத்துதலையும் அவரது ஆசீர்வாதத்தையும் அறிந்து கொள்ளும் இருதயத்தை தரும்படி தேவனிடம் கேளுங்கள். அவர் எதில் உஙகளை நடத்துகின்றாரோ அதற்கு கீழ்ப்படிந்து நடக்க உங்கள் ஒப்புக் கொடுத்தலுக்காக ஜெபியுங்கள்.

# நீங்கள் சந்தித்த சூழ்நிலைகளில் பல நேரங்களில் தேவனைத் தேடாமல் உங்கள் வழிகளில் செயல்பட தீர்மானித்தற்காக உங்களை மன்னிக்கும்படியாக தேவனிடம் கேளுங்கள்.

# ஆதி சபை ஜெபத்திற்கும் தங்கள் எல்லாக் காரியங்களிலும் தேவனுடைய இருதயத்தை தேடுகிறதற்கும் தங்களை அர்ப்பணித்திருந்த அதே அர்ப்பணிப்புஉங்களிலும் உங்கள் சபையிலும் காணப்பட தேவன் செயல்படுமாறு ஜெபியுங்கள்.

# 8
# பிரமிப்பு

*. . . . எல்லோருக்கும் பயமுண்டாயிற்று (அப்போஸ்தலர் 2:43)*

ஆதி சபை நான்கு முக்கிய கொள்கைகளுக்குத் தங்களை அர்ப்பணித்திருந்தார்கள் என்பதை கடந்த ஆறு அதிகாரங்களில் பார்த்தோம். இந்த அர்ப்பணிப்பு தேவனுடைய ஆவியானவரின் ஆச்சரியமான செயல்களுக்கு அவர்கள் மத்தியிலும் அவர்களின் சமுதாயத்திலும் வாசலைத் திறந்தது. புதிய தொழில் நுட்பங்கள் மற்றும் திட்டங்களை தேடிக் கொண்டிருக்கின்ற நாம் இந்த நான்கு முக்கிய கொள்கைகளின் அவசியத்தைக் காண தவறி விட்டோம். இந்தக் கொள்கைகள் அவர்களின் சமுதாயத்தை மறுமலர்ச்சியடையச் செய்தது. இதன் விளைவாக அங்கே என்ன நடந்தது என்பதனை வசனம் 43-47 வரையுள்ள பகுதியில் காண்கின்றோம்.

தேவனுடைய ஆவியானவரின் செயல்பாட்டின் முதல் விளைவாக அனைவருக்கும் பயமுண்டாயிற்று என வசனம் 43 சொல்லுகின்றது. பயம் அல்லது பிரமிப்பு என்னும் வார்த்தைக்கு கிரேக்க பாஷையில் போபோஸ் என்னும் வார்த்தை பயன்படுத்தப் பட்டுள்ளது. இதற்கு பயங்கரம், பயபக்தி அல்லது மரியாதை என்றும் பொருள்படலாம். புதிய ஏற்பாட்டில் இந்த வார்த்தை பல இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. எடுத்துக் காட்டாகஇயேசு கடலின் மேல் நடந்து சீஷர்களிடம் வந்த சம்பவத்தை கவனிப்போம்:

> *அவர் கடலின்மேல் நடக்கிறதைச் சீஷர்கள் கண்டு, கலக்கமடைந்து, ஆவேசம் என்று சொல்லி, பயத்தினால் அலறினார்கள். (மத்தேயு 14:26)*

ஆண்டவராகிய இயேசு கடலின் மேல் நடந்து வருவதைப் பார்த்த சீஷர்களுக்கு அது யாரென்று தெரியவில்லை. அது ஒரு பேய் என நினைத்து பயத்தில் அலறினார்கள். சீஷர்கள் அன்று அனுபவித்த பயம் அவர்களை சக்திக்கும் அப்பாற்பட்ட பயமாக இருந்தது. அறியாத ஒன்றைப் பார்த்து பயந்தார்கள். இது அவர்களின் திறமைக்கும் புரிந்து கொள்ளுதலுக்கும் அப்பாற்பட்டதாக இருந்தது. அந்த சூழ்நிலையில் அவர்களால் என்ன செய்வது என்று தெரிந்திருக்கவில்லை. ஆகவே அந்த சூழ்நிலை அவர்களை குழப்பத்தில் ஆழ்த்தியது.

தேவனுடைய கிரியைகளில் சில நம்மால் மிகவும் எதிர்பாராதவைகளாக இருக்கும். அவை நம் கட்டுப்பாட்டில் இல்லை. அப்பொழுதுநம்முடைய இருதயம் முழ்கடிக்கப்பட்ட நிலையில் காணப்படும். என்ன நடக்கின்றது என்பதை தர்க்கரீதியாக நம்மால் விளங்கப்படுத்தவும் முடியாது.

இது நம்மை எங்கே கொண்டு போய்விடும் என்பதுவும் நமக்குத் தெரியாது. அந்த நாட்களில் நடைபெற்ற சம்பவங்களை கவனித்த ஜனங்களுக்கு என்ன சம்பவித்துக் கொண்டிருக்கின்றது என விளங்கப்படுத்த முடியவில்லை. இதுவரை அவர்கள் கண்டிராத ஒரு வல்லமை அங்கே செயல்பட்டுக் கொண்டிருந்தது. அந்த வல்லமையைப் பார்த்து அவர்கள் பயந்தார்கள். அந்த வல்லமை அவர்களின் மரியாதையை எதிர்பார்த்தது.

மத்தேயு 28:1-4ல் இதைப் போன்ற ஒரு சம்பவம் நடைபெற்றது. இயேசுவின் சரீரம் கல்லறைக்குள் வைக்கப்பட்டிருந்தது. மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் ஓய்வு நாளுக்கு அடுத்த நாள் கல்லறைக்குப் போனார்கள். அப்பொழுது பூமி மிகவும் அதிர்ந்து, தேவனுடைய தூதன் ஒருவன் கீழே இறங்கி வந்து கல்லறையை மூடியிருந்த கல்லைப் புரட்டிப் போட்டான். அந்த தூதனுடைய ரூபம் மின்னல்போலவும், அவனுடைய வஸ்திரம் உறைந்த மழையைப்போல வெண்மையாகவும்

இருந்ததுஎன மத்தேயு *28:3* கூறுகின்றது. அங்கிருந்த காவலர்களுக்கு என்ன நடந்தது என மத்தேயு *28:4* கூறுகின்றது.

> காவலாளர் அவனுக்குப் பயந்ததினால் திடுக்கிட்டுச் செத்தவர்கள் போலானார்கள். (மத்தேயு 28:4)

கிரேக்க பாஷையில் அப்போஸ்தலர் *2:43*ல் குறிப்பிட்டுள்ள அதே வார்த்தை (போபோஸ்) இங்கேயும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்த காவலர்கள் அன்று அனுபவித்தவைகளின் பயத்தினால் மயக்கமடைந்தார்கள் என்றே சொல்ல வேண்டும். இங்கேயும் அங்கு நடைபெற்றவைகள் அவர்களை பாதிக்கும் அளவிற்கு நடைபெற்றபடியால் அவர்கள் பயந்தார்கள்.

இன்னுமொரு சம்பவத்தில் இயேசுவும் அவருடைய சீஷர்களும் படகில் ஏறி அக்கரைக்குப் போய்க் கொண்டிருந்தனர். அவ்வாறு அவர்கள் போகும்பொழுது இயேசு படகில் நித்திரையாயிருந்தார். அப்பொழுது கடலிலே புயல்காற்று உண்டாகியதால் சீஷர்கள் தாங்கள் மரித்துப் போவோம் எனப் பயந்து. இயேசுவை எழுப்பி, உதவி செய்யும்படி கேட்டார்கள். அப்பொழுது இயேசு எழும்பி காற்றையும் கடலையும் பார்த்து அதட்டியபொழுது அவைகள் அமைதலடைந்தன. அப்பொழுது சீஷர்களுக்கு சம்பவித்ததை வசனத்தில் கவனியுங்கள்:

> அவர்கள் மிகவும் பயந்து: இவர்யாரோ? காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்று, ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள். (மாற்கு 4:41)

சீஷர்கள் மிகவும் பயந்தார்கள். (போபோஸ்) தாங்கள் இதுவரை கண்டிராத அளவு வல்லமைகளையுடைய ஒருவர் அவர்கள் முன்பு இருப்பதை உணர்ந்தார்கள். அன்றைய நாளில் அவர்களுக்கு இயேசுவின் மீது புதியதொரு மரியாதை உண்டாயிற்று. அவர் சாதாரண மனிதரல்ல என்பதை அறிந்து கொண்டார்கள். அவர் தேவனுடைய குமாரன். அவர் சமூகத்தில்

நிற்க பயப்பட்டார்கள். அவருடைய வல்லமையைப் பார்ந்து மிகவும் பயந்தார்கள். ஒரே படகில் அவருடன் இருக்க தகுதியானவர்களில்லை என உணர்ந்தார்கள்.

அப்போஸ்தலர் 2:43ல் கூறப்பட்டுள்ள பயமுண்டா யிற்று என்னும் வார்த்தை வலுவான வார்த்தையாகும். இந்த வார்த்தைக்குள் பய உணர்வும் ஆழ்ந்த பயபக்தியும் அடங்கியுள்ளது. அந்த நாட்களில் செயல்பட்ட வல்லமை மரியாதையை கோரியது. அந்த வல்லமைக்கு சவால் விட யாருக்கும் தைரியமில்லை.

வசனம் 43 எல்லோருக்கும் பயமுண்டாயிற்றென்று கூறுகின்றது. வசனம் 44ல் விசுவாசிகலெல்லாரும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகள் அனைவரும் அந்த நாட்களில் சம்பவித் தவைகளைப் பார்த்து ஒன்றுபோல பயத்தால் நிறைந்தனர் என புரிந்து கொள்ளலாம். சமுதாயத்திலிருந்த அவிசுவாசிகள் ஒருவேளை தங்கள் வாழ்க்கையை ஆண்டவராகிய இயேசுவுக்கு ஒப்புக் கொடுக்காம லிருந்திருக்கலாம், ஆனால் தங்களை சுற்றிலும் நடப்பவைகளை கவனிக்காமலிருக்க முடியவில்லை. அவர்கள் எவற்றைப் பார்த்தார்களோ அவற்றினால் அவர்களுக்கு பயமுண்டாயிற்று. அது பரிசுத்த பயமாக இருந்தது. அவிசுவாசிகள் கூட பார்த்து சந்தேகப்பட முடியாத அளவில் ஆதி சபையில் வல்லமை செயல்பட்டது.

அப்போஸ்தலர் 5ல் குறிப்பிட்டுள்ள சம்பவத்தை கவனியுங்கள். அனனியா சப்பீராள் என்னும் தம்பதியினர் தங்கள் நிலத்தை விற்று அதில் ஒரு பங்கை தேவையுள்ளவர்களுக்கு கொடுக்கும்படி அப்போஸ்தலரிடத்தில் கொண்டு வந்தனர். இங்கிருந்த பிரச்சனை என்னவென்றால் அவர்கள் பெற்ற தொகையைக் குறித்து பொய் சொல்லும்படி தங்கள் இருதயத்தில் தீர்மானித்திருந்தார்கள். அனனியா பணத்துடன்

வந்த பொழுது தேவன் இதை பேதுருவுக்கு வெளிப்படுத்தினார். பேதுரு அவனுடைய பொய்க்காக அவனைக் கடிந்து கொண்டார். விளைவாக அனனியா ஏமாற்றியதற்காக தேவன் அவனை அடித்து மரித்துப் போனான். பின்னர் அவனுடைய மனைவியும் அப்போஸ்தலரிடத்தில் வந்து கிடைத்த பணத்தின் அளவைக் குறித்துப் பொய் சொன்னாள். அவளையும் தேவன் அடித்தபடியால் அவளும் மரித்தாள். அப்பொழுது சமுதாயத்தில் என்ன நடந்தது என்பதைக் கவனியுங்கள்.

> சபையாரெல்லாருக்கும், இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும், மிகுந்த பயமுண்டாயிற்று. (அப்போஸ்தலர் 5:11)

நம்மில் யார் தேவனுடைய பிரசன்னம் நம் மத்தியில் இருப்பதை அறிந்து கொள்ள விரும்ப மாட்டோம்? ஆனாலும் தேவனுடைய பிரசன்னத்தை நாம் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. நம்முடைய தேவன் அவருடன் சரியான உறவில் இல்லாதவர்களுடைய இருதயத்தில் பயத்தைக் கொடுத்து ஊக்கமளிக்கும் பரிசுத்த தேவன். நம்முடைய பாவமே அவருக்கு தடையாக இருக்கின்றது. அவருடைய பரிசுத்த பிரசன்னத்தில் நின்று தங்கள் வாழ்க்கையைக் குறித்து பயப்படாமலிருக்க யாரால் முடியும்?தேவனுடைய பிரசன்னம் பரிசுத்த பயத்தையும் பயபக்தியையும் தந்து நம்மை ஊக்கப்படுத்துகின்ற ஒன்றாகும்.

வெளிப்படுத்தல் 1ம் அதிகாரத்தில் யோவான் ஆண்டவராகிய இயேசுவைக் குறித்த வெளிப்பாட்டைப் பெற்றுக் கொண்ட போது, செத்தவனைப் போல கீழே விழுந்தேன் என கூறுகின்றார். (வெளிப்படுத்தல் 1:17) ஏசாயா தேவ தரிசனத்தைக் கண்டபோது பயத்தில் கதறினான். (ஏசாயா 6:5) இந்த பெரிய தேவமனிதர்கள் தங்களின் மரியாதையையும் ஆராதனையையும் எதிர்ப்பார்க்கும் பரிசுத்த தேவனின் பிரசன்னத்தை அனுபவிப்பது என்றால் என்ன என அறிந்திருந்தனர்.

தேவன் உங்கள் வாழ்க்கையிலும் உங்கள் சபை யிலுள்ளவர்களின் வாழ்க்கையிலும் இப்பொழுது செய்வதை எவ்வாறு விளக்கப்படுத்துவீர்கள்? இந்த பரிசுத்த பயத்தையும் பயங்கரத்தையும் இன்று அனுபவிக்கின்றீர்களா? தேவன் தம்முடைய பிரசன்னத்தை வெளிப்படுத்தும் எல்லா இடத்திலும் இதே பயங்கரம் வெளிப்படுத்தப்படுகின்றது. தேவனுடைய வழிகளுக்கென்று தனி மரியாதை ஒன்றுண்டு. நம் பாவங்களினால் அவரை எதிர்க்கும்போது ஆரோக்கியமான பயமொன்று ஏற்படுகின்றது. தேவ பிரசன்னம் என்பது வெறும் ஆசீர்வாதமும் ஆறுதலும் மட்டுமே என நாம் எண்ணிவிடக்கூடாது. இந்த பிரசன்னத்தை அறிந்தவர்கள் இந்த பகுதியில் குறிப்பிட்டுள்ள தேவனுடைய பரிசுத்த பயத்தையும் அனுபவித்திருப்பார்கள். எடுக்கும் தீர்மானங்களில் தேவனுடைய ஆலோசனையைக் கேட்க அவர்கள் தள்ளப்பட்டது மட்டுமன்றி தங்கள் கிரியைகளிலே அவரை வேதனைப்படுத்தவும் பயந்தார்கள்.

என் சமுதாயத்திற்குள் இப்படிப்பட்ட பரிசுத்த பயமும் பயங்கரமும் ஊடுருவினால் எப்படியிருக்கும் என என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகின்றது. தேவபக்தியற்ற வாழ்க்கை முறையில் இருந்து கொண்டு, வல்லமையுள்ள தேவனுடைய பிரசன்னத்திறகுள் வரும் போது அவர்களுடைய பாவவழிகள் கடிந்து கொள்ளப்பட்டால் எப்படியிருக்கும்? என் வாழ்க்கையின் எல்லா சூழ்நிலைகளிலும் அவருடைய மகிமைக்காகவும் கனத்திற்காகவும் நிற்க நான் தவறிவிட்டேன் என்னும் உணர்வுடன் என் இரட்சகரிற்கு முன்பாக நான் நிற்கும் போது எப்படியிருக்கும்? அப்போஸ்தலனாகிய யோவான் தேவனுடைய பிரசன்னம் மிக வல்லமையாக இந்த பூமியில் வெளிப்படப்போகும் நாளொன்று வருகின்றது என கூறுகின்றார். அந்த நாளிலே பூமியில் மிக வல்லமையாக வாழ்ந்த ஆணும் பெண்ணும் கூட தேவனுடைய பரிசுத்த பயத்தையும் பயங்கரத்தையும் சந்திப்பார்கள். வெளி. 6:15-17 சொல்வதைக் கவனியுங்கள்.

*15 பூமியின் ராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத்தலைவர்களும், பலவான்களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர் யாவரும், பர்வதங்களின் குகைகளிலும் கன்மலை களிலும் ஒளித்துக்கொண்டு,*

*16 பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி: நீங்கள் எங்கள்மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற வருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக்கொள்ளுங்கள்;*

*17 அவருடைய கோபாக்கினையின் மகா நாள் வந்துவிட்டது, யார் நிலைநிற்கக்கூடும் என்றார்கள். (வெளிப்படுத்தல் 6:15-17)*

ஆதி சபைக்கு தேவனுடைய பிரசன்னம் வெளிப்படுத்தப் பட்டது. அதன் விளைவாக பரிசுத்த பயபக்தியும் பயமும் ஏற்பட்டது. தேவனாகிய கர்த்தர் அவர்கள் மத்தியில் இருக்கிறார் என்பதை சபை புரிந்து கொண்டது. அன்னியாவும் சப்பீராளும் தேவனுடைய பரிசுத்த பிரசன்னத்தை அவமதிக்க துணிகரம் கொண்டபடியால் அடிபட்டு மரித்தார்கள். தேவனுடைய பரிசுத்த பிரசன்னம் மற்றும் அவர்மேலுள்ள பயபக்தி சமுதாயத்தை நிரப்பியது. நாம் தேவனுடைய பிரசன்னத்தில் நிற்கின்றோம் என ஜனங்கள் உணர்ந்தார்கள். தேவ ஜனங்கள் தங்களை தேவனுக்கு அர்ப்பணித்து தேவபயத்தில் நடக்க ஆரம்பித்த பொழுது தேவபயம் சமுதாயத்திற்குள்ளும் பரவியது.

இப்படிப்பட்ட பிரசன்னத்திற்காக நாம் ஆயத்தமாக இருக்கின்றோமா?? தேவனுக்கு முன்பாக நிற்க ஆயத்தமாக இருக்கின்றோமா? இந்தப் பிரசன்னம் நமக்குள் பயத்தையும் மதிப்பையும் பயபக்தியையும் கொண்டுவரும். அதேநேரத்தில் நம் இருதயத்தை மகிழ்வடையப் பண்ணி நாம் நினைத்துப் பார்க்க முடியாத அளவில் நம்மை ஆசீர்வதிப்பதற்கும் காரணமாகின்றது. ஆகவே நம் இருதயங்களை அவருக்கு முன் திறந்து கொடுப்போமாக. அவருடைய நோக்கங்களுக்கு

நம் வாழ்க்கையை ஒப்புக் கொடுப்போமாக. அவருடைய பிரசன்னத்தில் நடக்கும்போது இந்த பரிசுத்த பயபக்தியை அனுபவிப்போமாக. இந்த பரிசுத்த பயம் தேவனுடைய நாமத்தின் மகிமைக்காகவும் அவருக்குள் நம்முடைய முழுமையான ஆசீர்வாதத்திற்காகவும் அவருடைய நீதியின் பாதையிலும் பரிசுத்தத்திலும் நம்மைக் காத்துக் கொள்வதாக.

## கவனத்திற்கு:

# இந்த அதிகாரத்தில் தேவனுடைய பிரசன்னத்தைக் குறித்து நாம் என்ன கற்றுக் கொண்டோம்? நம் மத்தியில் உள்ள தேவ பிரசன்னத்திற்கு நம் பதிலளிப்பு என்ன?

# இன்று தேவனுடைய பிரசன்னத்தில் நிற்பது என்பது உங்களுக்கு எப்படிப்பட்டதாக இருக்கும்? நீங்கள் வெட்கமடைவதாக உணருவீர்களா?

# உங்கள் சமுதாயத்திலுள்ளவர்கள் எந்த அளவிற்கு தேவபயமுள்ளவர்களாக இருக்கின்றனர்? தேவனைத் அவமதித்ததற்கான பயம் சபையில் காணப் படுகின்றதா?

## ஜெபத்திற்காக:

# தேவனுடைய நாமத்திற்கு மேல் இன்னுமதிக பயபக்தியைத் தருமாறும் நீங்கள் செய்யும் எல்லாவற்றிலேயும் அவரைத் திருப்திப்படுத்தும் வாஞ்சை உங்களுக்குள் ஏற்படுத்துமாறும் ஜெபியுங்கள்.

# பாவங்களை மன்னிப்பதற்காக ஆண்டவராகிய இயேசு உலகத்திற்கு வந்ததற்காக நன்றி சொல்லுங்கள். அவருடைய கிரியைகளினிமித்தம் உங்களுக்கும் உங்கள் பரலோக பிதாவுக்குமிடையில் பாவம் தடையாக இல்லாமலிருக் கின்றபடியால் நன்றி சொல்லுங்கள்.

# உங்கள் சமுதாயத்தில் தேவனுடைய நாமத்திற்குரிய பயபக்தி இன்னும் அதிகமாக ஜெபியுங்கள். தேவன் யாரென்பதை அவர்கள் அறிந்து கொள்ளவும் அவருக்கு கடமைப்பட்டவர்களாய் வாழவும் ஜெபியுங்கள்.

# 9

# அற்புதங்களும் அடையாளங்களும்

*43 ... அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்பட்டது.*

கடந்த அதிகாரத்திலே,சமுதாயம், தேவன் தன் ஜனத்தின் மூலம் தன்னை வெளிப்படுத்தியதைப் பற்றிய பயத்தினாலும் பிரமிப்பினாலும் நிறைந்திருந்ததைப் பற்றி கவனித்தோம். 43ம் வசனத்திலே தேவனுடைய பிரசன்னம் அப்போஸ்தலர்கள் மூலம் செய்யப்பட்ட அற்புதங்கள் மற்றும் அடையாளங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டதை காணமுடிகின்றது.

இதை இன்னும் விரிவாக நாம் பார்க்குமுன்னர், இந்த அற்புதங்களும் அடையாளங்களும் தேவன் தம் இராஜ்ஜியத்தின் பிரசன்னத்தை வெளிப்படுத்துவதற்குரிய வழிகளில் ஒருவழி மட்டுமே என்பதை நாம் காணவேண்டியது அவசியம். அப்போஸ்தலர் 2:42-47 வரையுள்ள பகுதி அந்நாட்களில் தேவனுடைய கிரியைகளைப் பற்றிய பல தெளிவான சான்றுகளை முன்வைக்கின்றது. நாம் ஏற்கனவே ஆதி சபை அப்போஸ்தலரின் உபதேசம், ஐக்கியம், அப்பம் பிட்குதலின் மூலம் இயேசுவை உயர்த்துதல் மற்றும் ஜெபம் ஆகியவைகளுக்கு அர்ப்பணித்திருந்ததை ஆராய்ந்தோம். ஒரு சபை இக்கொள்கைகளுக்கு நேர்மையாக தன்னை அர்ப்பணித்திருப்பதை நாம் காணும் போது தேவனுடைய ஆவியானவர் வல்லமையாக அவர்கள் மத்தியில் செயல்படுகின்றார் என நாம் கூறமுடியும். ஆதி சபையிலே தேவனுடைய ஆவியானவர் இவ்வித அர்ப்பணிப்புகளை தூண்டி விட்டார். இன்று நம் நாட்களிலும் மீண்டும் அவ்வாறு நடைபெற்றால் எவ்வளவு மேன்மையாக இருக்கும்.

வசனம் 44-47ல் விசுவாசிகள் ஒருமித்திருந்தார்கள் என்பதனைப் பற்றியும் மற்றவர்களுக்கு உதவி செய்ய தங்களுக்குரியவைகளை எவ்வாறு சந்தோஷமாக தியாகம் செய்தார்கள் என்பதனைப் பற்றியும் வாசிக்கின்றோம். அவர்கள் நன்றியுள்ளவர்களாகவும் அவர்களின் இருதயம் தேவனைத் துதிப்பதில் நிறைந்தவர்களாகவும் இருப்பதைக் காணலாம். மீண்டும் இது அவர்கள் மத்தியில் தேவனுடைய மகத்துவமான செயலுக்கு அடையாளமாக இருந்தது. தேவன் அவர்கள் அருகில் வந்து ஆவிக்குரிய காரியங்களுக்காக அவர்கள் இருதயத்தை மென்மையாக்கினார். ஒவ்வொரு நாளும் தேவன் ஜனங்களை தம்மிடத்தில் கொண்டுவந்தார். சபை தான் எதிர்பார்த்திராத வகையில் வளர்ச்சியடைந்தது. அவர்கள் மத்தியில் தேவனுடைய இராஜ்ஜியம் வரவில்லை என யாரால் சொல்லக்கூடும்? அவர்கள் மத்தியில் தேவ ஆவியானவர் செயல்படவில்லை என யாரால் சொல்லக்கூடும்? அற்புதங்களிலும் அடையாளங்களிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டு ஜனங்களுக்குள் இரட்சிப்பைக் கொண்டு வந்த தேவனுடைய ஆவியானவரின் செயல்கள், அர்ப்பணிப்பு, ஐக்கியம் மற்றும் தேவனுடைய ஜனங்களின் துதி போன்றன அலட்சியம் பண்ணப்படுகின்ற காரணத்தினாலேயே நான் இப்பகுதியின் மூல கருத்தை இங்கு குறிப்பிடுகின்றேன்

அப்போஸ்தலர் 2ல் காணப்படும் அற்புதங்களையும் அடையாளங்களையும் பற்றி ஆராயுமுன்னர் வேறு சிலவற்றை கூறவிரும்புகின்றேன். தேவனுடன் ஆழமான தனிப்பட்ட உறவை ஏற்படுத்திக் கொள்வதை விட அற்புதங்கள் மற்றும் அடையாளங்களில் அதிக கவனம் செலுத்தி விடுவது பெரும்பாலும் நடைபெறக்கூடிய ஒன்றாகும். மத்தேயு 7ம் அதிகாரத்தில் இயேசு இதைப் பற்றி தெளிவாக குறிப்பிடுகின்றார்.

21 பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில்

*பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.*

*22 அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள்.*

*23 அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்.*

இங்கே இயேசு அற்புதங்கள் செய்தவர்களைப் பார்த்து அக்கிரமச் செய்கைக்காரரே என குறிப்பிடுவதை கவனிக்க வேண்டும். இது ஒரு கடுமையான வார்த்தையாகும். உண்மையாக நடந்தது என்னவென்றால் அவர்கள் தங்கள் ஆதாயத்திற்காக ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்தியிருந்தார்கள். ஒருவேளை அவர்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட வல்லமைகள், சமுதாயத்தில் அவர்களுக்கு மதிப்பையும் கௌரவத்தையும் கொண்டுவந்திருக்கலாம். இதில் தெளிவாகத் தெரிவது என்னவென்றால் இவர்கள் தங்கள் வாழ்க்கையில் தேவனுடைய ஆவியானவரின் குணாதிசயங்களை வெளிப்படுத்தவில்லை என்பதுதான். அவர்கள் வாழ்க்கையில் அப்போஸ்தல உபதேசம், ஐக்கியம், கிறிஸ்துவை உயர்த்துதல் மற்றும் மற்றவர்களுக்கான தியாக வாழ்க்கை போன்றவற்றிற்கான அர்ப்பணிப்பை பார்க்க முடியவில்லை. இந்த பகுதியின்படி பார்த்தால் இவர்கள் ஆண்டவராகிய இயேசுவின் இரட்சிப்பை கூட அறிந்து கொள்ளவில்லை. அவருக்கு சொந்தமானவர்களாக வாழவுமில்லை.

தேவனுடைய ஆவியானவர் நம்மை உள்ளும் புறம்புமாக மாற்றக் கூடிய செயலை செய்ய விரும்புகிறார். அவர் நம் குணாதிசயங்களில் செயல்பட்டு ஆண்டவராகிய இயேசுவின் சாயலுக்கு ஒப்பாக நம்மை மாற்றுகின்றார். இவ்வாறு கிறிஸ்துவுடன் ஆழ்ந்த உறவுக்குள்ளும் நெருக்கத்துக்குள்ளும் வரும்போது வல்லமையுள்ள காரியங்கள் நடைபெற ஆரம்பிக்கும். கிறிஸ்துவோடுள்ள ஆழமான உறவுக்குள்ளும் நெருக்கத்துக்குள்ளும் வராமலேயே எவ்வாறு அற்புதங்களையும் அடையாளங்களையும் நடைபெறச் செய்யமுடியும் என்பதைப் பற்றி ஆராய்வது இங்கு நம் நோக்கமல்ல. ஆனால் ஆதி சபையில் முக்கியமாக நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால் அங்கு நடைபெற்ற அற்புதங்களும் அடையாளங்களும் தேவன் அவர்கள் மத்தியில் செய்த கிரியைகளின் ஒரு பகுதியாகவே காணப்பட்டது. அது கிறிஸ்துவோடிருந்த அவர்களின் உறவின் விளைவாக இருந்தது. அந்த உறவு தேவனுடைய ஜனங்களை தீவிரமாக மாற்றிய உறவாகும்.

இப்பகுதியின் உட்கருத்தை ஆராய்ந்த பின்னர், இப்போது நாம் அந்நாட்களில் நடைபெற்ற அற்புதங்களையும் அடையாளங்களையும் ஆராய்வது அவசியமாகும். அற்புதங்கள் என்னும் வார்த்தை அசாதாரணமான முறையில் அல்லது இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையில் ஏதோ ஒன்று நிகழ்ந்தது என்பதைக் குறிப்பிடுவதாகும். அந்த நிகழ்வை மனித வார்த்தைகளாலோ அல்லது விஞ்ஞான ரீதியாகவோ விளங்கப்படுத்த முடியாது. அவைகள் இயற்கையின் சட்டங்களை மறுதலிப்பவைகள். அது மக்களை குழப்பத்திலாழ்த்திய மிகச் சாதாரண நிகழ்வொன்றாகும் விஞ்ஞானத்திற்கும் தொழில் நுட்பத்திற்கும் அப்பாற்பட்ட ஒரு வல்லமை செயல்படுகின்றது என்பதே இதைக் குறித்த விளக்கமாக இருக்க முடியும். இந்த வல்லமை இயற்கையின் சட்டங்களுக்குக்

கட்டுப்பட்டிருக்கவில்லை. இந்த வல்லமை மற்றைய எல்லா வல்லமையைக் காட்டிலும் வல்லமையுள்ளதாக இருந்தது. அந்த வல்லமையே ஒரு தனி சட்டமாக இருந்தபடியால் அது பயப்படத்தக்கதாக இருந்தது.

பயன்படுத்தப்பட்டுள்ள அடுத்த வார்த்தையாகிய அடையாளம் என்னும் வார்த்தை நடந்த நிகழ்வு உறுதிப்படுத்தப்பட்டது அல்லது அங்கீகாரம் பெற்றது என்னும் அர்த்தத்தைக் கொண்டு வருகின்றது. அத்துடன் நடைபெற்ற அற்புதங்களுக்குப் பின்னால் ஒரு நோக்கமும் ஒழுங்கும் இருந்தது என்பதைக் காட்டுகின்றது. இந்த அற்புதங்கள் தேவனுடைய இராஜ் ஜியத்தின் பிரசன்னத்தை உறுதிப்படுத்தியது. கிறிஸ்துவை தங்கள் இரட்சகரும் ஆண்டவருமாக ஏற்றுக் கொண்டவர்களின் இருதயத்திலும் வாழ்க்கையிலும் பிதாவின் இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்பட்டது என்பதைக் காண்பிக்க இவைகள் வடிவமைக்கப்பட்டது.

இந்த அற்புதங்களும் அடையாளங்களும் அப்போஸ்தலர் களின் மூலம் செய்யப்பட்டன என வசனம் கூறுவதைக் கவனியுங்கள். இதனால் அப்போஸ்தலர்கள் மட்டுமே அற்புதங்களைச் செய்ய தகுதி பெற்றவ்கள் என எண்ணிவிடக் கூடாது. ஸ்தேவான் என்பவனும் அற்புங்களையும் அடையாளங்களையும் செய்தான் என வசனத்தில் குறிப்பிட்டுள்ளதைக் கவனிக்கவும்.

ஸ்தேவான் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான். (அப்போஸ்தலர் 6:8)

ஆண்டவராகிய இயேசு தம் சீஷர்களைப் பார்த்து உலகமெங்கும் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கச் சொல்லி அனுப்பும் போது, அவரை விசுவாசிக்கிறவர்களால் அடையாளங்கள் நிகழும் என கூறினார்.

*15 பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.*

*16 விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான்.*

*17 விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்;*

*18 சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும்*

*அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார் (மத்தேயு 16:15-18)*

விசுவாசிக்கிறவர்கள் என்னும் வார்த்தை தேவனுடைய வல்லமை அப்போஸ்தலர்களுக்கு மட்டுமுரியதல்ல, ஆனால் ஆண்டவராகிய இயேசுவின் விசுவாசத்திற்குள் வந்த அநேகருடைய வாழ்க்கையிலும் அது செயல்படுத்தப்பட்டது என்பதைக் குறிப்பிடுகின்றது.

சபையில் ஒவ்வொருவருக்கும் வித்தியாசமான வரங்களை தேவன் கொடுத்திருக்கிறார் என்று அப்போஸ்தலனகிய பவுல் கற்றுத் தருகின்றார். கொரிந்திய சபைக்கு பவுல் எழுதும் பொழுது சிலருக்கு விசுவாச வரமும் சிலருக்கு குணமாக்கும் வரமும் இன்னும் சிலருக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும் கொடுக்கப்பட்டுள்ளதாக கூறுவதை நாம் கவனிக்க வேண்டும்.

*7 ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது.*

*8 எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே*

*ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும்,*

*9 வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவி யினாலேயே குணமாக்கும் வரங்களும்,*

*10 வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதலும் அளிக்கப்படுகிறது.*

*11 இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்.*

அப்போஸ்தலர் 2:43ல் அற்புதங்களும் அடையாளங்களும் அப்போஸ்தலர்களால் செய்யப்பட்டது என தெளிவாக குறிப்பிட்டிருந்தாலும், இதே வல்லமை மற்றவர்களுக்கும் கொடுக்கப்பட்டது என்பதை இப்பகுதியிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டும். அந்த நாட்களில் அப்போஸ்தலர்கள் இந்த ஊழியத்தைச் செய்ய தேவனால் அழைக்கப்பட்டு தேவனின் சார்பாக நின்றவர்களாகையால் தேவன் அவர்கள் மூலமாக அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தார்.

இவ்வித அற்புத அடையாளங்களைப் பார்த்த சிலர் தாங்களும் இதைப் பெற்றுக் கொள்ள விரும்பினார்கள் என்பதை புதிய ஏற்பாட்டில் காணமுடியும். ஆனால் இந்த நபர்கள் இவ்வித வரங்களை கையாளுவதற்குத் தேவையான முதிர்ச்சியைப் பெற்றிருக்கவில்லை. இதற்கு எடுத்துக் காட்டான ஒரு பகுதியாக அப்போஸ்தலர் 8:18-20

வரையுள்ள பகுதியில் முன்பு மாயவித்தைக்காரனா யிருந்த சீமோன் என்பவன் அப்போஸ்தலர்கள் கைகளை வைக்கும்போது பரிசுத்தாவியானவர் தந்தருளப்படுகின்றதை கண்டு, அப்போஸ்தலரிடம் பணத்தைக் கொண்டு வந்து கொடுத்து அந்த வரத்தைத் தனக்கும் கொடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்வதை காணமுடியும்.

> *18 அப்போஸ்தலர் தங்கள் கைகளை அவர்கள்மேல் வைத்ததினால் பரிசுத்த ஆவி தந்தருளப்படுகிறதைச் சீமோன் கண்டபோது, அவர்களிடத்தில் பணத்தைக் கொண்டுவந்து:*
>
> *19 நான் எவன்மேல் என் கைகளை வைக்கிறேனோ, அவன் பரிசுத்த ஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும் என்றான்.*
>
> *20 பேதுரு அவனை நோக்கி: தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக்கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடேகூட நாசமாய்ப் போகக்கடவது.*
>
> *21 உன் இருதயம் தேவனுக்குமுன்பாகச் செம்மையா யிராதபடியால், இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை. (அப்போஸ்தலர் 8:18-21)*

பேதுரு இங்கே கடிந்து கொள்ளும் விதத்தைப் பார்க்கவும். - உன் பணம் உன்னோடே கூட நாசமாய்ப் போகக் கடவது - சீமோன் தேவ ஆவியானவரின் கிரியையை குறைத்து மதிப்பிட்டு, அதை தன் பணத்தைக் கொண்டு வாங்கிக் கொள்ளமுடியும் என நினைத்தபடியால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு சீமோனுக்கு மேல் உடனேயே வந்தது.

அப்போஸ்தலர் 19:13-16 பகுதியில் நாம் ஸ்கேவா என்னுமொருவனின் ஏழு குமாரர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் பிசாசைச் துரத்த முயற்சித்த மற்றொரு சம்பவத்தைக் குறித்து வாசிக்கின்றோம்.

*13 அப்பொழுது தேசாந்தரிகளாய்த் திரிகிற மந்திரவாதிகளாகிய யூதரில் சிலர் பொல்லாத ஆவிகள் பிடித்திருந்தவர்கள்மேல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைச் சொல்லத் துணிந்து: பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின்பேரில் ஆணையிட்டு உங்களுக்குக் கட்டளையிடுகிறோம் என்றார்கள்.*

*14 பிரதான ஆசாரியனாகிய ஸ்கேவா என்னும் ஓர் யூதனுடைய குமாரர் ஏழுபேர் இப்படிச் செய்தார்கள்.*

*15 பொல்லாத ஆவி அவர்களை நோக்கி: இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன், நீங்கள் யார் என்று சொல்லி,*

*16 பொல்லாத ஆவியையுடைய மனுஷன் அவர்கள்மேல் பாய்ந்து, பலாத்காரம்பண்ணி, அவர்களை மேற்கொள்ள, அவர்கள் நிருவாணிகளும் காயப்பட்டவர்களுமாகி அந்த வீட்டை விட்டு ஓடிப்போனார்கள். (அப்போஸ்தலர் 19:13-16)*

அந்த ஏழு பேருடைய முயற்சியின் விளைவு பாரதூரமானதாக இருந்தது. பொல்லாத ஆவியையுடைய மனிதன் அவர்களை அடித்து காயப்படுத்தி மேற்கொண்டான். அவர்கள் நிர்வாணிகளாக தங்கள் உயிரைக் காப்பாற்றி கொள்ள வீட்டை விட்டு ஓடினார்கள்.

ஆதி சபையில் காணப்பட்ட தேவனுடைய வல்லமையை சாதாரணமாக எண்ணி அதனுடன் விளையாடவோ அல்லது தனி நபரொருவருக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்ளவோ முடியாததாக இருந்தது. இந்த வல்லமையைப் பார்த்து மக்கள் பயந்து மதிப்பளித்தார்கள். அப்போஸ்தலர் 2ல் தேவன் தம் இராஜ்ஜியத்தை அவர்கள் நடுவில் வெளிப்படுத்த அப்போஸ்தலர்களைப் பயன்படுத்தினார். தேவனுடைய இராஜ் ஜியத்தின் வல்லமை ஆதி சபையின் அர்ப்பணிப்பிலும் ஒப்புக் கொடுத்தலிலும் மட்டுமன்றி அப்போஸ்தலர்கள் கைகளின்

மூலம் செய்யப்பட்ட அற்புதங்கள் மற்றும் அடையாளங்கள் மூலமாகவும் வெளிப்பட்டது.

நம்முடைய தேவன் பயங்கரமானவரும் சர்வ வல்லமையுள்ளவருமானவர். அவர் நம்மிடம் நெருங்கி வரும்போது அவருடைய பிரசன்னம் நம்மைச் சூழ்கின்றது. மோசேயின் நாட்களில், தேவன் கார்மேகம், மின்னல் மற்றும் இடியின் மத்தியில் தம்மைவெளிப்படுத்தினார். (பார்க்க யாத்திராகமம் 19:16-22). வனாந்திரத்தில் தேவன் தம் ஜனத்தின் முன்பாக சென்ற பொழுது செங்கடல் பிளந்து வழிவிட்டது. வானம் அவர்கள் உண்பதற்காக மன்னாவைப் பொழிந்தது. இஸ்ரவேல் மக்கள் கானானை சுதந்தரித்த பொழுது கானானிலுள்ள ஜாதிகள் பயப்படும் விதத்தில், தேவனுடைய பிரசன்னம் அவர்களுக்கு முன்பாக சென்றது. (பார்க்க யோசுவா 2:24) யோசுவா தன் எதிரிகளின் மேல் வெற்றி பெறும் வரை சூரியன் மறையாமல் நடுவானில் நின்றது. (யோசுவா 10:13) இயேசு உலகத்தில் வாழ்ந்த பொழுது மரித்தவர்கள் உயிரோடு எழுப்பப்பட்டார்கள். வியாதியஸ்தர்கள் சுகமானார்கள், கடலும் காற்றும் அடங்கியது. ஆபகூக் தீர்க்கதரிசி இஸ்ரவேல் ஜனங்களிடையே தேவனுடைய பிரசன்னம் வருவதைக் குறித்து எழுதியிருப்பதைக் கவனியுங்கள்.

> 3 தேவன் தேமானிலிருந்தும், பரிசுத்தர் பாரான் பர்வதத்திலிருந்தும் வந்தார்; (சேலா.) அவருடைய மகிமை வானங்களை மூடிக்கொண்டது; அவர் துதியினால் பூமி நிறைந்தது.
>
> 4 அவருடைய பிரகாசம் சூரியனைப்போலிருந்தது; அவருடைய கரத்திலிருந்து கிரணங்கள் வீசின; அங்கே அவருடைய பராக்கிரமம் மறைந்திருந்தது.
>
> 5 அவருக்கு முன்பாகக் கொள்ளைநோய் சென்றது; அவர் அடிகளிலிருந்து எரிபந்தமான காய்ச்சல் புறப்பட்டது.

*6 அவர் நின்று பூமியை அளந்தார்; அவர் பார்த்துப் புறஜாதிகளைக் கரையப்பண்ணினார்; பூர்வ பர்வதங்கள் சிதறடிக்கப்பட்டது, என்றுமுள்ள மலைகள் தாழ்ந்தது; அவருடைய நடைகள் நித்திய நடைகளாயிருந்தது (ஆபகூக் 3:3-6)*

இதைப் போன்றதொன்றை நம் நாட்களில் எதிர்பார்க்க நம்மால் கூடுமா? ஆபகூக்கின் தேவன், மோசேயின் தேவன் இன்றும் நம்மோடு இருக்கின்றார். அவருடைய பிரசன்னம் நம்மிடம் வரும்போது பர்வதங்கள் உடையுமல்லவா? அவருடைய பிரசன்னத்தில் அவருடைய கிரியைகள் அமைதலாகிவிடுமல்லவா? அவர் நம்மருகில் நெருங்கி வரும்போது சாத்தானின் அரண்கள் நொறுங்கிவிடுமல்லவா? நம்மத்தியில் தேவ பிரசன்னம் என்பது மிக ஆச்சரியமானதும் பயங்கரமானதுமாகும். அது கவனிக்கப்படாமல் கண்டு கொள்ளப்படாமல் விடக்கூடிய ஒன்றல்ல.

ஆதி சபையில் தேவன் அப்போஸ்தலர்கள் மூலம் வல்லமையாக இடைபட்டார். அவர்கள் கைகளின் மூலமாக, தேவனுடைய வல்லமையும் தேவனுடைய பிரசன்னமும் அவர்கள் சபையிலும் அவர்களின் சமுதாயத்திலும் வெளிப்படுத்தப்பட்டது. தம் இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்பட்டது என தேவன் அனைவருக்கும் நிரூபித்தார். அந்த இராஜ் ஜியம் சாத்தானின் வல்லமையை மேற்கொண்டு ஒன்றான மெய்த்தேவனின் ஆராதனையிலும் சுகத்திலும் புதுப்பித்தலைக் கொண்டு வந்தது.

ஆதி சபையின் நாட்களில் என்ன நடந்தது என நாம் ஆராய்ந்து கொண்டிருக்கும் போது நாம் கேட்கக் கூடிய சில கேள்விகளும் உண்டு: இன்றும் நாம் அதே அற்புங்களையும் அடையாளங்களையும் எதிர்பார்க்க கூடுமா? இதே வெளிப்பாடுகளை மீண்டும் காண நாம் வாஞ்சிக்கின்றோமா? இதன் முடிவாக என் கருத்தைக் கூற விரும்புகின்றேன்.

ஆதி சபையின் நாட்களில் நடந்ததெல்லாம் தேவனுடைய செயல்களாயிருந்தன. தேவன் அவர்கள் சமீபமாக வந்தபொழுது அவை நடை பெற்றன. அப்போஸ்தலர் 2:43ல் காணப்படும் அற்புங்களைச் செய்த அப்போஸ்தர்களின் வாஞ்சை, வல்லமையைப் பெற்றுக் கொள்வது மட்டுமல்ல, ஆனால் தேவனை அறிவதும் அவருடன் நடப்பதுமாக இருந்தது. வல்லமைக்காக ஆசைப்படுவதற்கும் தேவனையும் அவரது பிரசன்னத்தையும் அறிவதற்குமிடையில் மிகப் பெரிய வித்தியாசமுண்டு. சீமோன் என்னும் மாயவித்தைக்காரனும் ஸ்கேவாவின் குமாரர்களும் வல்லமையைப் பெற்றுக் கொள்ள இச்சித்தார்கள், அதற்குரிய விளைவை அனுபவித்தார்கள். அப்போஸ்தலர்கள் தேவனை வாஞ்சித்தார்கள்தேவன் அவர்கள் அருகில் நெருங்கி வர அவர்கள் ஆச்சரியமான முறையில் அற்புதங்களைச் செய்யம் அதிகாரத்தைப் பெற்றார்கள் என்பதைக் கண்டு கொண்டார்கள். இன்றும் அநேகர் வல்லமையை அதிகம் வாஞ்சித்து வல்லமையுள்ள தேவனை மறந்து விடும் வஞ்சகத்திற்குள் சிக்கிக் கொள்கின்றார்கள்.

லூக்கா 10ம் அதிகாரத்தில் ஆண்டவராகிய இயேசு தன் 72 சீஷர்களை அவரைப் பற்றி பிரசங்கிக்க அனுப்பியதைக் குறித்து வாசிக்கின்றோம். அவர்கள் போகும்பொழுது அவர்களுக்கு அதிகாரம் கொடுத்து அனுப்பினார். அவர்கள் அவ்வாறு போய் ஊழியம் செய்தபொழுது பலத்த செய்கைகளைப் பார்த்தார்கள். அதைப் பார்த்து அவர்கள் நெகிழ்ந்து போனார்கள். திரும்பி வந்து தங்கள் அனுபவத்தை இயேசுவிடம் பகிர்ந்து கொண்டனர்:

> 17 பின்பு அந்த எழுபதுபேரும் சந்தோஷத்தோடே திரும்பிவந்து: ஆண்டவரே, உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது என்றார்கள்.
>
> 18 அவர்களை அவர் நோக்கி: சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன்.

*19 இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது.*

*20 ஆகிலும், ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள்சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்றார். (லூக்கா 10:17-20)*

இங்கே இயேசு என்ன சொன்னார் என்பதைக் கவனிக்கவும். தேவனுடைய வல்லமை சீஷர்கள் மூலமாக வெளிப்பட்டதை அவர்கள் பார்த்ததற்காக அவர் சந்தோஷப்பட்டார். ஆனால் இதற்கு முக்கியத்துவம் கொடுத்து அடிப்படையாக இருக்க வேண்டிய தேவனுடனான உறவை மறந்து விடாமலிருக்க அவர்களிடம் கேட்டுக் கொண்டார். “உங்களிடத்தில் கிரியை செய்கின்ற தேவனுடைய வல்லமைக்கு முக்கியத்தும் கொடுத்து பிதாவுடனான உங்கள் உறவிற்கு முக்கியத்துவம் கொடுக்க மறந்து விடாதிருங்கள்”. என்பதே இயேசு அவர்களைப் பார்த்துச் சொன்ன காரியம். நம்மெல்லாருக்கும் சோதனையாக இருக்கக் கூடிய ஒரு பிரச்சனையைப் பற்றியே இயேசு இங்கே பேசுகின்றார். ஆண்டவராகிய இயேசு பரலோகம் விட்டு பாவிகளாகிய எங்களுக்காக இறங்கி வந்தார் என்னும் உண்மை நம்மூலம் செய்யப்படும் அற்புதங்கள் மற்றும் அடையாளங்களைப் பார்க்கிலும் முக்கியத்துவம் வாய்ந்தது. இயேசு என்னைத் தொட்டு என் ஆத்துமாவை இரட்சித்திருக்கிறார். இந்த எளிய உண்மை அற்புதங்கள் மற்றும் அடையாளங்களைப் பார்க்கிலும் ஆச்சரியமானது. இதில்தான் நாம் எப்பொழுதும் மகிழ்ச்சியடைய வேண்டும்.

தேவன் அற்புதங்கள் மற்றும் அடையாளங்கள் மூலமாக இன்று செயல்படுவது அவசியமா? நிச்சயமாக ஆம் என்பதே பதிலாக முடியும், தேவனுடைய இராஜ்ஜியம் இன்னும்

விரிவடைந்து கொண்டுதான் இருக்கின்றது. தேவன் இன்னும் ஆச்சரியமான முறையில் செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றார். உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையிலும் தேவனுடைய ஆச்சரியமான கரம் செயல்பட்டதை அனுபவித்திருப்பீர்கள் என நான் நிச்சயம் நம்புகின்றேன். பல நேரங்களில் அவருடைய அற்புத கரம் நம்மில் செயல்படுவதை நாம் அடையாளம் கண்டு கொள்வதில்லை. தேவனுடைய அற்புதமான பாதுகாப்பு, சுகம் மற்றும் வழிநடத்துதலை நம்மால் அடையாளம் கண்டு கொள்ள முடியாமல் போனாலும் அவை நிஜமானவைகள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

தேவன் நம்மை தம்முடைய அற்புதங்கள் மற்றும் அடையாளங்களை செயல்படுத்தும் கருவிகளாக பயன்படுத்த வேண்டுமென்று எதிர்பார்க்கின்றோமா?தேவன் தம்முடைய ஜனங்களை இந்த உலகத்தில் அவருடைய வல்லமையை வெளிப்படுத்தும் கருவிகளாக பயன்படுத்தி வருகின்றார். ஆவிக்குரிய வரங்களை நமக்குத் தந்து அவருடைய நாமத்தின் மகிமைக்காக அவற்றை நாம் பயன்படுத்தவேண்டுமென எதிர்பார்க்கின்றார். ஒவ்வொரு முறையும் ஒரு நபர் தேவனுடைய ஊழியர் ஒருவர் மூலமாகதேவனை ஏற்றுக் கொள்ளும் நிலைக்குள் வரும்போது அங்கே அற்புதமொன்றை காண்கின்றோம். ஒவ்வொரு முறையும் ஒரு நபர் தேவனுடைய ஜனங்களின் ஜெபத்தின் விளைவாக சரீரத்தில் சுகமடையும் போது அங்கே அற்புதமொன்றை காண்கின்றோம். தேவன் தொடர்ந்து தம் பிள்ளைகளைப் பயன்படுத்தி தம் இராஜ் ஜியத்தை பெருகச் செய்கின்றார். அந்த வேலையை நிறைவேற்றி முடிக்க அவர் தொடர்ந்து அவர்களுக்கு விசேஷ அதிகாரங்களைக் கொடுக்கிறார். நாம் நம்முடைய சொந்த பெலத்தில் அவருக்கு சேவை செய்வதல்ல, ஆனால் நம்மை பெலப்படுத்தி நம்மை வழிநடத்தும் தேவ ஆவியானவரின் வல்லமையாலேயே அவருக்குச் சேவை செய்கின்றோம்.

தேவனுடைய அற்புதத்தின் வல்லமையைக் கட்டுப்படுத்தி கையாடல் செய்ய நாம் முயற்சிகின்றோமா? இதன் பதில் இல்லை என்பதாகும். தேவன் அவரவருக்குத் தேவையான வல்லமையைத் தருகின்றார். இந்தக் காரியத்தில் இயேசு தன் பிதாவின் சித்தத்திற்கும் நோக்கத்திற்கும் முற்றிலும் கீழ்ப்படிந்திருந்தார். யோவான் 5:19-20ல் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

> *19 அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: மெய்யாகவே மெய்யாகவேநான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்.*
>
> *20 பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருந்து, தாம் செய்கிறவைகளையெல்லாம் அவருக்குக் காண்பிக்கிறார்; நீங்கள் ஆச்சரியப்படத்தக்கதாக இவைகளைப் பார்க்கிலும் பெரிதான கிரியைகளையும் அவருக்குக் காண்பிப்பார். (யோவான் 5:19-20)*

ஆண்டவராகிய இயேசு தன் பிதாவின் பெரிய நோக்கத்திற்கு முற்றிலும் கீழ்ப்படிந்திருந்தார். தன் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றிக் கொள்ள பிதாவின் சித்தத்தை கட்டுப்படுத்தவோ அல்லது தன் இஷ்டப்படி கையாளவோ அவர் விரும்பவில்லை. அவர் தேவனுடைய வல்லமை செயல்படும் கருவியாக மட்டுமே இருந்தார். அவர் அந்த வல்லமையை கட்டுப்படுத்த விரும்பவில்லை. அதைப் போலவே நாமும் தேவன் நம்மில் முதலீடு செய்துள்ள அவருடைய வல்லமை செயல்பட அவருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தவர்களாக இருக்க வேண்டும். அவர் நமக்குத் தந்திருக்கும் அதிகாரம் மற்றும் வரங்களை சரியாக பயன்படுத்த அவர் நம்மை

வழிநடத்துவார். நாம் அவருக்கு கீழ்ப்படிந்தவர்களாக இதில் செயல்பட வேண்டும். அன்று அப்போஸ்தலர்களின் விருப்பம் அதுவே என நான் விசுவாசிக்கின்றேன்.தேவ ஆவியானவர் அவர்களை எப்படி வழிநடத்தினாரோ அப்படியே அவர்களும் செயல்பட்டார்கள். இதன் விளைவு அவர்கள் மத்தியில் அற்புதங்களும் அடையாளங்களும் வெளிப்பட்டது. அவர்களிடம் காணப்பட்ட இதே மனப்பான்மை நமக்கும் இருந்தால் தேவனுடைய பலத்த கிரியைகளை நம்மத்தியில் பார்க்க முடியும்.

## கவனத்திற்கு:

# ஆதி சபையில் தேவ பிரசன்னம் இருந்தது என்பதற்கான ஆதாரங்கள் எவை? ஆண்டவராகிய இயேசுவுடனான சரியான உறவு என்றால் என்ன? (மத்தேயு 7:21-23ஐ கவனிக்கவும்)

# தேவனுடன் சரியான உறவு வைத்திருந்தால் அற்புதங்களும் அடையாளங்களும் வெளிப்படும் என்பதற்கு சாத்தியமுண்டா? தேவனுடனான நம் தனிப்பட்ட நடையை விட அற்புதங்களும் அடையாளங்களும் முக்கியத்துவம் பெற்று விடுவதற்கு வாய்ப்புகள் உண்டா?

# தேவனுடைய வல்லமை கட்டுப்படுத்தப்பட அல்லது நம் இஷ்டத்தின் படி கையாள நாம் செய்யக் கூடியவைகள் எவை?

# தேவனுடைய ஆவியானவரின் வல்லமை உங்கள் வாழ்க்கையிலும் ஊழியத்திலும் செயல்படுகின்றது என்பதற்கான ஆதாரம் என்ன? உங்கள் வாழ்க்கையில் தேவன் செய்து கொண்டிருக்கும் அற்புதங்கள் என்ன?

# தேவன் நமக்குத் தந்திருக்கும் அதிகாரத்தையும் வரங்களையும் பயன்படுத்துவதில் தேவனுக்கு அடங்கி யிருப்பது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது?

## ஜெபத்திற்கு:

# தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை என்பதற்காக அவரைத் துதியுங்கள். உங்கள் வாழ்க்கையில் அற்புத கிரியைகளைச் செய்தபடியால் அவரைத் துதியுங்கள்.

# தேவனுடைய சித்தத்திற்கும் நோக்கத்திற்கும் முழுமையாக ஒப்புக் கொடுத்து நடக்க கற்றுத்தரும்படி ஜெபியுங்கள். உங்கள் சமுதாயத்தில் தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்தும் கருவியாக உங்களை பயன்படுத்த ஜெபியுங்கள்.

# தேவனை மட்டும் சார்ந்திருக்கவும் அவருடனான உறவில் எப்போதும் நிலைத்திருக்கவும் அவரிடம் ஜெபியுங்கள். உங்கள் வாழ்க்கையிலுள்ள மற்றவைகள் அவருடனான நெருக்கமான உறவை எடுத்த நேரங்களுக்காக அவரிடம் மன்னிப்பு கேளுங்கள்.

# 10
# பொதுவாய் அநுபவித்தார்கள்

*44 விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய்வைத்து அநுபவித்தார்கள்.*

*45 காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்துகொடுத்தார்கள்.*

அந்நாட்கள் ஆதி சபைக்கு விசேஷமான நாட்களாக இருந்தது. அநேகர் அப்பொழுதுதான் ஆண்டவராகிய இயேசுவின் இரட்சிப்பிற்குள் வந்திருந்தனர். ஒரே நாளில் விசுவாசிகளின் எண்ணிக்கை சுமார் 120 இலிருந்து 3000மாக அதிகரித்தது. (பார்க்க அப்போஸ்தலர் 2:41) அந்நாட்களில் நடைபெற்ற அனைத்தும் எருசேலேமின் சுற்றுப் புறங்களில் மட்டும் நடந்தது. சுவிசேஷம் இன்னும் மற்றைய இடங்களுக்கு பரவிச் செல்ல ஆரம்பித்திருக்கவில்லை.

இந்தப் புதிய விசுவாச மார்க்கம் அங்கிருந்த யூதமதத் தலைவர்களால் வரவேற்கப்படவில்லை. தேவன் ஆச்சரியமான கிரியைகளை நடப்பித்துக்

கொண்டிருந்தாலும் அந்தக் கிரியைகளுக்கு எதிர்ப்புகளும் கிளம்பியது. தேவதூஷணம் சொன்னார் என்ற குற்றச் சாட்டின் அடிப்படையிலேயே இயேசுவை சிலுவையிலறைந்தார்கள். தொடர்ச்சியாக யூதர்கள் இயேசுவைப் பின்பற்றினவர்களையும் அகற்ற திட்டங்கள் போடப்பட்டது. சவுல், பின்னர் அப்போஸ்தலன் பவுலாக அறியப்பட்டவர், இந்த திட்டத்தைச் செயல்படுத்தி கிறிஸ்தவத்தை வேரறுப்பதில் முக்கிய நபராக இருந்தார்.

அப்போஸ்தலர் 4ம் அதிகாரத்தில் அப்போதலர்களாகிய பேதுருவும் யோவானும் யூத தலைவர்களின் கோபமான வார்த்தைகளுக்கு தைரியமாக முகம் கொடுத்து போதித்ததன் விளைவாக சிறையில் தள்ளப்பட்டார்கள். அவர்கள் விடுதலை பண்ணப்பட்டபோது ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தைக் குறித்துப் பேசக் கூடாதென எச்சரிக்கப்பட்டார்கள். ஆனாலும்அவர்கள் உடன்படாமல் மீண்டும் பிரசங்கித்த பொழுது மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டார்கள். இந்த முறை அவர்கள் விடுதலை பண்ணப்பட்ட பொழுது அவர்கள் அடிக்கப்பட்டு விடுதலை பண்ணப்பட்டார்கள். (பார்க்க அப்போஸ்தலர் 5:17-42)

அப்போஸ்தலர் 7ம் அதிகாரத்தில் கிறிஸ்தவ விசுவாசத்திற்காக முதல் இரத்த சாட்சியாக மரித்தவனைப் பற்றி வாசிக்கின்றோம். ஸ்தேவான் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபடியினாலே கல்லெறிந்து கொல்லப்பட்டான். சபையின் மிகப் பெரிய உபத்திரவத்திற்கு இந்த சம்பவமே ஆரம்பமாக அமைந்தது. அப்போஸ்தலர் 8:1-3ல் இவ்வாறு வாசிக்கின்றோம்:

1 அவனைக் கொலைசெய்கிறதற்குச் சவுலும் சம்மதித்திருந்தான். அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர்தவிர, மற்ற யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப்போனார்கள்.

2 தேவபக்தியுள்ள மனுஷர் ஸ்தேவானை எடுத்து அடக்கம்பண்ணி,அவனுக்காக மிகவும் துக்கங்கொண்டாடினார்கள்.

3சவுல் வீடுகள்தோறும் நுழைந்து, புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக்கொண்டுபோய், காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கிக்கொண்டிருந்தான். (அப்போஸ்தர் 8:1-3)

இதுவரை, நாம் ஆதிசபையில் தேவன் செய்து கொண்டிருந்த ஆச்சரியமான கிரியைகளைப் பற்றி பார்த்தோம். இதில் நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் இந்த ஆச்சரியமான கிரியைகளெல்லாம் மிகக் கடினமான காலகட்டத்திலேயே நடைபெற்றது என்பதுதான். விசுவாசிகள் மற்றவர்களால் அங்கீகரிக்கப்படவில்லை. யூத விசுவாசத்திற்கு துரோகிகள் என சொல்லப்பட்டார்கள். அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்தை பிரசங்கித்தபடியால் அடிக்கப்பட்டார்கள். இந்த புதிய விசுவாசத்திற்காக ஆண்களும் பெண்களும் சிறையில் போடப்பட்டார்கள். ஆண்டவராகிய இயேசுவுக்காக விசுவாசிகள் தங்கள் உயிரையும் பணயம் வைக்கத் துணிந்தார்கள்.

இப்படிப்பட்ட காலங்களில், விசுவாசிகள் ஒன்றாக சேர்ந்து ஒருவருக்கொருவர் ஆதரவு கொடுப்பதும் உற்சாகப்படுத்துவதும் அவசியமாக இருந்தது. இதுதான் அப்போஸ்தலர் 2:44-45ல் நடைபெற்ற சம்பவமாகும். அப்போஸ்தலர் 2:44ல் விசுவாசிகள் ஒருமித்திருந்தார்கள் என நாம் வாசிக்கின்றோம். இதனை இரண்டு விதமாக புரிந்து கொள்ளலாம்.

முதலாவதாக விசுவாசிகள் எல்லோரும் ஒருமித்திருந்தார்கள் என்பதற்கு அவர்கள் ஒரே சுற்று வட்டாரத்தைச் சேர்ந்தவர்களாகஇருந்தார்கள் என்பது அர்த்தமாகும். சபையானது எருசலேமின் சுற்று வட்டாரத்திற்குள் மாத்திரமே இருந்தது. அது விரிவாக்கப்பட்டிருக்கவில்லை. அப்போஸ்தலர் 8ம் அதிகாரத்தில் ஏற்பட்ட உபத்திரவமே இதை மாற்றியது. இந்த உபத்திரவத்தின் காரணமாக கிறிஸ்தவர்கள் எருசலேமையும் அதன் சுற்றுப் பகுதிகளையும் விட்டு வேறு இடங்களுக்குப் போய் அடைக்கலம் தேடிக் கொள்ளத் தள்ளப்பட்டார்கள். ஆனால் இந்த சம்பவம் நடைபெற்ற பொழுது விசுவாசிகள் எல்லோரும் ஒரே பகுதியில் வசித்து வந்தார்கள்.

இரண்டாவதாக விசுவாசிகள் பூகோள ரீதியாக ஒரே

பகுதியில் வசித்தவர்கள் மட்டுமல்ல, அவர்கள் ஒரே இருதயமுள்ளவர்களாகவும் ஒரே ஆவியையுடையவர்களாகவும் இருந்தார்கள். அதாவது அந்த விசுவாசிகளுக்கிடையில் ஐக்கியம் காணப்பட்டது. அவர்கள் ஒருவரைப் பற்றி மற்றொருவர் அக்கரையுடையவர்களாக இருந்தார்கள். ஒருவருக்கொருவர் ஆதரவாயிருந்து, எதிர்ப்பிலும், உபத்திரவத்திலும் ஒருவருக்கொருவர் துணை நின்றார்கள். விசுவாசிகள் தங்கள் சமுதாயத்தில் எந்த அளவிற்கு ஐக்கியமாக நின்றார்கள் என்பதைத் தான் அப்போஸ்தலர் 2:45ல் வாசிக்கின்றோம்.

> 45 காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்துகொடுத்தார்கள். (அப்போஸ்தலர் 2:45)

இந்த பகுதியில் விசுவாசிகள் தங்கள் காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று தேவையானவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்ததற்கான காரணம் என்ன என குறிப்பிடவில்லை. ஆனால் அப்போஸ்தலர் 2ம் அதிகாரம் முதல் 8ம் அதிகாரம் வரையுள்ள பகுதியின் உட்கருத்து, அதைக்குறித்த ஒரு குறிப்பை தருகின்றது. இந்தப் பகுதியில் நாம் கிறிஸ்தவர்களின் உபத்திரவத்தைக் குறித்து வாசிக்கின்றோம். குறிப்பாக அப்போஸ்தர் 8ல் சவுல் வீடுகள்தோறும் நுழைந்து, புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக்கொண்டுபோய், காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கிக்கொண்டிருந்தான். (அப்போஸ்தர் 8:3) என குறிப்பிடப்பட்டுள்ளது. அவனுடைய நோக்கமெல்லாம் சபையை பாழ்க்கடிப்பதுதான்.

எருசலேமில் ஏற்பட்ட இந்த உபத்திரவத்தின் விளைவு என்ன? ஒரு குடும்பத்தில் கணவன் பிடிக்கப்பட்டு சிறையிலடைக்கப்படுகின்றதை கற்பனை செய்து பாருங்கள்.குடும்பத்தை பராமரிக்க வேண்டியவர் சிறை

யிலிருக்கின்றபடியால் அவர்கள் தேவைகளோடு இருந்தனர். குழந்தைகள் பட்டினி கிடக்க வேண்டிய சூழ்நிலை. இப்படிப்பட்ட தேவையின் சூழ்நிலையை சபை எவ்வாறு சந்திப்பது? ஆகவேதான் அவர்கள் குடும்பங்கள் எந்த விதத்திலும் கஷ்டப்படாமல் எல்லோருக்கும் தேவையான அளவு கிடைக்கத்தக்கதாக ஒருவருக்கொருவர் உதவி செய்ய தீர்மானித்தார்கள்.

விசுவாசிகள் தங்கள் ஆஸ்திகளையெல்லாம் விற்றது அவர்களின் தனிப்பட்ட விருப்பமாக இருந்தது. இதை அப்போஸ்தலர் 5ம் அதிகாரத்தில் நாம் தெளிவாக காணமுடியும். அந்த அதிகாரத்தில் அன்னியா சப்பீராளைப் பற்றி வாசிக்கின்றோம். இருவரும் ஒன்றாக சேர்ந்து தங்கள் நிலத்தை விற்று அதில் ஒரு பகுதியை அப்போஸ்தலர்களிடம் கொண்டுவந்தனர்.

ஆனால் அவர்கள் பெருந்தன்மையுள்ளவர்கள் என காட்டும் முயற்சியாக, தாங்கள் நிலத்தை விற்ற பணம் முழுவதையும் கொடுத்து விடுவதாக சபையிடம் சொல்ல தீர்மானித்தார்கள்.

இறுதியில் தேவன் அவர்கள் சொன்ன பொய்யினிமித்தம் அவர்களை அடித்து இறந்தார்கள். அனனியா தன் நிலத்தை விற்றுப் பெற்ற பணத்தைக் குறித்து பொய் சொல்லுகின்றான் என்பதைக் கண்டு பிடித்தவுடன் பேதுரு கூறும் பதிலைஇங்கே நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டும்:

> *4 அதை விற்குமுன்னே அது உன்னுடையதாயிருக்கவில்லையோ? அதை விற்றபின்பும் அதின் கிரயம் உன் வசத்திலிருக்கவில்லையோ? நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணங்கொண்டதென்ன? நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய்சொன்னாய் என்றான். (அப்போஸ்தர் 5:4)*

நிலம் அன்னியாவிறகுச் சொந்தமானதென்றும், அதை

விற்பதற்கும் அதில் கிடைத்த பணத்தை அவன் இஷ்டப்படி செய்வதற்கும் அவனுக்கு எல்லா உரிமையும் உண்டு என பேதுரு அன்னியாவிற்கு தெளிவு படுத்துகின்றான்அனனியா நிலத்தை விற்பதற்கு யாரும் வற்புறுத்தவில்லை. அவன் அந்த பணத்தையெல்லாம் சபைக்கு கொடுக்கவேண்டுமென்றும் யாரும் வற்புறுத்தவில்லை. அவன் தன் நிலத்தை விற்பதற்கும் அவன் விரும்புகின்ற அளவு பணத்தை சபைக்கு கொடுக்கவும் அவனுக்கு எல்லா உரிமையும் கொடுக்கப்பட்டது. நிலத்தை விற்றதில் ஒரு பகுதியை தனக்காக வைத்துக் கொண்டதற்காக அல்ல, மாறாக அவன் சபைக்குக் கொடுத்த அளவைக் குறித்து பொய் சொன்னபடியாலேயேதேவன் அவனை அடித்தார்.

விசுவாசிகள் தங்களுக்குரியவைகளையெல்லாம் விற்றது தற்காலிகமாக நடைபெற்ற ஒன்றாகும். அது விசுவாசிகள் ஒருவருக்கொருவர் தங்களை எவ்வளவு அர்ப்பணித்திருந்தார்கள் என்பதை விளங்கப்படுத்துகின்றது. ஆனால் இது தொடர்ந்து நடைபெறவில்லை. உண்மையில் சொல்லப்போனால் சில வருடங்களிற்கு பின்னர் எருசலேமி லுள்ள சபை மிகவும் தரித்திரர்களாகி ஏழ்மையினாலும் தேவைகளினாலும் கஷ்டப்பட்டார்கள். பவுல் கொரிந்திய சபைக்கு எழுதும்போது எருசலேமிலுள்ள விசுவாசிகளின் தேவைகள் சந்திக்கப்படுவதற்காக காணிக்கை சேர்த்தனுப்பும் படி எழுதுகின்றார்.

> *1* பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மப் பணத்தைக்குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள்.
>
> *2* நான் வந்திருக்கும்போது பணஞ் சேர்க்குதல் இராத படிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும், தன் தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்.

*3 நான் வரும்போது உங்கள் உபகாரத்தை எருசலேமுக்குக் கொண்டுபோகும்படிக்கு, நீங்கள் தகுதியுள்ளவர்களாகக் குறிக்கிறவர்கள் எவர்களோ, அவர்களிடத்தில் நிருபங்களைக் கொடுத்து, அவர்களை அனுப்புவேன். (1 கொரிந்தியர் 16:1-3)*

பவுல் கலாத்தியாவிலுள்ள சபைக்கும் இதே காரியத்தை வலியுறுத்தியிருக்கிறார் என்பதை கவனிக்கவும் (1 கொரிந்தியர் 16:1). ரோம சபைகளுக்கு எழுதும்போது மக்கெதோனியா மற்றும் அகாயாவிலுள்ள சபைகளிடமிருந்து எருசலேமிலுள்ள ஏழை பரிசுத்தவான்களுக்காக உதவித் தொகைகளைப் பெற்றுக் கொண்டதைப் பற்றி அவர் எழுதுகின்றார்:

*25 இப்பொழுதோ பரிசுத்தவான்களுக்கு உதவி செய்யுங்காரியமாக நான் எருசலேமுக்குப் பிரயாணம்பண்ண எத்தனமாயிருக்கிறேன்.*

*26 மக்கெதோனியாவிலும் அகாயாவிலுமுள்ளவர்கள் எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்குள்ளே இருக்கிற தரித்திரருக்காகச் சில பொருள்சகாயம் செய்ய விருப்பங்கொண்டிருக்கிறார்கள்; (1 கொரிந்தியர் 15:25-26)*

அப்போஸ்தலர் 24:17ல் தேசாதிபதி பேலிக்ஸ் முன்பாக தன் சாட்சியைக் கூறும்போதும் இதைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்:

*24:17 அநேக வருஷங்களுக்குப் பின்பு நான் என் ஜனத்தாருக்குத் தர்மப்பணத்தை ஒப்புவிக்கவும், காணிக்கைகளைச் செலுத்தவும் வந்தேன்.*

அதனைத் தொடர்ந்து வந்த வருடங்களில் அவர்களின் தேவைகள் முழுமையாக சந்திக்கப்படவில்லை. எருசலேமிலும் மற்றைய பகுதிகளிலுமிருந்த விசுவாசிகள் தரித்திரத்தினால் கஷ்டப்பட்டார்கள். இந்த ஏழை விசுவாசிகளின் தேவைகளை சந்திப்பதற்காக விசேஷ காணிக்கைகளை சேகரிக்க அப்போஸ்தலர்கள் விசுவாசிகளிடம் கேட்க வேண்டியிருந்தது.

விசுவாசிகள் தங்களிடமிருந்த ஆஸ்திகளையெல்லாம் விற்று சபைக்கு கொடுப்பது தொடர்ந்து நடைபெறாவிட்டாலும், ஆதி சபை பின்பற்றிய இந்த கொள்கை முக்கியமானதொன்றாகும். அந்த விசுவாசிகள் மற்றவர்கள் மேல் அவர்களுக்கிருந்த கரிசனையை தங்கள் நடக்கைகளில் காண்பித்தார்கள். ஒருவரும் குறைவுள்ளவர்களாயிராதபடிக்கு இருப்பதற்காக தங்களுக்கிருப்பவைகளை தியாகம் செய்ய ஆவலாயிருந்தார்கள். இந்த உதாரத்துவ கொள்கையைப் பற்றி மத்தேயு 5:40-41ல் இயேசுவும் இவ்வாறு கூறியுள்ளார்:

> *40 உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு.*
>
> *41 ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம்வரப் பலவந்தம்பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ. (மத்தேயு 5:40-41)*

அப்போஸ்தலனாகிய யாக்கோபு இதைப் பற்றி எழுதும் போது, தன் சகோதர, சகோதரிகள் நன்றாக இருக்க வேண்டுமென விரும்பியும் அவர்களுடைய தேவைகளில் உதவாத விசுவாசிகளைக் கடிந்து கொள்வதைப் பார்க்கின்றோம்.

> *14 என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா?*
>
> *15 ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது,*
>
> *16 உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன? (யாக்கோபு 2:14-17)*

அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பிய சபைகளுக்கு எழுதும்போது விசுவாசிகள் தங்களுடைய தேவைகளிலும் மற்றவர்களுடைய தேவைகளை அதிக முக்கியமுள்ளதாக கருதும்படி உற்சாகப்படுத்தி எழுதுகின்றார்.

*3 ஒன்றையும் வாதினாலாவது வீண் பெருமை யினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்.*

*4 அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக் கானவைகளையும் நோக்குவானாக. (பிலிப்பியர் 2:3-4)*

சுயநலம் மற்றும் சுயத்தை மையமாக கொண்ட கிறிஸ்தவம் உயிரற்ற கிறிஸ்தவமாகும். தேவன் நமக்குத் தந்திருக்கும் நன்மையானவைகளை மற்றவர்களுக்காக பயன்படுத்த தேவன் நம்மை அழைக்கின்றார். நாம் மற்றவர்களுக்கு அவர்களின் தேவைகளில் உதவி செய்வதற்காகவே தேவன் நமக்கு கொடுக்கிறார். அப்போஸ்தலர் 2ல் காணப்படும் எருசலேம் சபை, அங்கிருந்த விசுவாசிகள் மற்றவர்களுக்கு உதவி செய்ய எந்த அளவிற்கு தங்களை அர்ப்பணித்திருந்தார்கள் என்பதனைப் பற்றி குறிப்பிடுகின்றது அவர்கள் மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதற்காக தங்களிடமுள்ள அனைத்தையும் விற்கவும் ஆயத்தமுள்ளவர் களாயிருந்தார்கள். அங்குள்ள அனைவரின் நன்மைக்காகவும் தங்களிடமுள்ள அனைத்தையும் தியாகம் செய்ய ஆயத்தமாயிருந்தார்கள்.

அந்நாட்களில் தேவனுடைய ஆவியானவரின் கிரியைகள், விசுவாசிகளின் ஒருவர் மற்றொருவருக்கான தியாக மனப்பான்மையின் மூலம் மிகத் தெளிவாக வெளிப்பட்டது. இந்தக் காரியத்தில் நமக்கு முன் நிச்சயமாக ஒரு சவாலுண்டு. எங்கே தேவ ஆவியானவரின் கிரியைகள் உண்டோ, அங்கே அவர்களைச் சுற்றியுள்ள சக விசுவாசிகளைக் குறித்த

மற்றும் உலகெங்குமுள்ள விசுவாசிகளைக் குறித்த கரிசனை அதிகரிக்கும். பரிசுத்தாவியானவர் அவருடைய இருதயத்தைத் தொடும் தேவைகளைப் பார்க்கும்படி நம் கண்களைத் திறந்து விடுவார். அந்தத் தேவைகளுக்கு ஊழியம் செய்ய அவர் நம்மை ஊக்குவித்து, நமக்கு நேரத்தைக் கொடுத்து, அதற்குரிய வழிகளைத் திறந்து, நமக்குத் தேவையான பெலத்தையும் தருவார். நம்முடைய ஆசீர்வாதங்கள் நமக்காக மட்டுமல்ல, ஆனால் தேவன் நமக்கு முன்பாக கொண்டு வரும் தேவையுள்ளவர்களுக்காகவும் என அவர் நமக்குக் கற்றுத் தருவார். ஆவியால் நிரம்பப்பட்டசபை என்பது உலகெங்கிலுமுள்ள சகோதர சகோதரிகளின் தேவைகளில் ஊழியம் செய்வதற்காக மிகுந்த மகிழ்ச்சியாகவும் தியாகமாகவும் கொடுக்கின்ற சபையாகும். பெரிய கட்டிடத்திலும் அதற்குள்ளே வசதியான இருக்கைகளிலும் அந்த சபை சந்தோஷப்படாது. ஆனால் பசியோடுள்ள விசுவாசிகளின் பசியை போக்குவதிலும் அவர்களுடைய தேவைகளை சந்திப்பதிலும் சந்தோஷப்படும்.

## கவனத்திற்கு:

# தேவ ஆவியானவரின் மிகப்பெரிய வேலையின் காலத்தில் எருசலேமில் என்ன நடந்தது? அந்நாட்களிலிருந்த விசுவாசிகளின் வாழ்க்கை முறை எப்படிப்பட்டதாக இருந்தது?

# விசுவாசிகள் ஒருவர் மற்றொருவரை எவ்வாறு விசாரித்தார்கள்? இந்த உலகப்பொருள்களைக் குறித்த அவர்களின் மனப்பான்மையைக் குறித்து இது நமக்கு என்ன கூறுகின்றது?

# ஆதி சபை விசுவாசிகள் தங்களுக் குரியவை களையெல்லாம் விற்கும்படி கட்டாயப்படுத்தப் பட்டார்களா? இது அவர்களாக முன்வந்து செய்த செயல் என்பதற்கு ஆதாரம் என்ன?

# பெருந்தன்மை என்னும் கொள்கை எவ்வளவு முக்கியமானது? மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதற்காக, தேவன் உங்களுக்கு கொடுத்துள்ளவைகளை நீங்கள் எவ்வாறு பயன்படுத்துகின்றீர்கள்?

# உங்கள் சமுதாயத்தில் உபத்திரவப்படுகின்ற அல்லது சரீர தேவைகளோடு காணப்படும் விசுவாசிகள் இருக்கின்றார்களா?

# அவர்களின் தேவைகள் என்ன? அவர்களுக்கு நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகின்றார்?

## ஜெபத்திற்கு:

# உங்களைச் சுற்றிலுமுள்ள ஜனங்களைக் குறித்த ஆழமான கரிசனையை உங்களுக்குத் தருமாறு தேவனிடம் ஜெபியுங்கள்.

# நீங்கள் உதவி செய்யக் கூடிய, தேவையுள்ள ஜனங்களை,உங்கள் பாதையில் கொண்டுவர தேவ ஆவியானவரிடம் கேளுங்கள்.

# உங்கள் ஆஸ்திகளை இறுகப் பிடித்துக் கொண்டிருந்ததற்காக தேவன் மன்னிக்கும்படியாக ஜெபியுங்கள். அவைகளை தேவனிடம் ஒப்புக்கொடுக்க ஒரு கணம் எடுத்துக் கொள்ளுங்கள். அவருடைய விருப்பப்படி அவைகளைப் பயன்படுத்துமாறு ஜெபியுங்கள்.

# 11

# ஒன்றாக கூடினார்கள்

*46 அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி,*

*47 தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்.*

இதற்கு முன்னுள்ள அதிகாரத்திலே, ஆதி சபை ஒருவருக்கொருவர் அர்ப்பணிப்புள்ளவர்களாயிருந்து, தாங்களாக முன்வந்து தங்கள் ஆஸ்திகளை விற்று, அந்த பணத்தை தேவையுடன் இருப்பவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கும்படி அப்போஸ்தலரிடம் கொண்டுவந்தார்கள் எனப் பார்த்தோம். ஐக்கியப்படும்படி அவர்கள் அடிக்கடி ஒன்றாகக் கூடி வந்ததன் மூலமாக, ஒருவருக்கொருவர் அவர்கள் எவ்வளவு அர்ப்பணித்திருந்தார்கள் எனக் காணமுடிகின்றது. விசுவாசிகள் மூன்று விதங்களில் ஒன்றாக கூடினார்கள் என அப்போஸ்தலர் 2:46 கற்றுத்தருகின்றது.

## அவர்கள் தேவாலயத்தில் கூடினார்கள்

இந்த விசுவாசிகள் தேவாலய வாசலிலே கூடினார்கள் என்பதை முதலாவது நாம் கவனிக்க வேண்டும். ஆதி சபை கிறிஸ்தவர்கள் யூத விசுவாசத்தை மறுதலித்தவர்களாக தங்களை பார்க்கவில்லை. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களுக்கும் இயேசு மேசியாவாக வாக்குப் பண்ணப்பட்டவர். அவர் யூத

தீர்க்கதரிசிகளாலும் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டவர். இயேசு யூத ஜெப ஆலயங்களில் போதித்தாரென்பதையும் அங்கு வியாபாரம் செய்து கொண்டிருந்தவர்கள் மற்றும் காசுக்காரரையும் அப்புறப்படுத்தி சுத்திகரித்தார் என்பதனையும் பார்க்க முடியும் (பார்க்க மத்தேயு 21:12). ஆகவே தேவாலய வாசலில் கூடுவது என்பது வழக்கமான ஒரு செயலாக இவர்களுக்கு காணப்பட்டது,

அநுதினமும் (தொடர்ந்து) என்னும் வார்த்தை அவர்களின் விடாமுயற்சியையும் அர்ப்பணிப்பையும் காட்டுகின்றது. வேறு விதமாக சொல்வதானால் விசுவாசிகள், தேவனை ஆராதிக்கவும்,ஜெபிக்கவும், கற்றுக் கொள்ளவும் கூடிவர தங்களை ஒப்புக் கொடுத்திருந்தார்கள். தனிமையில் வாழுவதில் அவர்களின் விசுவாசம் செயல்படவில்லை. பதிலாக ஒன்றாக கூடி ஆராதிப்பதிலும் வார்த்தையைக் கற்றுக் கொள்வதிலும் அவர்கள் தங்களை அர்ப்பணித்திருந்தார்கள். தனிமையில் ஆராதிப்பதும் ஜெபிப்பதும் அவசியமானதாக இருப்பதைப் போலவே ஒரே சமுதாயமாக கூடி வருவதற்கும் நம் விசுவாசம் செயல்படவேண்டும். ஆதி சபை ஒன்றாக கூடிவருவதற்கு தன்னை நிச்சயமாக அர்ப்பணித்திருந்தது. அவர்கள் ஒன்றாக கூடி இருப்பதற்கும், ஒருவர் மற்றொருவருடைய விசுவாசத்திற்கு ஆசீர்வாதமாகவும் உற்சாகப் படுத்துபவராகவும் இருப்பதற்கும் தேவன் அவர்களுக்கு ஒரு இருதயத்தைக் கொடுத்திருந்தார்.

அந்த காலத்தில் அவர்களிடம் வேதாகமம் இருக்கவில்லை என்பதனையும் நான ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். அவர்கள் வீடுகளில் குடும்பத்திற்கொரு அல்லது தனிநபருக்கொரு வேதாகமம் என்று காணப்படவில்லை. அவர்கள் வசனத்தைக் கேட்க வேண்டுமானால், அவர்கள் தேவாலயத்திற்குத்தான் போகவேண்டும். இந்த விசுவாசிகள் வேதத்தைக் கேட்கவும் தங்கள் வாழ்க்கையை அதனுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும் தங்களை அர்ப்பணித்திருந்தார்கள். தேவாலயத்தில் அவர்கள்

தேவ வார்த்தைகள் வாசிக்கப்படுவதைக் கேட்டு அதனுடன் தங்கள் வாழ்க்கையை ஒப்பிட்டு ஆராய்ந்து ஜெபித்தார்கள். இவர்கள் இதை அநுதினமும் செய்தார்கள் என 46ம் வசனம் சொல்லுகின்றது.

## வீடுகள் தோறும் அப்பம் பிட்டார்கள்

இநத விசுவாசிகள் தேவாலயத்தில் கூடிவருவதுடன் தங்களை நிறுத்திக் கொள்ளவில்லை. அவர்கள் வீடுகள் தோறும் அப்பம் பிட்டார்கள் என 46ம் வசனம் கூறுகின்றது. அப்பம் பிட்குதலைப் பற்றி நாம் ஏற்கனவே பார்த்தோம். கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதையும் கிறிஸ்துவையும் அவருடைய கிரியைகளையும் நினைவு கூருவதுடன் இது சம்பந்தப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அங்கே பொதுவான போஜன பந்தியும் இருந்தது. அப்பம் பிட்குதல் தேவாலயத்தில் நடைபெறவில்லை. இதற்கான வலுவான காரணமும் இருந்தது. இந்த முறை அக்காலத்திலிருந்த யூதர்களுக்கு அவமதிப்பான செயலாக இருந்தது. கர்த்தருடைய பந்தியை அநுசரிப்பது யூத பாரம்பரியத்தின் ஒரு பகுதியல்ல.

அது கிறிஸதுவையும் சிலுவையில் அவரது மரணத்தையும் அவரை பின்பற்றுகின்றவர்களுக்கு அது கொண்டு வரும் நம்பிக்கையையும் ஞாபகப்படுத்துகின்ற செயலாகும். தேவதூஷணம் சொன்னார் என்பதற்காக கொல்லப்பட்ட ஒருவரை ஞாபகப்படுத்தி கொண்டாடும் ஒரு செயல், யூத தலைவர்களால் விரும்பப்படாத ஒன்றாக இருந்த படியால் நிச்சயம் தேவாலயத்தில் இதை செய்வதற்கு அனுமதித்திருக்க மாட்டார்கள். விசுவாசிகள் தேவாலய வாசலிலே கூடி ஜெபிக்கவும் வேதவசனத்தை கற்றுக் கொள்ளவும் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் அப்பம் பிட்குதல் என்பது இயேசுவைப் பின்பற்றின ஒருவரின் வீட்டில் மட்டுமே நடத்தப்பட்டது. இந்த சிறிய குழுக்கள் தனித்தன்மை

வாய்ந்தவைகளாக கிறிஸ்தவர்களுக்கு, தேவனை ஆராதிக்கவும் கிறிஸ்துவை நினைவு கூறவும் தேவாலயத்தில் செய்ய முடியாத ஒன்றைச் செய்வதற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்தது.

## ஒன்றாக போஜனம் பண்ணினார்கள்

ஆதி சபை விசுவாசிகள் ஒன்றாக போஜனம் பண்ணினர்கள் என 46ம் வசனம் நமக்குச் சொல்கின்றது. இதன் மூலம் இரண்டு காரியங்கள் நடக்கமுடியும், முதலாவதாக அங்கே பசியோடிருந்தவர்களுக்குஆகாரம் கிடைத்தது.

இரண்டாவதாக விசுவாசிகள் ஒருவரையொருவர் அறிந்து கொள்ளவும் ஒருவரோடொருவர் பகிர்ந்து கொள்ளவும் நேரத்தைக் கொடுத்தது. எத்தனை முறைகளில் நாம் சக விசுவாசிகளுடன் சேர்ந்து ஆராதித்தும் அவர்களைப் பற்றியோ அவர்களுடைய பிரச்சனைகளைப் பற்றியோ அல்லது தேவன் அவர்களுக்குக் கொடுத்திருக்கும் ஊழியங்களைப் பற்றியோ ஒரு விபரமும் நமக்குத் தெரியாமல் இருந்திருக்கிறோம் அல்லவா?

இவ்விதமான முறைப்படி அமையாத கூடுகைகளில் ஒருவரையொருவர் அறிந்து கொள்ள ஆரம்பிக்கும் போது உறவுகள் மேம்படுவதனால் ஒருவருக்கொருவரின் தேவைகளில் உதவி செய்ய வாய்ப்புண்டாகின்றாது. ஒன்றாக போஜனம் பண்ணுவது அல்லது ஒன்றாக சேர்ந்து ஒரு காபியைப் பருகுவது ஆவிக்குரிய ஒரு செயலாக தெரியாவிட்டாலும், ஒருவருக்கொருவர் ஊழியம் செய்வதற்கு அது அவசியமானதாகும். அவ்வாறான நேரங்களில் உறவுகள் கட்டப்பட்டு நீடித்து இருக்கக் கூடிய ஒரு பிணைப்பை ஏற்படுத்துகின்றது.

அவ்வாறான ஐக்கியங்களின் நேரத்தில் நான்கு காரியங்கள் காணப்பட்டதாக வசனம் 46-47 கூறுகின்றது.

## மகிழ்சியான இருதயம்

முதலாவதாக விசுவாசிகள் ஒன்றாக கூடி வந்த பொழுது அவர்கள் மகிழ்ச்சியான இருதயத்துடனிருந்தார்கள். அவர்கள் ஒருவரிலொருவர் சந்தோஷப்பட்டார்கள். அவர்கள் ஒருவரோடொருவர் அநுபவித்த ஐக்கியம் அவர்களில் சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும் கொண்டு வந்தது. இந்தக் கிறிஸ்தவர்களுக்கு ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்பது பாரமான காரியமாகத் தெரியவில்லை. தேவன் கொடுத்த இந்த சிலாக்கியத்திற்காக உற்சாகத்துடனும் நன்றியுள்ளவர்களாகவும் காணப்பட்டார்கள்.

## கபடமில்லாத இருதயம்

விசுவாசிகளெல்லாரும் கபடமில்லாத இருதயத்துடன் ஒன்று கூடினார்கள். இங்கே குறிப்பிட்டுள்ள கபடமில்லாத என்னும் வார்த்தை தடங்களில்லாத அல்லது அடைப்புகளில்லாத ஒன்று சம்பவித்தது என்னும் அர்த்தத்தைக் கொடுக்கின்றது. ஒரு விவசாயி கற்கள் நிறைந்த நிலத்தை ஏர்பூட்டி உழுது பண்படுத்துகின்றான் என கற்பனை செய்து கொள்ளுங்கள். அவன் சிறிது தூரம் நிலத்தை உழுது ஒரு பெரிய கல்லைக் கண்டவுடன் உழுவதை நிறுத்திவிட்டு கல்லை அப்புறப்படுத்த முயற்சிப்பான் அல்லவா! நம் உறவுகளிலும் கூட இப்படிப்பட்ட நிலைமைகள் காணப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட தூரம் சென்ற பின்னர் ஒரு தடையை சந்திக்கின்றோம். ஒரு வேளை அது பாரபட்சம் காட்டப்பட்டதனால் ஏற்பட்ட ஒன்றாக அல்லது கடந்த கால காயங்களினாலேற்பட்ட ஒன்றாக இருக்கலாம். ஒருவேளை அது மன்னிக்கப்படாத ஒன்றினால் அல்லது தீர்க்கப்படாத ஒரு பிரச்சனையினால் ஏற்பட்டதாக இருக்கலாம். பிரச்சனை சரிப்படுத்தப்படாத வரை உறவில் மாற்றமோ வளர்ச்சியோ உண்டாகாது.

ஆதி சபை விசுவாசிகள் ஒன்றாக கூடி வந்த பொழுது

அவர்கள் இருதயத்தில் காழ்ப்புணர்ச்சி, பாரபட்சம், மன்னிக்க முடியாமை மற்றும் பெருமை போன்றவை இல்லாமல் கூடி வந்தனர். பணக்கார விசுவாசி ஏற்றுக் கொள்ளப்பட்டது போலவே ஏழை விசுவாசியும் ஏற்றுக் கொள்ளப்பட்டான். அவர்களுக்கிடையில் இருந்த தடைகள் அப்புறப்படுத்தப்பட்டது. எல்லா விசுவாசிகளும் வரவேற்கப்பட்டார்கள். பாராட்டப் பட்டார்கள்.

## தேவனைத் துதித்தார்கள்

சபையார் ஒன்றாக கூடி வந்த பொழுது தேவனைத் துதித்தார்கள். இந்த ஆச்சரியமான காரியம் அவர்களிடம் பொதுவானதொன்றாக காணப்பட்டது. அவர்களை இரட்சித்த தேவன் மேல் நன்றியும் அன்பும் நிறைந்த இருதயமுடையவர்களாக அவர்கள் இருந்தார்கள். தங்கள் உறவில் அவர்கள் தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

தேவன் ஒருவரே சகல மகிமையையும் பெற்றுக் கொள்ளும் வண்ணம் அவர்களின் ஒருவடோரொருவர் உறவு கொள்ளும் முறை இருந்தது. ஒரு தேவை சந்திக்கப்பட்டபொழுது அல்லது ஒரு உற்சாகமான காரியத்தைப் பெற்றுக் கொண்டபொழுது அவர்கள் இருதயம் தேவனைத் துதித்தது. விசுவாசிகள் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டதனால் சந்தோஷமடைந்த பொழுது தேவன் அதில் மகிமைப்பட்டார்.

ஒரு விசுவாசிக்கு மற்றொரு விசுவாசியின் மூலம் தேவன் ஒரு தேவையை சந்திக்கும் பொழுது உரத்த சத்தத்துடன் தேவனுக்கு நன்றி செலுத்தாமல் யாரால் இருக்க முடியும்? ஒரு சகோதரன் அல்லது சகோதரியின் மூலமாக தேவன் ஒரு உற்சாக வார்த்தையை கொடுக்கும் பொழுது தேவனுக்கு நன்றி சொல்லாமல் யாரால் இருக்க முடியும்? அந்நாட்களில் விசுவாசிகள் தங்கள் ஐக்கியத்தில் சந்தோஷப்பட்ட ஒவ்வொரு சூழ்நிலையிலும் தேவனுக்கு மிகுந்த துதிகள் செலுத்தப்பட்டது.

## ஜனங்களிடத்தில் தயவு பெற்றிருந்தார்கள்

*கடைசியாக, சபை விசுவாசிகள் எல்லா ஜனங்களிடமும் தயவு பெற்றிருந்தார்கள். இதை விசுவாசிகள் வாழ்ந்த கஷ்டமான நாட்களின் அடிப்படையில் நாம் பார்க்க வேண்டும். அந்நாட்களில் சபைக்கு மிகுந்த உபத்திரவம் உண்டாயிருந்த நாட்கள். சவுல் போன்ற மனிதர்கள் வீடு வீடாகச் சென்று விசுவாசிகளை பிடித்து சிறையில் போட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் இந்தப் பகுதி நமக்கு கற்றுத் தருவது என்னவென்றால், இந்த விசுவாசிகளைப் பார்த்த கிறிஸ்தவரல்லாதவர்கள் ஏதோ ஒரு வித்தியாசத்தை அவர்களில் பார்த்தார்கள் என்பதாகும்.*

*ஆதி சபையிலுள்ள விசுவாசிகள் ஒருவருக்கொருவர் அர்ப்பணித்திருந்ததைப் பார்த்து இவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். அவர்களின் இரக்க சுபாவத்தையும் தானாக முன்வந்து தியாகம் செய்வதையும் கண்டார்கள். அவர்கள் ஒன்றாக கூடி வரவும் உணவைப் பகிர்ந்து உண்ணவும் அவர்களுக்கிருந்த அர்ப்பணிப்பைக் கண்டார்கள். அந்த நாட்களிலிருந்த அவிசுவாசிகள் கூட சபையில் நடைபெற்றவைகளைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். அவர்கள் ஒருவரையொருவர் நேசித்ததைப் பார்த்தார்கள். அவர்களின் தியாகத்தைப் பார்த்தார்கள். இவைகள் எல்லாவற்றின் மூலமாக தேவனுடைய அன்பும் வெளிப்படுத்திக் காண்பிக்கப்பட்டது. இதற்கும் மேலாக விசுவாசிகள் சத்தியத்திற்கும், நேர்மைக்கும் தெய்வ பயத்திற்கும் கட்டுப்பட்டு வாழுவதை அவிசுவாசிகள் பார்த்தார்கள். இந்த விசுவாசிகளை எதற்கும் நம்ப முடியம். இந்த விசுவாசிகளை சார்ந்து நிற்க முடியும். ஆதி சபை விசுவாசிகளிடம் காணப்பட்ட நேர்மை யாராலும் கேள்வி கேட்கப்பட முடியாததாக இருந்தது.*

*அப்போஸ்தலர் 2ல் காணும் விசுவாசிகள் ஒருவருக்கொருவர் தங்களை அர்ப்பணித்து வாழ்ந்தனர். தேவையின் நேரங்களில் அவர்கள் ஒருவரையொருவர் விசாரித்தனர். பெலவீனமான*

நேரங்களில் அவர்கள் ஒருவரையொருவர் பெலப்படுத்தினர். கிரமமாக அவர்கள் ஆராதிக்கவும் ஜெபிக்கவும் கூடிவந்தனர். அவர்கள் மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்துடனும் கூடி வந்தார்கள்.

அவர்களுடைய உறவு தேவனுக்கு மகிமையைக் கொண்டு வந்ததுடன் வெளியுலகத்திலுள்ளவர்களிடம் மரியாதையையும் புகழையும் பெற்றுத் தந்தது. இவ்விதமான ஐக்கியம் இன்று உங்கள் சபையில் காணப்படுகின்றதா?

கிறிஸ்தவர்களின் ஒற்றுமை மற்றும் ஐக்கியத்தின் வலிமை என்னவென்று எதிரியாகிய சாத்தானுக்கு தெரியம். அதை உடைப்பதற்கு அவன் எதையும் செய்ய முற்படுவான். இவ்விதமான ஐக்கியத்தை தொடர்ந்து செயலாக்குவது இலகுவானதொன்றல்ல. ஆனால் அது நிச்சயமாக மிகுந்த ஆசீர்வாதமானதாகவும் கிறிஸ்துவுக்காக இந்த உலகத்தை ஆதாயப்படுத்துவதற்கு தேவையானதுமான வல்லமையுள்ள கருவியாகும்.

## கவனத்திற்கு:

# ஆதி சபை வேதத்தைக் கற்றுக் கொள்ளவும் ஆராதிக்கவும் நேரமெடுத்தது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது? உங்கள் வாரந்திர வழக்கத்திலே இதற்கான நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதா?

# முறைப்படி அமைந்திராத ஒரு உணவு வேளை விசுவாசிகளுக்கு எந்த விதத்தில் பிரயோஜனமாக இருந்தது?

# ஆதி விசுவாசிகள் ஒன்று கூடி வந்த பொழுது அவர்களின் மனநிலை எப்படிப்பட்டதாக இருந்தது? இன்று உங்களுடைய சபை ஐக்கியங்களில் அதே விதமான மகிழ்ச்சியை அனுபவிக்கின்றீர்களா?

# விசுவாசிகளுக்கிடையிலிருந்த ஐக்கியம் எவ்வாறு தேவனுக்கு துதியையும் மகிமையையும் கொண்டு வந்தது? இன்று உங்கள் சபைகளின் ஐக்கியங்கள் மூலம் தேவனுக்கு துதியும் மகிமையும் உண்டாகின்றதா?

# ஆதி சபையில் காணப்பட்ட விசுவாசிகளின் ஐக்கியம் அவிசுவாசிகளை சந்திப்பதற்கான கருவியாக எவ்வாறு செயல்பட்டது?

## ஜெபத்திற்கு:

# ஜெபம் மற்றும் வேதத்தைக் கற்றுக் கொள்ளும் நேரம் உங்களுக்கு இனிமையானதாக இருக்க ஜெபியுங்கள். அப்படிப்பட்ட நேரங்களை தேவன் உங்களுக்கு ஆசீர்வதித்துத் தருமாரு ஜெபியுங்கள்.

# உங்கள் சபையில் ஆராதனை நடத்துபவர் மற்றும் வார்த்தையை போதிப்பவர்களை தேவன் ஆசீர்வதிக்கும்படி ஜெபியுங்கள். சபையை உற்சாகப்படுத்தி பெலப்படுத்த தேவன் இந்தத் தலைவர்களை பயன்படுத்த ஜெபியுங்கள்.

# உங்கள் சபையிலுள்ள விசுவாசிகள் ஐக்கியப்படுவதில் காணப்படும் தடைகளை தேவன் அப்புறப்படுத்த ஜெபியுங்கள்.

# உங்கள் சபையிலுள்ள ஐக்கியம் தேவனுக்கு மகிமையைக் கொண்டு வரவும், அநேகரை கிறிஸ்துவின் சரீரத்திற்குள் கொண்டு வரும் கருவியாக பயன்படவும் ஜெபியுங்கள்.

# 12
# இரட்சிக்கப்பட்டார்கள்

*இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார். (அப்போஸ்தலர் 2:47)*

ஆதி சபையிலே அற்புதமான காரியங்கள் நடைபெற்றது. தேவ ஆவியானவர் விசுவாசிகள் மத்தியில் வல்லமையாக செயல்பட்டார்.

இது அங்கிருந்த சமுதாயத்தினராலும் கவனிக்கப்பட்டது. கிறிஸ்தவத்தைப் புறக்கணித்தவர்கள் விசுவாசிகளை உபத்திரவப்படுத்த முயற்சித்துக் கொண்டிருந்த அதே நேரத்தில், வேறு சிலர் நடைபெற்ற காரியங்கள் மூலமாக தேவ கரத்தைக் கண்டார்கள். விளைவாக அந்த மக்கள் கிறிஸ்தவர்களாக மாறிக் கொண்டிருந்தார்கள்.

அந்த நாட்களிலிருந்த சபையில் மக்கள் தினந்தோறும் சபைக்குள் சேர்க்கப் பட்டுக் கொண்டிருந்ததற்கும் விசேஷமான வளர்ச்சியை சபை பார்த்ததற்கும் காரணம் என்ன? அது தேவனுடைய கரத்தின் விளைவு என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. கர்த்தர் அநுதினமும் சேர்த்துக் கொண்டு வந்தார் என வசனம் 47ல் குறிப்பிட்டுள்ளதைக் கவனிக்கவும். இது தேவனுடைய செயல். இது அப்போஸ்தலர்களோ ஆதி சபை விசுவாசிகளோ தங்கள் முயற்சியால் செய்ய முடியாத ஒன்றாகும். எந்த ஒரு திட்டமோ அல்லது நிகழ்ச்சியோ இப்படிப்பட்ட விளைவை கொடுத்திருக்க முடியாது. அந்நாட்களில் நடைபெற்ற செயல்கள் ஆரம்பம் முதல் முடிவு வரை பரிசுத்த ஆவியின் செயலாக இருந்த அதே நேரத்தில்,

தேவனுடைய ஜனங்கள் தேவனுக்குத் தங்களை ஒப்புக் கொடுத்தவர்களாகவும், கீழ்ப்படிலுள்ளவர்களாகவும் நடக்க வேண்டுமென்றும் தேவன் எதிர்பார்த்தார் என்பதனையும் நாம் கவனிக்க வேண்டும். நம்முடைய பாவங்கள் மற்றும் இருதயக்கடினத்தின் மூலம் தேவனுடைய கிரியைகளுக்குத் தடையாக இருப்பதும் சாத்தியமே.

யோசுவா 7ம் அதிகாரத்திலுள்ள ஆகான் என்பவனின் சம்பவத்தைக் கவனியுங்கள். ஆகான் அனுமதிக்கப்படாத சில பொருட்களை எரிகோ பட்டணத்திலிருந்து எடுத்து தன் கூடாரத்தில் புதைத்து வைத்தவன். பட்டணத்திலிருந்து எதையும் எடுக்காமல் முற்றிலும் அழித்துப் போடுங்கள் என தேவன் யோசுவாவுக்கும் அவருடைய ஜனத்திற்கும் குறிப்பாக சொல்லி யிருந்தார். ஆனால் ஆகான் இந்தத் தெளிவான கட்டளைக்கு கீழ்ப்படியாமல் போனான்.

விளைவாக யோசுவாவும் அவனுடைய சேனையும் ஆயி என்னும் சிறிய பட்டணத்தைக் கைப்பற்ற முடியாமல் தோற்கடிக்கப்பட்டு, பின்னர் யோசுவா தேவசமூகத் திலிருந்து ஆராய்ந்த பொழுது ஆகானின் கீழ்ப்படியாமை வெளிப்பட்டது. இஸ்ரவேலில் முப்பத்தாறு பேர் அந்த யுத்தத்தில் கொல்லப்பட்டார்கள் (யோசுவா 7:4-5)ஆகானின் கீழ்ப்படியாமையே இவர்களின் தோல்விக்கு காரணம் என தேவன் யோசுவாவிற்கு தெளிவாகக் கூறினார். ஆகானும் அவனுடைய குடும்பமும் கொல்லப்பட்ட பின்னரே தேவனுடைய ஆசீர்வாதம் அவர்களுக்கு மீண்டும் திரும்ப கிடைத்தது.

இங்கே முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்ன வென்றால் பாவமும் முரட்டாட்டமும் தேவனுடைய ஆசீர்வாதத்தைத் தடுத்தது என்பதாகும். தேவன் யோசுவாவிற்கு வெற்றியை கொடுக்க விரும்பினார், ஆனால் பாளையத்தில் பாவம் இருந்த படியால் அவருடைய ஆசீர்வாதங்களை

தடுத்து நிறுத்தினார். தேவனுடைய ஜனங்கள் அவரை விட்டு பின்திரும்பும் போது அவர் தன் ஆசீர்வாதங்களைத் தடுத்து நிறுத்தி விடுவார். 2 நாளாகமம் 7ம் அதிகாரத்தில் இதே காரியத்தைக் குறித்து சாலேமோனிடம் தேவன் பேசினார்:

> 13 நான் மழையில்லாதபடிக்கு வானத்தை அடைத்து, அல்லது தேசத்தை அழிக்க வெட்டுக்கிளிகளுக்குக் கட்டளையிட்டு, அல்லது என் ஜனத்திற்குள் கொள்ளை நோயை அனுப்பும்போது,
>
> 14 என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்.

தேவன் மழையில்லாதபடிக்கு வானத்தை அடைப்பார் என 2நாளாகமம் 7:13ல் கூறப்பட்டுள்ளதைக் கவனிக்கவும். தேவன் தேசத்தை அழிக்க வெட்டுக்கிளிகளை அனுப்பி ஜனத்திற்குள் கொள்ளை நோயை அனுப்புவார். ஆனால் தேவனுடைய ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, அவருடைய முகத்தைத் தேடி, அவர்களுடைய பொல்லாத வழிகளை விட்டுத் திரும்புவது மட்டுமே தேவனுடைய ஆசீர்வாதத்தை மீண்டும் அவர்களிடம் கொண்டு வரும் என வசனம் 14 நமக்குக் கூறுகின்றது. தேவனுடைய ஜனங்களின் பாவங்கள் அவர்களின் எல்லா ஆசீர்வாதத்தையும் உரிந்து கொள்கின்றது என தெளிவாகத் தெரிகின்றது.

தேவன் ஓசியா தீர்க்கதரிசியின் மூலமாகத் தன் ஜனங்களிடம் பேசும் போது அவர் சொன்னார்:

> 1 இஸ்ரவேல் புத்திரரே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்; தேசத்துக் குடிகளோடே கர்த்தருக்கு வழக்கு இருக்கிறது; அதேனென்றால் தேசத்திலே உண்மையும்

*இல்லை, இரக்கமும் இல்லை; தேவனைப்பற்றிய அறிவும் இல்லை.*

*2 பொய்யாணையிட்டு, பொய்சொல்லி, கொலைசெய்து, திருடி, விபசாரம்பண்ணி, மிஞ்சி மிஞ்சிப்போகிறார்கள்; இரத்தப்பழிகளோடே இரத்தப்பழிகள் சேருகிறது.*

*3 இதினிமித்தம் தேசம் புலம்பும்; அதில் குடியிருக்கிற அனைவரோடுங்கூட மிருகஜீவன்களும் ஆகாயத்துப் பறவைகளும் தொய்ந்துபோகும்; கடலின் மச்சங்களும் வாரிக்கொள்ளப்படும். (ஓசியா 4:1-3)*

தேவனுடைய ஜனங்களின் கீழ்ப்படியாமைக்கும் தேசத்தில் நடப்பவைகளுக்கும் இடையில் உள்ள தொடர்பை இங்கே கவனிக்க வேண்டும். தேவனுடைய ஜனம் அன்பையும் உண்மையையும் தங்கள் வாழ்க்கையில் வெளிப்படுத்தாமல் போனபடியால் தேசம் புலம்பும் என கூறுகின்றார். தேவனை அவர்கள் அங்கீகரியாமல் போனபடியால் தேசம் பாழாய்ப் போனது. தேவனுடைய ஜனம் திருடி விபச்சாரம் செய்து கொலை செய்கின்றபடியால் பூமியின் மிருக ஜீவன்கள், ஆகாயத்துப் பறவைகள் மற்றும் கடலிலுள்ள மீன்களும் அழிந்து போகும்.

இந்தப் பகுதியிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் தேவனாகிய கர்த்தர் தன் ஜனத்தை ஆசீர்வதிக்க விரும்புகின்றார் என்பதாகும். இதையே அவர் அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்திலும் செய்கின்றார். அவர் தன் ஜனத்தின் மத்தியில் அசைவாடின பொழுது அவருடைய கிரியைகளுக்குத் தங்களை ஒப்புக் கொடுத்தனர். அப்போஸ்தலருடைய உபதேசத்திற்கும் தடையில்லாத ஐக்கியத்திற்கும், அப்பம் பிட்குதலின் மூலம் கிறிஸ்துவை நினைவு கூறவும், ஜெபத்திற்கும் தங்களை அர்ப்பணித்தார்கள். அன்னியாவும் சப்பிராளும் சபையிடமும் தேவனிடமும் பொய் சொன்னபடியால் அடிபட்டு செத்துப் போனார்கள்.

தேவனுக்கு ஒப்புக் கொடுத்தலும் கீழ்ப்படிதலும், தேவனுடைய ஆசீர்வாதத்தின் வாய்க்காலை திறந்து விடுகின்றது.

நம்முடைய வாழ்க்கையில் பாவம் செய்து கொண்டே தேவனுடைய ஆசீர்வாதம் நமக்கு வேண்டும் என எத்தனை தடவை நாம் விரும்பியுள்ளோம். மத்தேயு 6ம் அதிகாரத்தில் நாம் சரியான தீர்மானமொன்றை எடுக்க வேண்டும் என தெளிவாககூறியுள்ளார்.

இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டை பண்ணுவான்; தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ் செய்ய உங்களால் கூடாது. (மத்தேயு 6:24)

தேவன் நம்மை மற்றவர்களுடன் பங்கு போட்டுக் கொள்ள மாட்டார். முழுமையான கீழ்ப்படிதலையும் அவருக்கு அர்ப்பணம் செய்தலையுமே நம்மிடம் எதிர்பார்க்கின்றார். பாவத்தைக் குறித்து நாம் கவனமாயில்லை யென்றால் தேவனுடைய ஆசீர்வாதத்தைமுழுமையாக அறிந்து கொள்ள முடியாது.

தேவனுடைய ஜனங்கள் தேவனுடைய கிரியைகளுக்கு தங்களை ஒப்புக் கொடுத்து, அவருடைய கட்டளைக்குக் கீழ்ப் படிந்து நடந்த பொழுது தேவன் தம் பிரசன்னத்தை இன்னும் ஆழமான முறையில் வெளிப்படுத்த விருப்பமுள்ளவராக இருந்தார். அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் தேவனுக்கு தங்களை முழுமனதுடன் விட்டுக் கொடுத்தவர்களின் வாழ்க்கையில் நடைபெற்ற தேவனுடைய கிரியைகளைக் குறித்த ஆச்சரியமான படமொன்றை பார்க்கின்றோம். சுற்றிலுமிருந்த ஜனங்கள் கண்டு தங்கள் இருதயத்தை ஆண்டவராகிய இயேசுவுக்கு திறந்து கொடுக்கும் அளவுக்கு தேவனுடைய பிரசன்னம் அதிக வல்லமையுடையதாக இருந்தது. இன்றைய

நாட்களில் சுவிசேஷம் பரவுவதற்கான வல்லமையுள்ள கருவி, ஒரு கிறிஸ்தவன் தேவனுக்குக் கீழ்ப்படிந்து தன்னை ஒப்புக் கொடுப்பதைத் தவிர வேறொன்றுமில்லை. இன்று உலகம் சபையைப் பார்க்கும் பொழுது அங்கே நடப்பவைகளைக் கவனிக்கும் போது சபையுடன் எந்த தொடர்பையும் வைத்துக் கொள்ள அவர்கள் விரும்புவதில்லை. நேர்மையும் தேவபக்தியுமுள்ள விசுவாசிகளின் வாழ்க்கையில் தேவனுடைய வல்லமை செயல்படுவதை அவர்களால் பார்க்க முடியாதிருப்பதே இதற்கான காரணமாகும். உபதேசத்தையும் பாரம்பரிய செயல்களையும் தவிர வேறொன்றையும் அவர்களால் பார்க்க முடியவில்லை. விசுவாசிகள் தேவனுக்கு கீழ்ப்படியாமலும் தங்களை தேவனுக்கு ஒப்புக் கொடுக்காமலும் வாழுவதை அவர்கள் காண்கின்றார்கள்.

உலகத்தில் அவர்கள் காண்கின்ற பாவங்கள் சபைக்குள்ளும் இருப்பதை அவர்கள் காண்கின்றார்கள். சபையின் ஆலோசனைக் கூட்டங்கள் வாக்குவாதத்தில் முடிவடைவதை அவர்கள் காண்கின்றார்களை. விசுவாசிகள் மத்தியில் பிரிவினைகளை அவர்கள் காண்கின்றார்கள். தேவனுடைய வல்லமையை குறைந்த அளவிலேயே தேவ ஜனங்களின் வாழ்க்கையில் அவர்களால் காண முடிகின்றது.

சிறைச்சாலை ஊழியத்தைச் செய்து வரும் ஒரு விசுவாசி யிடம் ஒருநாள் நான் பேச சந்தர்ப்பம் கிடைத்தது. சிறைக்கைதி ஒருவர் ஆண்டவராகிய இயேசுவை அறிந்து கொள்ளும் போது அவருக்குள் கிறிஸ்துவைக் குறித்து ஏற்படும் உற்சாகத்தை ஒரு சராசரி சபையால் கையாள முடியவில்லை என்பதே அவருடைய இந்த ஊழியத்தில் அவருக்கிருந்த மிகப் பெரிய ஏமாற்றம் என்று அவர் சொன்னார். அவர்களில் அநேகர் அவர்கள் சென்ற சபையுடன் ஒத்துப் போவதற்காக பின்வாங்க வேண்டிய சூழ்நிலை உண்டானதாக அவர் சொன்னார். சபையைக் குறித்த எவ்வளவு வேதனையான படம் இது!

முற்றிலும் கீழ்ப்படிவதைப் பார்க்கிலும் குறைவானவைகளில் நாம் திருப்தியடைந்து கொள்கின்றோம். பாவத்துடன் ஒத்துப் போவதற்காக நாம் நம்முடைய தரத்தைக் குறைத்துக் கொள்கின்றோம். முற்றிலும் கீழ்ப்படிந்து நடப்பதற்கு தேவையான தியாகங்களை செய்ய நமக்கு விருப்பமில்லை. பாவத்தை சரிப்படுத்துவதைப் பார்க்கிலும் அதை அப்படியே மூடி மறைத்துவிடவே விரும்புகின்றோம். அப்படியிருப்போமானால் நாம் தேவனுடைய ஆசீர்வாதங்களை எதிர்பார்க்கவும் கூடாது.

ஆதி சபையிலே தேவனுடைய ஆசீர்வாதங்களை வெளிப்படையாக பார்க்க முடிந்தது. அந்நாட்களில் தேவன் விசேஷமான வித்த்தில் தம் ஜனத்தின் மேல் அசைவாடினார். அவருடைய வார்த்தை மற்றும் ஐக்கியத்தை வாஞ்சிக்க அவர்களை உற்சாகப்படுத்தினார்.

தேவனுடைய ஜனங்கள் அதற்காக தங்களை ஒப்புக்கொடுத்து தங்களுடைய எல்லாவற்றையும் முழுமனதுடன் தியாகம் செய்தார்கள். விசுவாசிகள் கிறிஸ்துவுக்காகவும் சக விசுவாசிகளுக்காகவும் கொடுத்த அர்ப்பணிப்பில் அவர்களைச் சுற்றியிருந்த உலகம் பார்த்து வியக்குமளவிற்கு தேவனுடைய பிரசன்னம் வெளிப்பட்டது. அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்திலுள்ள சபையில் மிகவும் உண்மையான பல காரியங்கள் நடைபெற்றது. அவர்கள் மத்தியில் காணப்பட்ட கிறிஸ்துவின் மெய்மை சபைக்குள் பலரை இழுத்து வந்தது. ஜனங்கள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து கிறிஸ்தவர்களிடம் இருந்த ஏதோ ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் அளவிற்கு அந்த பிரசன்னமும் அந்த பிரசன்னத்தில் வெளிப்பட்ட அழகும் அதிகமாக இருந்தது. யூத சமுதாயத்தினரால் இவர்கள் வெறுத்து ஒதுக்கப்பட்டார்கள். ஆனாலும் அவர்களுடைய அந்தஸ்து, அவர்களுடைய வேலை, மற்றும் அவர்களுடைய வாழ்க்கை போன்ற அனைத்தையும் பணயம் வைக்கக்கூடிய அளவிற்கு கிறிஸ்துவின் அழகு அவருடைய ஜனத்தில்

வெளிப்பட்டது. அதற்கு எதிர்த்து நிற்க யாராலும் முடியவில்லை. ஒவ்வொரு நாளும் ஆண்களும் பெண்களும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு தங்கள் வாழ்க்கையை ஒப்புக் கொடுத்து அவருடைய நாமத்தை தொழுது கொள்ள விசுவாசிகளுடன் இணைந்து கொண்டிருந்தார்கள்.

உங்கள் சமுதாயத்தில் ஒரு செல்வாக்கைப் பெற்றுக் கொள்ள விரும்புகின்றீர்களா? உங்கள் வாழ்க்கையிலும் உங்கள் சபையிலும் கிறிஸ்துவின் வல்லமை வெளிப்படுவதை காண விரும்புகின்றீர்களா? தேவ ஆசீர்வாதம் ஊற்றப்படுவதைக் காண விரும்புகின்றீர்களா? இதுவே இன்று உங்களுக்கான ஆண்டவருடைய விருப்பமுமாகும். ஆண்டவருக்குக் கீழ்ப்படிந்து ஒப்புக் கொடுத்தலுடன் நடக்கக் கற்றுக் கொள்வதே இந்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதற்கான இரகசியமாகும். அப்போஸ்தர் 2ல் காணப்படும் சபை நான்கு முக்கிய கொள்கைகளுக்கு தங்களை அர்ப்பணித்திருந்தது.

முதலாவதாக. அவர்கள் தேவனுடைய வார்த்தையைக் கற்றுக் கொள்ளவும் அதை தங்கள் வாழ்க்கையில் நடைமுறைப் படுத்தவும் தங்களை அர்ப்பணித்திருந்தார்கள். ஒவ்வொரு நாளும் தேவனுடைய வார்த்தையைக் கேட்கவும் அதைக் கற்றுக் கொள்ளவும் தேவாலயத்திலே நேரம் செலவிட்டார்கள். தேவனுடைய நோக்கத்திற்கு ஏற்றவாறு தங்கள் வாழ்க்கை அமைந்திருக்க வேண்டுமென விரும்பினார்கள்.

இரண்டாவதாக தங்கள் சக விசுவாசிகளுடன் தடையில்லாத ஐக்கியத்தை வைத்திருப்பதற்கு அர்ப்பணித்திருந்தார்கள். தங்கள் சகோதர சகோதரிகளுடன் சரியான உறவில் இல்லாவிட்டால் அது தேவனுடனான தங்கள் உறவைப் பாதிக்கும் என அறிந்திருந்தார்கள். கிறிஸ்துவுக்குள் தங்கள் சகோதர சகோதரிகளிடம் உள்ள உறவு உடைக்கப்பட்டிருப்பதனால் அல்லது தேவபக்தியற்ற மனநிலைமைகளுடன் இருப்பதனால்

தேவனுடைய வேலை தடைபடக்கூடாது என்பதை நிச்சயித்துக் கொள்ள மிகுந்த கவனமுள்ளவர்களாயிருந்தார்கள்.

மூன்றாவதாக அப்போஸ்தலர் 2ல் காணப்படும் விசுவாசிகள் தங்கள் இருதயத்திலும் எண்ணங்களிலும் கிறிஸ்துவின் கிரியைகளை மையமாகக் கொண்டிருக்க அர்ப்பணித்திருந்தார்கள். அப்பம் பிட்குதலைக் கொண்டாடுவதன் மூலமாக கிறிஸ்து அவர்களுக்காக சிலுவையில் செய்தவைகளை கிரமமாக ஞாபகப்படுத்திக் கொண்டனர். இதைச் செய்வதன் மூலமாக இயேசு அவர்களுக்காக செலுத்திய விலைக் கிரயத்தை ஞாபகப்படுத்திக் கொண்டனர். அப்பம் பிட்குதலைக் கொண்டாடுவதன் மூலமாக என்ன விலை கொடுக்க நேர்ந்தாலும் இயேசுவைப் பின்பற்றுவோம் என்பதற்கு தங்களை ஒப்புக் கொடுத்தார்கள்.

கடைசியாக அப்போஸ்தலர் 2இலுள்ள சபை ஜெபத்திற்கு தங்களை அர்ப்பணித்தார்கள். தாங்கள் செய்த எல்லாவற்றையும் தேவனுக்கு ஒப்புக் கொடுத்து தேவனுடைய சித்தத்தையும் அவருடைய ஆசீர்வாதங்களையும் தேடினார்கள். அவர்கள் தங்கள் சுய ஞானத்திலும் பெலத்திலும் தங்கள் வேலைகளை செய்து முடிக்க விரும்பவில்லை. பதிலாக தங்கள் வழிகளெல்லாவற்றிலும் தேவனைத் தேடினார்கள். அவர் சித்தம் நிறைவேற வேண்டுமென்று விரும்பினார்கள். அவர்கள் தங்களை நம்பாமல் தேவனுடைய வழிநடத்துதலுக்கு ஒப்புக்கொடுத்தார்கள்.

இவ்விதமான கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிதலும் ஒப்புக் கொடுத்தலுமுள்ள சூழ்நிலை ஏற்படும் பொழுது தேவனுடைய ஆவியானவர்இன்னுமதிகமாக செயல்பட இடமளிக்கின்றது. இதன் மூலம் விசுவாசிகள் பெலப்பட்டார்கள். அவிசுவாசிகள் இயேசுவிடம் ஈர்க்கப்பட்டார்கள்.

அப்போஸ்தலர் 2 இலுள்ள சபையின் வளர்ச்சி தேவன்

தம் ஜனத்தின் தனிப்பட்ட வாழ்க்கையில் செய்தவைகளின் மூலம் ஆரம்பிக்கப்பட்டது. அவர்கள் தங்களை தேவனுக்கு ஒப்புக் கொடுத்த பொழுது அவர்கள் தேவனுடைய வல்லமை யினால் மறுரூபமாக்கப்பட்டார்கள். அவர்கள் வாழ்க்கை கிறிஸ்துவின் வெளிச்சத்தினால் பிரகாசிப்பிக்கப்பட்டு மற்றவர்களுக்கு வெளிச்சத்தைக் கொடுத்தது. அவர்கள் சென்ற இடங்களிலெல்லாம் கிறிஸ்துவின் சுகந்த வாசனை அவர்கள் மூலம் வீசியது. இது அவிசுவாசிகளைக் கவர்ந்தது.

அந்த அவிசுவாசிகள் கிறிஸ்துவின் ஜனத்தின் மூலம் கிறிஸ்துவை கண்டார்கள். அவர்கள் பெற்றுக் கொள்ள விரும்பியதைப் பெற்றுக் கொண்டார்கள். இப்படிப்பட்ட வார்த்தையை உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையைக் குறித்தும் சாட்சியாகக் கேட்க முடியுமா? உங்கள் சபையைக் குறித்தும் இப்படிச் சொல்லக் கூடுமா? இன்றுதேவன் தம் ஜனத்தின் மத்தியில் செயல்பட அவர்களின் ஒப்புக் கொடுத்தலை புதுப்பித்துக் கொள்வது எவ்வளவு அவசியமாக உள்ளது!

தேவனுடைய அசைவு அவ்வளவு இலகுவானதாக இருக்காது. அதற்கு மிகப்பெரிய தியாகமும் பெருமை மற்றும் பாவம் சரிப்படுத்தப்படலும் தேவை. சிலர் இவ்வாறு தங்களை ஒப்புக் கொடுக்க விருப்பமில்லாமல் இருப்பார்கள். ஆனால் இன்னும் சிலர் அப்படி ஒப்புக் கொடுப்பார்கள், அப்பொழுது அவர்கள் வாழ்க்கை நிரந்தர மாற்றங்களுக்குள்ளாகும். அப்படிப்பட்டவர்கள் தங்கள் சமுதாயத்தில் கிறிஸ்துவின் அழகைப் பிரதிபலித்து அவருடைய பிரசன்னத்தை ஆச்சரியமான முறையில் அறிந்து கொள்வார்கள்.

தேவனுக்கு ஒப்புக் கொடுத்து வாழ தேவன் நமக்கு கிருபை செய்வாராக. நம் மூலம் அநேகர் இயேசுவின் அழகைக் கண்டு அவரிடம் வருவதற்கு அது ஒரு வழியாக அமையட்டும்.

## கவனத்திற்கு:

*# ஆதி சபையின் வளர்ச்சிக்கான இரகசியம் என்ன? அதில் தேவனுடைய பங்கு என்ன? விசுவாசியின் பங்கு என்ன?*

*# பாவம் ஆசீர்வாதத்தை எப்படி தடுக்கின்றது? கீழ்ப்படிதலுக்கும் ஆசீர்வாதத்திற்கும் இடையிலுள்ள தொடர்பு என்ன?*

*இன்றைய சபைகளின் நிலைமையை எப்படி விளக்குவீர்கள்? தேவனுடைய ஜனம் தங்கள் பாவங்களை சரிப்படுத்தி தேவனுக்கு முற்றிலும் தங்களை ஒப்புக் கொடுக்கும் போது தேவன் என்ன செய்வாரென்று நினைக்கின்றீர்கள்?*

*# உங்கள் வாழ்க்கையில் மற்றும் உங்கள் சபை ஐக்கியத்தின் வாழ்க்கையில் காணப்படுபவைகளை பார்த்து ஒரு அவிசுவாசி கவரப்பட்டு இயேசுவிடம் வருகின்றாரா? அவ்வாறு அவர்கள் கிறிஸ்துவிடம் வருவதற்கு குறிப்பாக எதைக் காண்கின்றார்கள்?*

## ஜெபத்திற்கு:

*# தேவனுடைய வேலைக்குதடையாக உங்கள் வாழ்க்கையில் ஏதேனும் காணப்படுகின்றதா என கேட்டு ஜெபியுங்கள்.*

*# தேவன் உங்களையும், உங்கள்சபையையும் ஆசீர்வதித்து அவருடைய பிரசன்னத்தை இன்னும் உண்மையானதாக மாற்ற விரும்புவதற்காக அவருக்கு நன்றி சொல்லுங்கள். அந்த ஆசீர்வாதங்களை தடை பண்ணுபவைகளை தேவன் மன்னிக்கும் படியாக ஜெபியுங்கள்.*

*# தேவனுக்கும் அவருடைய நோக்கத்திற்கும் உங்களை ஒப்புக் கொடுக்க அவருடைய கிருபைக்காக ஜெபியுங்கள். உங்களுக்கு அவர் இன்னும் நிஜமானவராக இருக்கவும் அது உங்களைச் சுற்றியுள்ளவர்களுக்கு சாட்சியாக இருக்கவும் ஜெபியுங்கள்.*